DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H Selvanayagam Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial
Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198


MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
சிந்திக்கும் தமிழ் உலகின் உலகில் எந்திக்கும் கதிர் வீச்சு
$1.00
416-752-1524
416-752-6703

உதயம் 1309 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday May 7, 2021

# ‘தமிழின அழிப்பு அறிவியற் கிழமை' எனும் 104வது சட்டமூலம் ஒன்ராறியோ சட்டமன்றத்தில் நிறைவேறியது

## இலங்கையில் தமிழின அழிப்பு நடைபெற்றுள்ளதை உலகிலேயே முதன்முதலில் ஒன்ராறியோ மாநிலம் ஏற்றுக்கொண்டது



நேற்று மே 6, 2021 வியாழக்கிழமையன்று ஸ்காபாரோ - ரூஜ் பார்க் தொகுதிக்கான ஒன்ராறியோ மாநில சட்டமன்றத்தின் உறுப்பினர் விஜய் தணிகாசலம், ஒன்ராறியோ சட்டமன்றத்தில் தமிழின அழிப்பு தொடர்பான அறிவியற் கிழமைக்கான சட்டமூலத்தை மூன்றாவது வாசிப்புக்கு கொண்டுவந்திருந்தார். இந்நடைமுறையினை அடுத்து மேற்படி சட்டமூலம் ஒன்ராறியோ சட்டமன்றத்தில் எதிர்ப்புக்கள் எதுவுமின்றி நிறைவேற்றப்பட்டது.

தமிழ் மக்கள் மீது இன அழிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்தும் தீர்மானங்கள் இதற்கு முன்னர் இலங்கையின் வட மாகாண சபையிலும், தமிழ்நாடு சட்டசபையில் முன்னாள் முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா அவர்களாலும் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும், தென்னாசியாவுக்கு வெளியே இவ்வாறு ஒரு நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ள முதலாவது தீர்மானம் இதுவாகும். இன்னும் குறிப்பிட்டுச் சொல்வதானால், தமிழின அழிப்பு இலங்கையில் நடைபெற்றுள்ளது என்பதை அயங்கீகரித்து அதனை சட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது இதுவே உலகின் முத-லாவது வரலாற்று நிகழ்வாகும். இது ஒன்ராறியோவில் வாழும் 350,000 இற்கும் அதிகமான தமிழ் மக்களுக்குக் கிடைத்த வரலாற்று வெற்றியாகும். மேற்படி 104 எனும் சட்டமூலமானது, இலங்கையில் தமிழ் மக்கள் மீது இன அழிப்பு நடவடிக்கை கட்டவிழ்த்து விடப்பட்டது என்பதை அங்கீகரிப்பதுடன், அதில் கொல்லப்பட்ட உயிர்களுக்கு மதிப்பளிக்கும் அதே-வேளையில், பாதிப்புக்குள்ளாகி வாழும் மக்களுக்கு நம்பிக்கையையும் ஊட்டுகிறது. அத்துடன் துன்புறுத்தப்பட்ட தமிழ் மக்களை ஆற்றும் ஒரு வழியாக இருக்கும் எனவும் இது கருதப்படுகின்றது.



”இது கனடாவில் மட்டுமல்ல, உலகெங்கிலும் வாழும் தமிழர்கள் அனைவருக்கும் ஒரு மிக முக்கியமான வரலாற்றுப் படிக்கல்லாகும். மேலும், நீங்கள் வழங்கிய பெரும் ஆதரவையிட்டு தமிழ் சமூகத்திற்கு மீண்டும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்ராறியோவில் தமிழின அழிப்பு தொடர்பான கல்வி கற்பிப்பதற்கு ஏதுவான சட்டமொன்றை நாங்கள் இணைந்து நிறைவேற்றியுள்ளோம்” என மேற்படி சட்டமூலம் 104ஐ கொண்டுவந்தவரும், ஸ்காபரோ - ரூஜ் பார்க் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருமான விஜய் தணிகாசலம் தெரிவித்தார்.

”தமிழின அழிப்பை தங்கள் சொந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துரைப்பதிலும், ஊடகங்களில் எடுத்துரைத்து அனைவரையும் ஏற்று அதனை அங்கீகரிக்கச் செய்வதிலும், சட்டமூலம் 104இன் தேவையை விளக்குவதிலும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர்” என தமிழ் இளையோர் அமைப்பின் பொறுப்பாளர் சகான் சோமஸ்கந்தராஜா தெரிவித்தார். இதன்போது கடிதங்கள் எழுதுவது முதற்கொண்டு, தத்தமது பகுதி சட்டமன்ற உறுப்பினர்களை நேரில் சந்தித்து தமிழின அழிப்பு தொடர்பாகவும், அது எப்படித் தம்மைப் பாதித்துள்ளது என்ற தகவல்களையும் ஒவ்வொரு இளையவர்களும் எவ்வாறு எடுத்துரைத்து இதற்கு வலுச் சேர்த்திருந்தனர் என்பது தொடர்பாகவும் அவர் இத்தருணத்தில் பகிர்ந்துகொண்டார்.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

# Your census.
# Your community.
# Your future.

Census information is used to plan programs and services in your community.

**Complete your census today—it's easy and completely confidential!**



**www.census.gc.ca**

Statistics Canada Statistique Canada

Canada

# உதயன் கதிரோட்டம்

# தந்தை செய்த தவறுக்கு தனயன் பிராயச்சித்தம் ஆற்ற வேண்டும்

யார் தந்தை? யார் தனயன்? என்ற கேள்விகள் வாராந்தம் இந்த பக்கத்தைப் படிப்பவர்களுக்கு தோன்றலாம். நேரடியாகவே கதிரோட்டத்திற்குள் செல்வோம் அன்பர்களே!.

ஈழத் தமிழர்கள், தங்கள் தாய்த் தமிழகம் என்று பாசத்தோடு அழைத்து மகிழ்கின்ற தமிழ்நாட்டின் சட்ட சபைக்கான தேர்தல் நடந்து முடிந்து இன்று புதிய முதல்வராக முதற் தடவையாக கலைஞர் அவர்களின் மகன் 'தளபதி' ஸ்டாலின் அவர்கள் பதவியேற்கின்றார்.

இதுவரையிலும் இங்கு படித்த சில வசனங்களிலிருந்து யார் அந்த 'தந்தை' யார் அவரது 'தனயன்' என்பது ஓரளவிற்கு புரிந்திருக்க வேண்டும். இந்த வாரத் தலையகத்திற்கு இந்த தலைப்பு மிகவும் பொறுத்தமானது என்பதே எமது கருத்து.

2009ம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற கொடிய யுத்தத்தின் வலிகள் வடுக்கள், இழப்புக்கள் அழிவுகள் அனைத்தையும் கடந்து, நாட்கள் ஓடிக்கொண்டிருக்கையில் எமது பிரதம ஆசிரியர் தமிழ்நாட்டுக்கு மற்றுமொரு பயணத்தை மேற்கொண்டார். வருடத்திற்கு குறைந்தது இரண்டு தடவைகளாவது அங்கு பயணிப்பது அவருக்கு பத்திரிகைக்கும் அவசியமான ஒன்றாக இருந்ததால் அந்த பயணமும் அவரைச் சென்னைக்கு அழைத்துச் சென்றது.

வழமைபோல ஏற்கெனவே திட்டமிட்ட சந்திப்புக்கள், நேர்காணல்கள், கலந்துரையாடல்கள் என நாட்கள் நகர்ந்து செல்கையில் 'தமிழக அரசியல்' என்னும் வாரச் சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினர் ஒருவர் எமது ஆசிரியரை பேட்டி காண விரும்புவதாக சென்னை நண்பர் ஒருவர் தெரிவித்தார். அதற்கான நேரம் தீர்மானிக்கப்பெற்று, இளைஞரான அந்த ஆசிரியர் குழு உறுப்பினர் எமது ஆசிரியரைச் சந்தித்தார்.

இருவரும், முதற் தடவையாக சந்தித்த மரியாதையின் நிமித்தம் உரையாடலை நடத்திய பின்னர் சில கேள்விகளின் பின்னர் மிகவும் உணர்ச்சி வசப்பட்டவராக பேட்டி காண வந்த அன்பர் திடீரென ஒரு கேள்வியை முன்வைத்தார்.

அதுவரையும் எமது ஆசிரியரின் கனடிய பத்திரிகைத் துறைப் பயணம், கலை இலக்கிய முயற்சிகள் மற்றும் ஈழத் தமிழர் அரசியல் என்ற பகுதிக்கு கேள்விகளை கேட்ட அவர், 2009 இறுதிப் போர் அல்லது இனப்படுகொலைகள் விடயமாகவும் கேள்விகளை முன்வைத்திருந்தார். அப்போது கலைஞர் கருணாநிதி அவர்கள் சென்னையில உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இனப்படுகொலைகள் இடம்பெற்றபோது அதில் இந்தியாவின் பங்களிப்பு தொடர்பான கேள்வியும் அடங்கியிருந்தது. அதற்கு ஆசிரியர் அளித்த பதில்தான் இந்த 'திடீர்க் கேள்வியை" அந்த சஞ்சிகை சார்பில் பேட்டி காணவந்த அன்பருக்கு கேட்கத் தூண்டியதோ, என்னவோ?

அதுவரையிலும் கலைஞர் கருணாநிதி அவர்கள் பற்றி எதுவுமே இடம்பெறாத வகையில் சென்றுகொண்டிருந்த அந்த பேட்டியின் இடையில் அவர் கேட்கின்றார். "கலைஞர் கருணாநிதி அவர்கள் மீது ஈழத் தமிழர்களுக்கு அதிகளவில் கோபம் இருக்குமே?" என்றார் கொஞ்சம் பதட்டமான மனநிலையோடு. ஆனால் அதற்கு எவ்வித தாமாதமோ அன்றி தயக்கமோ இன்றி, எமது ஆசிரியர் "ஆமாம்! நிச்சயமாக அவர் மீது கோபம் இருக்கின்றது" என்று பதிலளித்தார். அதைக் கேட்டு விட்டு மேலும் வேகம் நிறைந்தவராக அடுத்த கேள்வியைப் போட்டார் எமது ஆசிரியரை நோக்கி.

" அப்படியானால் அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள் உங்கள் ஈழத் தமிழ் மக்கள்?" இவ்வாறான கேள்விகள் தன்னிடம் கேட்கப்படும் என்று முன்னரே அறிந்திருக்காத நிலையில் எவ்வித தயாரிப்பும் இன்றி எமது ஆசிரியர் அதற்கு நிதானமாக பதிலளித்தார்.

அதற்குக் காரணம் இருந்தது. அவரும் ஈழத் தமிழர்களில் ஒருவர். நாற்பது வருடங்களுக்கு மேலாக தமிழர் அரசியலை அவதானித்தும் அதில் பங்கெடுத்தும் வந்தவர் அவர். எவ்வித தயக்கமோ தாமதமோ இன்றி அதற்கு பதிலளித்தார். அப்போது கருணாநிதி அவர்கள் உயிரோடு இருந்தும், அவரால் இனிமேல் ஈழத்தமிழருக்கு நன்மை எதுவும் கிடைத்துவிடப்போவதில்லை என்பதையும் கலைஞருக்கு அடுத்ததாக வரிசையில் இருப்பவர் யார் என்பதையும் மனதில் தீர்மானித்த வண்ணம் தைரியமாகவும் உறுதியாகவும் பதிலளித்தார் எமது ஆசிரியர்.

'தந்தை செய்த தவறுக்கு தனயனே பிராயச்சித்தம் ஆற்ற வேண்டும்" என்றார் எமது ஆசிரியர். தொடர்ந்து தன்னிடம் கேள்வி கேட்டவரின் முகத்தை ஒரு தடவை கூர்ந்து கவனித்தார். தனது பதில்கள் அவருக்கு நன்கு பிடித்துப் போயின என்று அவரது முகம் பதிலளித்தது.

சில நாட்களின் பின்னர் எமது ஆசிரியர் கனடா திரும்பினார். இருவாரங்கள் கடந்து அந்த பேட்டி முழுமையாக வார இதழில் பிரசுரமாகியிருந்ததோடு மட்டுமல்ல, அட்டைப் படத்திலும் அந்தப் பேட்டியின் தலைப்பாக "தந்தை செய்த தவறுக்கு தனயன் பிராயச்சித்தம் செய்ய வேண்டும்" என தடித்த எழுத்துக்களில் காணப்பட்டது. அந்தப் பேட்டி பின்னர் எமது பத்திரிகையிலும் மறுபிரசுரம் செய்யப்பட்டிருந்தது

இன்றைய கதிரோட்டத்தின் தலைப்பாக தந்தை-தனயன் விளங்கும் அதே நாளில் சென்னையில் கலைஞர் கருணாநிதி அவர்களின் தனயன் ஸ்டாலின் தமிழ்நாட்டின் முதல்வராக பதவியேற்கின்றார் தனது அமைச்சர்கள் சகிதம்.

ஆனால் அன்று சென்னையில் இடம்பெற்ற ஒரு பேட்டியின் போது, அந்த சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினரும் எமது ஆசிரியரும் கலந்துரையாடிய பல விடயங்கள் நடந்தேறிய வண்ணம் உள்ளன. போரினால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் கீழ் நிலைக்குள்ளாகி வாடுகின்றார்கள், வருந்துகின்றார்கள். ஆனால் போரினால் எவ்விதமாக பாதிக்கப்படாதவர்களும் அரசியல்வாதிகளும் பாதிப்படைந்த மக்களுக்கு கை தராமல் அவர்கள் பெயரால் அரசியல் செய்து கொண்டிருக்கின்றார்கள். இது இலங்கையில் தமிழ் அரசியல்வாதிகள் மத்தியில் தொடர்கின்றது.வ

தமிழக சட்ட சபைக்கான தேர்தல் நடைபெற்று திமுக வெற்றி வாகை சூடிய பின்னர், தமிழ்நாட்டில் திமுக வோடு கூட்டணி அமைத்தவர்கள் தங்கள் எதிர்காலம் என்னவாகப் போகின்றது என்று யோசித்துக் கொண்டிருக்கின்றார்கள். விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம ஆகிய கட்சிகள் கூட்டணியில் இணைந்தது வெறும் நான்கு உறுப்பினர்களைப் பெறுவதற்காக மட்டும் தானா? என்று யோசித்த வண்ணம் உள்ளார்களாம்.

ஆனாலும் காங்கிரஸ்-திமுக கூட்டணியின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றவற்றை இலங்கையில் மாவை சேனாதிராஜா, மனோ கணேசன் போன்றவர்கள் மறந்தது போன்று அரசியல் செய்ய நினைத்தாலும், பாதிக்கப்பட்டவர்கள் அவற்றை மறந்து போகமாட்டார்கள். ஆனால் தமிழ்நாட்டின் புதிய முதல்வரின் அடுத்த நடவடிக்கைகளை உலகெங்கும் வாழும் தமிழர்கள் காண்பதற்கு காத்திருக்கின்றார்கள்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# ரொறன்ரோவில் தமிழுக்கு இருக்கை நிஜமாகிய விடயம் கனடிய நாடாளுமன்றத்தில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது




தமிழ் மொழியின் இலக்கிய வளம் உலக அரங்கிற்கு எடுத்துச் செல்லப்படவேண்டும். அதற்கு உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழிக்கு இருக்கை அமைக்கப்பட வேண்டும் என்கிற உயரிய நோக்கத்துடன், அமெரிக்காவில் தொடங்கப்பட்டது.

தமிழ் இருக்கை அமைப்பு **(Tamil Chair Inc).** ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் தமிழுக்கு இருக்கை அமைப்பதை தன் முதல் இலக்காகக் கைகொண்டது இந்த அமைப்பு. அதற்கு, 6 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஆதார நிதியாகப் பல்கலைக்கழகத்துக்குச் செலுத்த வேண்டியது அவசியம்.

தமிழ் இருக்கை அமைப்பின் முதன்மை இயக்குநர்களான மருத்துவர் விஜய் ஜானகிராமன், மருத்துவர் சுந்தரேசன் சம்பந்தம் ஆகிய இருவரும் தலா அரை மில்லியன் டொலர்களைத் தொடக்க நன்கொடையாக வழங்கி ஹவார்ட் தமிழ் இருக்கை அமைக்கும் பணியைத் தொடங்கிவைத்தனர்.

ஹவார்ட் தமிழ் இருக்கை அமைக்கப்பட்டதன் தொடர்ச்சியாக, 5 இலட்சம் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் கனடா நாட்டின் புகழ்பெற்ற ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்கும் பணி, இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்டது. அதற்குத் தேவைப்படும் 3 மில்லியன் டொலர்கள் நிதியைத் திரட்டித் தற்போது தன்னுடைய இரண்டாம் இலக்கிலும் வெற்றியடைந்துவிட்டது கனடியத் தமிழ்ச் சமூகம். இந்த முயற்சியானது, தமிழ் இருக்கை அமைப்பும், கனடியத் தமிழர் பேரவையும் இணைந்து எடுத்த கூட்டுச் செயல்திட்டமாகும்.

இந்த முயற்சிக்கு கனடா, இலங்கை மட்டுமல்லாது, உலகத்தின் பல பாகங்களில் வசிக்கும் தமிழர்களிடமிருந்து நன்கொடைகள் வியப்பூட்டும் வகையில் வந்து குவிந்தன. 4000 உலகத் தமிழர்களும், தமிழ் அமைப்புகளும், ஊர்ச் சங்கங்களும், முதியோரும் சிறுவர் சிறுமியரும் மாணவ மாணவியர் கூட ஆர்வத்தோடு பங்குபெற்று ரொறன்ரோ தமிழ் இருக்கையின் வெற்றிக்கு உதவி இருக்கிறார்கள்.

தற்போது, தந்தை செல்வா அறக்கட்டளை வழங்கிய 2.5 இலட்ச டாலர்கள், தமிழக அரசு வழங்கிய 1 கோடி ரூபாய், திமுக வழங்கிய 10 இலட்சம் ரூபாய் ஆகியன, ரொறன்ரோ தமிழ் இருக்கை அமைக்கத் தேவைப்படும் ஆதார நிதி இலக்கை எட்ட வேண்டிய இறுதிக்கட்டத்தில் இணைந்துகொள்ள, மூன்று மில்லியன் கனடிய டாலர்களை துரிதமாக திரட்ட உதவின.

தமிழர்களுக்கும் தமிழுக்கும் முக்கியத்துவம் அளித்து 'தமிழ் மரபுத் திங்கள்' எனத் தை மாதத்தைக் கனடா அரசாங்கமே கொண்டாடி வருகிறது. அந்நாட்டினுடைய உயரிய பல்கலைக்கழகமான ரொறன்ரோவில் தமிழுக்கு இருக்கை அமையவிருப்பது கனடா நாட்டின் நாடாளுமன்றத்தில் சமீபத்தில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் ஸ்காபுரோ வளாகத்தின் தலைவர் விஸ்டம் டெட்டி, இந்த முயற்சியில் தமிழ்ச் சமூகம் ஒன்றாக இணைந்து அர்ப்பணிப்புடனும், விடாமுயற்சியுடனும் செயல்பட்டு வென்று காட்டியிருப்பதை வெகுவாகப் பாராட்டியிருக்கிறார் என்பதையும் உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் நன்கு கவனித்து பெருமை கொள்ள வேண்டும்.

BASEMENT FOR RENT


FINCH & MORNINGSIDE

2 Bedroom bsmt for rent.
Sep entrance, laundry, kitchen
Close to TTC,
Working couple preferred
Avail: May 01/2021

Tel: (647) 581-2225

LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial,
Industrial Elimination of Roaches & Mice

RANJAN: (416) 464-2415

COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN:
(416) 894-6244

ROOM FOR RENT

Kennedy / Eglinton

2 அறை கொண்ட தொடர்மாடிக் கட்டடத்தில் **(apartment)** இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு.
NO smoking, alcohol or pets.
1 person: $900 / 2 people: $600
Available Immediately

A1Canada, Rental Services
Mr. Ratha Francis:
(416) 752-4444
Cell: (416) 857-5252

# மட்டு மாவட்டத்தில் கால்களை இழந்தவர்களுக்கு செயற்கை கால்களை பொருத்தும் உலகெங்கும் உள்ள தமிழர்கள் முன்வரவேண்டும்



மட்டக்களப்பு மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நூற்றுக்கணக்கானவர்கள் கடந்த பல வருடங்களாக பல இன்னல்களைத் தாங்கிக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். இவ்வாறான மாற்றுத்திறனாளின் வாழ்வாதாரத்திற்கு மேலும் உதவ வேண்டும் என்பது எமது குறிக்கோளாக உள்ளது. அதற்கு மேலாக, எஞ்சியுள்ள மாற்றுத்திறனாளிகளில், கால்களை இழந்தவர்களுக்கும் செயற்கை கால்களை பொருத்துவதற்கு தாயகத்திலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் உள்ள பணம் படைத்தவர்கள் முன்வரவேண்டும்.

மேலும், எமது மட்டக்களப்பு மாவட்டத்திலே பல்வேறு காரணங்களால் சுமார் 859 பேரின் கால்கள் பாதிப்புற்ற மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். அதில் 192 பேர் ஒருகால் அல்லது இரண்டு, கால்களையும் இழந்துள்ளனர். இவர்களுள் 14 பேருக்கு மாத்திரம் தான் செயற்கைக் கால்களை வழங்கியுள்ளோம்.

மிகுதியாகவுள்ள கால்களை இழந்த மாற்றுத்திறனாளிகளுக்கு, செயற்கைக் கால்களை வேண்டியுள்ளது என இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளைத் தலைவர் த.வசந்தராசா தெரிவித்துள்ளார்.

டென்மார்க் நாட்டில் அமைந்துள்ள வாணி சமூக பொருளாதார சுயமேம்பாட்டு நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் ஆதரவுடன், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட கடந்த காலங்களில் பல்வெறு காரணங்களினால் கால்களை இழந்த 14 மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை கால்களை வழங்கி வைக்கும் நிகழ்வு மட்டக்களப்பு வெல்லாவெளியில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் புதன்கிழமை 28-04-2021 அன்று இடம்பெற்றது.



போரதீவுப்பற்று பிரதேச கதிரவன் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் செயலாளர் நா. பிரதீபராஜா தலைமையில் சுகாதார விதி முறைகளுக்கமைவாக நடைபெற்ற இந்நிகழ்வில், போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் ஆர். இராகுலநாயகி மற்றும் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மாற்றுத்திறனாளிகளுக்கு புதிதாக செயற்கைக் கால்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே தலைவர் த.வசந்தராசா இவ்வாறு தெரிவித்தார்.

தலைவர் த.வசந்தராசா மேலும் தெரிவிக்கையில், “தற்போது கம்போடியாவின் தரத்துக்கு ஏற்ப செயற்கை கால்களை, மன்னாரில் அமைந்துள்ள வாழ்வோதையம் அமைப்பினர் இந்த செயற்கை கால்களை தயாரித்துத் தந்துள்ளார்கள். இந்த நல்ல காரியத்திற்கு டென்மார்க்கில் அமைந்துள்ள வாணி எனும் சகோதரி நிதி உதவி செய்துள்ளார்.” என்று தெரிவித்தார்.

# ஈழத்தமிழர்களாகிய நாம் ஆர்மேனியர்களுடன் இணைந்து கொண்டாடுகிறோம் என்கிறது நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்!

ஆர்மேனிய இனவழிப்பை அங்கீகரித்த அதிபர் பைடன் தலைமையிலான அமெரிக்க அரசாங்கத்தினை பாராட்டுவதாக தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், ஈழத்தமிழர்களாகிய நாம் ஆர்மேனியர்களுடன் தோழமை கொண்டு நிற்கிறோம் எனத் தெரிவித்துள்ளது.

1915ம் ஆண்டு இளவேனிற்காலம் தொடங்கி 1916 இலையுதிர் காலம் வரையிலும் ஆர்மேனியர்கள் மீது படுகொலைகள், புலப்பெயர்ச்சி, பட்டினி, மோசமான நடத்துமுறை ஆகிய வழிகளில் 1.5 மில்லியன் ஆர்மேனியர்கள் மூர்க்கமான விதத்தில் நேரடியாகவே அழித்தொழிக்கப்பட்டார்கள்.

மேலும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது, அமெரிக்க அரசு ஆர்மேனிய இனவழிப்பை அங்கீகரித்திருப்பது எப்போதோ நடந்திருக்க வேண்டிய ஒன்று. இந்த அங்கீகாரத்திற்கு பெரிதும் காரணம் புலம்பெயர் ஆர்மேனியர்களது அயராச் செயல்முனைப்புதான். புவிசார் அரசியல் பின்விளைவுகள் பாதகமாக இருந்த போதிலும் அதிபர் பைடன் அரசினர் தமது வெளியுறவுக் கொள்கையில், மனித உரிமைகளை மையப்படுத்தியுள்ள அறத் துணிவை நாம் பாராட்டுகிறோம்.

முதலாம் உலகப் போரில் ஆர்மேனியர்கள் ரஷ்யாவின் பக்கம் சேர்ந்து கொள்ளக் கூடும் என்று ஓட்டமன் பேரரசு கற்பித்த “நியாயம்” ஆர்மேனியரகளைத் துடைத்தொழிக்கும் குறிப்பான கொடுநோக்கைத் தணித்து விடவில்லை. ஓட்டமன் துருக்கியர் தாம் நிகழ்த்திய மனிதத் தன்மையற்ற படுகொலையை ஆர்மேனியப் பிரிவினைக் கொள்கையை எதிர்க்கத் “தேவையான நடவடிக்கை” என்று நியாயப்படுத்தியமை இனவழிப்புக் குற்றத்தின் கொடுமையையும் காட்டுவிலங்காண்டித் தனத்தையும் குறைத்து விடாது.

இனவழிப்பை அங்கீகரிப்பதன் முதன்மையான நோக்கம் தீமை செய்தவர் மீது பழி சுமத்தி விட்டுப் போவது மட்டுமே அல்ல, உலகில் எங்கும் அது நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதும்தான். அது செயல்துடிப்பான முன்னகர்வு ஆகும். இனவழிப்புக்கு இரையாகி மடிந்தோரின் உயிர்களை மறவாமலிருப்பது அச்செயல் மீண்டும் என்றேனும் நிகழ்ந்து விடாமல் தடுத்திட மீளுறுதி கொள்வதாகும் என்று அதிபர் பைடன் கூறியுள்ளார்.

“நாம் இதைச் செய்வது... எது நடந்ததோ அது மீண்டும் ஒருபோதும் நடவாதிருப்பதை உறுதி செய்வதற்காகவே. தவிர பழி சுமத்துவதற்காக அல்ல,“ ஓம், இனவழிப்பு ஒப்பந்தத்தின் தலைப்பே காட்டுவது போல், ஒப்பந்தம் இவ்வடிவில் வரையப்பட்டதன் நோக்கம் இனவழிப்புக் குற்றத்தைத் தண்டிப்பது மட்டுமன்று, அக்குற்றம் புரிவதைத் தடுப்பதுமாகும். இனவழிப்பு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டுள்ள அரசுத் தரப்புகளுக்கு இனவழிப்பைத் தடுக்கும் கடமை போர்காலத்திலும், சமாதான காலத்திலு் உள்ளது என்று ஒப்பந்தத்தின் முதல் உறுப்பு சொல்கிறது. போஸ்னிய இனவழிப்பு வழக்கில் பன்னாட்டு நீதிமன்றம் (IC j) இந்த சட்டக் கடப்பாட்டை உறுதிசெய்தது என அதிபர் பைடன் அறுதியிட்டுரைக்கின்றார்.

இனவழிப்பு இல்லாத உலகம் செய்ய நாம் சேர்ந்து முயற்சி செய்வோம் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

## TGTE Celebrates US Recognition of the Armenian Genocide in 1915-16

TGTE congratulates the Biden Administration for recognizing the Armenian Genocide which took place from Spring 1915 to Autumn 1916. Approximately 1.5 million Armenians were physically annihilated through massacres, starvation, ill treatment and displacement. We, the Eelam Tamils stand in solidarity with the Armenians in their search for justice. The recognition of the Armenian genocide by the U.S. government is long overdue. The recognition is thanks to the resilient activism of the Armenian diaspora in the United States. We applaud the Biden Administration's moral courage to put human rights at the center of their foreign policy even when there are adverse geopolitical consequences.

The Ottoman Empire's “rationale” that Armenians might side with Russia during the First World War does not vitiate the specific intent to wipe out the Armenians. The Ottoman Turk's “justification” that their barbaric massacre was a “necessary measure” against Armenian separatism does not mitigate the cruelty and the barbarism of the crime of genocide.

The primary purpose of the recognition of genocide is not to simply pass blame on evil actions, but to serve as a proactive measure. As President Biden noted, the remembering of the lives of the victims of genocide is to recommit ourselves to preventing such an atrocity from occurring ever again. The President emphasized that, “We do this not to cast blame but to ensure that what happened is never repeated”. Article 1 of the Genocide Convention mandates that State Parties have a duty to prevent genocide in time of peace or in time of war. The International Court of Justice (ICJ) in the Bosnian genocide case affirmed this legal obligation.

Let's try together to create a genocide-free world.

# சிங்கப்பூர் மற்றும் இத்தாலி நாடுகளிருந்து இலங்கை செல்லும் பயணிகளுக்கு தடை

கொவிட்-19 தொற்று அதிகரித்து வருவதால் இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் தங்கள் பிரஜைகள் இலங்கைக்கு பயணிப்பதற்கு எதிராக எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், சிங்கப்பூர் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளும் இலங்கைக்கு செல்லக்கூடாது என்று தங்கள் நாட்டவர்களுக்கு தடை விதித்துள்ளது.

கடந்த 14 நாட்களுக்குள் இலங்கைக்கு பயண வரலாற்றைக் கொண்ட நீண்ட கால பாஸ் அனுமதி வைத்திருப்போர் மற்றும் குறுகிய கால வருகையாளர்கள் நாட்டுக்குள் நுழைவது தடை செய்யப்படும் என சிங்கப்பூர் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்தடை இன்று(1) முதல் நடைமுறைக்கு வருவதுடன் மறு அறிவித்தல் வரும் வரை தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ், நேபாளம் மற்றும் பாகிஸ்தானிலிருந்து வருவோருக்கும் இந்த நிபந்தனை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

சிங்கப்பூருக்குள் நுழைய முன் அனுமதி பெற்ற அனைவருக்கும் இத்தடை பொருந்தும் என அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை பங்களாதேஷ், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு சமீபத்திய பயண வரலாற்றைக் கொண்ட கப்பல் பணியாளர்களின் மாற்றல்களுக்குத் தடை செய்வதாக சிங்கப்பூர் தெரிவித்துள்ளது.

இதனிடையே இலங்கையில் கொவிட்-19 தொற்று அதிகரித்துள்ளதால் இலங்கையர்கள் இத்தாலிக்குள் நுழைவதை அந்நாடு தடை செய்துள்ளது.


# ஒன்றாறியோ கன்சர்வேட்டிவ் அரசானது, கனடா வாழ் தமிழ் மக்களோடு துணை நின்று செயற்படுகிறது என்பதை மீண்டுமொரு தடவை நிரூபித்துள்ளது ஒன்றாரியோ எம்பிபி விஜய் தணிகாசலம் தெரிவிப்பு



தமிழின அழிப்பினை அங்கீகரித்து, தமது இனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பால் தமிழர்கள் அனுபவித்துவரும் உளவியல் பாதிப்புகளையும் ஏற்றுக்கொண்டதன் மூலம் ஒன்றாறியோ மாநிலத்தின் முதல்வர் திரு. டக் ∴ போர்ட் அவர்கள் தான் ஒரு சிறந்த தலைவர் என்பதை நிரூபித்துள்ளார். அதேவேளையில், ஒன்றாறியோ கன்சர்வேட்டிவ் அரசாங்கமானது, அநீதிகளை எதிர்த்துப் போரிடுவதிலும், கனடாவைத் தாயகமாக ஏற்றுக்கொண்ட தமிழ் மக்களின் பக்கம் துணை நிற்பதிலும் என்றும் உறுதியுடன் செயற்படும் என்பதை மீண்டுமொருமுறை நிறுவியுள்ளது.

இதேவேளையில், குயின்ஸ் பார்க்கிலுள்ள ஒன்றாறியோ சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களுக்கு நடைபெற்ற அநீதியினை அறிந்து சட்டமூலம் 104இற்கான தமது வலுவான ஆதரவை வழங்கியுள்ளனர். இதுதொடர்பான விவாதத்தின்போது, தமது தொகுதிகளிலுள்ள தமிழ் மக்களின் கடின உழைப்பு, ஒன்றாறியோ சமூகத்துக்கான அவர்களின் பங்களிப்பு தொடர்பாக பல சட்டமன்ற உறுப்பினர்களும் விபரித்திருந்தனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஒன்றாரியோ மாகாண சட்ட மன்றத்தின் ஸ்காபுறோ ரூஜ்பார்க் தொகுதியின் உறுப்பினர் விஜய் தணிகாசலம் தெரிவித்துளளார். நேற்று வியாழக்கிழமை, மே 6, 2021 அன்று உறுப்பினர் விஜய் தணிகாசலம், ஒன்றாறியோ சட்டமன்றத்தில் தமிழின அழிப்பு தொடர்பான அறிவியற் கிழமைக்கான சட்டமூலத்தை மூன்றாவது வாசிப்புக்கு கொண்டுவந்திருந்தார். இந்நடைமுறையினை அடுத்து மேற்படி சட்டமூலம் ஒன்றாறியோ சட்டமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டது.




இதனைத் தொடர்ந்து அவர் ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையொன்றில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்,

தமிழ் மக்கள் மீது இன அழிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்தும் தீர்மானங்கள் இதற்கு முன்னர் இலங்கையின் வட மாகாண சபையிலும், தமிழ்நாடு சட்டசபையில் முன்னாள் முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா அவர்களாலும் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும், தென்னாசியாவுக்கு வெளியே இவ்வாறு ஒரு நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ள முதலாவது தீர்மானம் இதுவாகும். இன்னும் குறிப்பிட்டுச் சொல்வதானால், தமிழின அழிப்பு இலங்கையில் நடைபெற்றுள்ளது என்பதை அங்கீகரித்து அதனை சட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது இதுவே உலகின் முதலாவது வரலாற்று நிகழ்வாகும். இது ஒன்றாறியோவில் வாழும் 350,000 இற்கும் அதிகமான தமிழ் மக்களுக்குக் கிடைத்த வரலாற்று வெற்றியாகும். மேற்படி 104 எனும் சட்டமூலமானது, இலங்கையில் தமிழ் மக்கள் மீது இன அழிப்பு நடவடிக்கை கட்டவிழ்த்து விடப்பட்டது என்பதை அங்கீகரிப்பதுடன், அதில் கொல்லப்பட்ட உயிர்களுக்கு மதிப்பளிக்கும் அதேவேளையில், பாதிப்புக்குள்ளாகி வாழும் மக்களுக்கு நம்பிக்கையையும் ஊட்டுகிறது. அத்துடன் துன்புறுத்தப்பட்ட தமிழ் மக்களை ஆற்றும் ஒரு வழியாக இருக்கும் எனவும் இது கருதப்படுகின்றது.

"இது கனடாவில் மட்டுமல்ல, உலகெங்கிலும் வாழும் தமிழர்கள் அனைவருக்கும் ஒரு மிக முக்கியமான வரலாற்றுப் படிக்கல்லாகும். மேலும், நீங்கள் வழங்கிய பெரும் ஆதரவையிட்டு தமிழ் சமூகத்திற்கு மீண்டும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்றாறியோவில் தமிழின அழிப்பு தொடர்பான கல்வி கற்பிப்பதற்கு ஏதுவான சட்டமொன்றை நாங்கள் இணைந்து நிறைவேற்றியுள்ளோம்" என்றார்.

"தமிழின அழிப்பை தங்கள் சொந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துரைப்பதிலும், ஊடகங்களில் எடுத்துரைத்து அனைவரையும் ஏற்று அதனை அங்கீகரிக்கச் செய்வதிலும், சட்டமூலம் 104இன் தேவையை விளக்குவதிலும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர்" என தமிழ் இளையோர் அமைப்பின் பொறுப்பாளர் சகான் சோமஸ்கந்தராஜா தெரிவித்தார். இதன்போது கடிதங்கள் எழுதுவது முதற்கொண்டு, தத்தமது பகுதி சட்டமன்ற உறுப்பினர்களை நேரில் சந்தித்து தமிழின அழிப்பு தொடர்பாகவும், அது எப்படித் தம்மைப் பாதித்துள்ளது என்ற தகவல்களையும் ஒவ்வொரு இளையவர்களும் எவ்வாறு எடுத்துரைத்து இதற்கு வலுச் சேர்த்திருந்தனர் என்பது தொடர்பாகவும் அவர் இத்தருணத்தில் பகிர்ந்துகொண்டார்.

கனடாவின் பன்முகத் தன்மைக்கு முதன்மை எடுத்துக்காட்டாக விளங்கும் ஒன்றாறியோ மாநிலத்தில் பொருளாதாரத்துக்கும், கடின உழைப்புக்கும், அதன் கலாசாரத்துக்கும் கூடிய பங்காற்றும் சமூகங்களில் ஒன்றாக தமிழ் சமூகம் விளங்குகிறது. இங்கு வசிக்கும் தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் இலங்கையில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் இன அழிப்பிலிருந்து தப்புவதற்காக ஒன்றாறியோ மாநிலத்துக்கு குடிபெயர்ந்தவர்கள் ஆவர். இன அழிப்பு நடைவடிக்கையினால் இவர்களின் குடும்பங்கள் பிரிக்கப்பட்டன. சொல்லொணாத் துயரங்களைக் கடந்து இன அழிப்பிலிருந்து தப்பி உயிர் வாழ்வதற்காக பெருமளவிலான தமிழர்கள் ஒன்றாறியோ மாநிலத்துக்கு வந்தடைந்தனர். குடும்பங்களிலிருந்து பிரிவதும், தமது உறவினர்களை இழப்பதும் ஒரு சமூகத்தில் பாரிய உளவியல் தாக்கங்களை ஏற்படுத்தும் காரணங்களில் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

எனவேதான், தமிழ் மக்களுக்கு நடத்தப்பட்ட அநீதியை உற்றுநோக்கி, தமிழ் மக்கள் அனுபவித்து வரும் உளவியல் தாக்கங்களையும் கூர்ந்து அணுகி, தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டது ஓர் இன அழிப்பு என்ற வகையில் சட்டமூலம் 104ஐ ஒன்றாறியோ மாநிலம் கொண்டுவந்துள்ளது. பாதிக்கப்பட்ட ஒரு சமூகம், அது எதிர்கொள்ளும் உளவியல் தாக்கங்களிலிருந்து மீண்டு வரவும், தனது இயல்பு வாழ்வை மீள ஆரம்பிப்பதற்கும் நடைபெற்ற இன அழிப்பினை அங்கீகரிப்பது முக்கியமானதொன்றாகும் எனவும் ஒன்றாரியோ சட்ட சபை உறுப்பினர் விஜேய் தணிகாசலம் தெரிவித்துள்ளார்.

# கனடாவில் ஒன்றாறியோ அரசாங்கம் மசோதா 104 என்னும் தமிழ் இன அழிப்பு கல்வி வாரச் சட்டத்தை நிறைவேற்றியது



இன்று மே 6, 2021 ஒன்றாறியோ மாகாண அரசாங்கத்தினால் தமிழ் இன அழிப்பு கல்வி வாரச் சட்ட மசோதா ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதா மூலம், ஒவ்வொரு ஆண்டும், மே 18 ஆம் தேதியுடன் முடிவடையும் ஏழு நாள் காலம் தமிழ் இன அழிப்பு கல்வி வாரமாக அறிவிக்கப்படும். அந்த காலகட்டத்தில், அனைத்து ஒன்றாரியோ மக்களும் தமிழ் கனடியர்களின் வரலாற்றை அறிய வாய்ப்பு கிடைக்கும். இந்த சட்ட மசோதா உயிரிழந்த மக்களிற்கான மரியாதையை வழங்குவது மட்டுமல்லாமல், வாழ்வு முழுவதும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் எம் மக்களுக்கான ஒரு நம்பிக்கையை கொடுத்து அவர்களை குணப்படுத்தும் என்ற நம்பிக்கையைக் கொடுக்கின்றது.

தமிழ் இனப்படுகொலையை அங்கீகரிப்பதன் மூலம், மனித இனத்திற்கு எதிரான இத்தகைய குற்றங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க தமிழ் இனப்படுகொலை மற்றும் பிற இனப்படுகொலைகள் குறித்த விழிப்புணர்வைப் பேணுவதோடு, இனப்படுகொலைகளைத் தடுப்பதற்கான எங்கள் கூட்டு முயற்சியையும் உறுதிப்படுத்துகின்றது.

இந்த மசோதாவை மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் அவர்கள் அறிமுகப்படுத்தியபோது, தமிழ் மக்கள் அனைவரும் இணைந்து சமூகமாக மாகாண அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து கட்சித் தலைவர்கள், மற்றும் கட்சி உறுப்பினர்களை ஆதரவாக ஒன்று திரட்டியிருந்தோம். இந்த ஆதரவை உறுதிப்படுத்தும் முயற்சியில் கனேடியத் தமிழர் தேசிய அவை (NCCT), கனேடியத் தமிழ் இளையோர் (CTYA) மற்றும் தமிழ் இளையோர் அமைப்பு (TYO) ஒருங்கிணைந்து இந்த வேலத்திட்டத்தை வழிநடத்தியது. எங்கள் தொடர்ச்சியான கூட்டு முயற்சியில் கனடாத் தமிழ்க் கல்லூரி (CTA), அறிவகம் கனடா (ARIVAHAM CANADA), மிஸ்ஸிசாகா தமிழ் ஒன்றியம் (MTA), பிராம்டன் தமிழ் ஒன்றியம்(டீவுயு), மார்க்கம் தமிழ் ஒன்றியம் (MTO), ஸ்காபரோ தமிழ் ஒன்றியம் (STA), ஆட்டாவா தமிழ் ஒன்றியம் (OTA), மற்றும் க்யூபெக் தமிழ் ஒன்றியம் (QTDA), மேலும் பல தனிநபர்கள் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்கள் இந்த முயற்சியில் பங்கேற்றனர்.

இனப்படுகொலையாளிகள், இனப்படுகொலையை மறுப்பவர்கள் மற்றும் தனிப்பட்ட லாபம் கருதி நிற்பவர்களிடம் இருந்து தொடர்ச்சியான எதிர்ப்பு இருந்தும், மேலும் சிறீலங்கா அரசின் கடுமையான எதிர்ப்பைக் கடந்தும் இந்த சட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த மசோதா என்பது ஒன்றாறியோ அரசாங்கத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும், மற்றும் எமது சமூகத்தினதும் ஒரு கூட்டு முயற்சியாகும். ஒன்றாறியோ நாடாளுமன்றத்தில் இந்த சட்ட மசோதா நிறைவேறுவதற்கு முழு ஆதரவையும் வழங்கிய ஒன்றாரியோ பிரதமர், அமைச்சரவை அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து தரப்பினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.




நன்றி!
கனடிய தமிழர் தேசிய அவை (NCCT)



# தமிழகத்தின் புதிய மாநில அரசாங்கமும் ஈழத்தமிழர்களும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

தமிழகத் தேர்தல் முடிவுகள் எப்படியும் அமையலாம். அது தமிழக மக்களின் தீர்ப்பு. இதில் ஈழத்தமிழர்கள் என்ன செய்ய வேண்டும்? ஒரே வரியில் சொன்னால் யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களை தமது நோக்கு நிலைகளில் இருந்து எப்படி வெற்றிகரமாக கையாளலாம் என்று சிந்திப்பதே பொருத்தமாயிருக்கும்.

தமிழகம் எனப்படுவது தட்டையான எக பரிமாணம் கொண்ட ஒரு மக்கள் தொகுதி அல்ல. அது பல பரிமாணங்களைக் கொண்ட பல அடுக்குகளைக் கொண்ட ஒரு கலவை. முதலாவது அடுக்கு தமிழக அரசு. அது ஒரு மாநில அரசு. இந்திய மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வரும் அரைச் சமஸ்டி கட்டமைப்பு. கவனியுங்கள் அது ஒரு முழுச் சமஸ்டி கட்டமைப்பு அல்ல.

இரண்டாவது தமிழகத்தில் உள்ள கட்சிகள். மூன்றாவதாக தமிழகத்திலுள்ள ஈழ உணர்வாளர்கள் அல்லது செயற்பாட்டாளர்களர்கள். நாலாவது அடுக்கு தமிழகத்தில் உள்ள சாதாரண ஜனங்கள். இந்த நான்கு அடுக்குகளையும் ஒரே விதமாக அணுக முடியாது. ஒரே விதமாக கையாளவும் முடியாது.

முதலாவதாக மாநில அரசுக் கட்டமைப்பு. தமிழக அரசை அதன் வரையறைகளுக்குள் வைத்து விளங்கிக்கொள்ள வேண்டும். அது எதைச் செய்ய முடியுமோ அதைத்தான் எதிர்பார்க்கலாம். ஒரு மாநில அரசாக அதற்கு இருக்கக்கூடிய வரையறைகளின் அடிப்படையில்தான் அவர்கள் ஈழத்தமிழர்களுக்கு எதையும் செய்யமுடியும். இது முதலாவது.

இரண்டாவது தமிழகத்தில் உள்ள கட்சிகள். தமிழகத்திலுள்ள கட்சிகளில் ஈழத்தமிழர்களுக்கு நெருக்கமான கட்சிகளும் உண்டு. நெருக்கம் குறைந்த கட்சிகளும் உண்டு. எப்படியானாலும் இக்கட்சிகள் யாவும் அங்கேயுள்ள தேர்தல் அரசியலுக்கு உட்பட்டவை. எனவே ஈழத் தமிழர் விவகாரத்தையும் அவர்கள் தேர்தல் அரசியலுக்கு ஊடாகவே கையாள முயல்வார்கள். அதில் தேர்தல் நோக்குநிலையிலான நலன்கள் இருக்கும். அந்த நலன்களின் அடிப்படையில்தான் ஈழத் தமிழர் விவகாரம் கையாளப்படும். இதில் ஈழத் தமிழர்களுக்கு நெருக்கமான சில அரசியல்வாதிகள் உண்டு. அவர்கள் ஈழத்தமிழர்களுக்காக ஆபத்துக்களை சந்தித்திருக்கிறார்கள். தொடர்ச்சியாக ஈழத்தமிழர்கள் பொறுத்து மாறாத நிலைப்பாட்டோடு காணப்படுகிறார்கள். அவர்களோடு ஈழத்தமிழர்கள் மானசீகமான உறவுகளை வைத்துக் கொள்ளலாம். ஆனால் கட்சி நலன் என்று வரும்பொழுது குறிப்பாக தேர்தல் அரசியல் என்று வரும் பொழுது அவர்கள் தமிழகத்தின் கள யதார்த்தத்துக்கு ஏற்பவே முடிவெடுப்பார்கள். அதில் ஈழத்தமிழர்கள் தலையிட வேண்டிய அவசியம் இல்லை.

மூன்றாவது தமிழகத்தில் உள்ள செயற்பாட்டாளர்கள். இவர்கள் தேர்தல் நோக்குநிலை அற்றவர்கள். கொள்கை ரீதியாக ஈழத் தமிழர்களோடு நெருங்கி வருவார்கள். இவர்களோடு கொள்கை அடிப்படையில் கூட்டு வைத்துக் கொள்ளலாம். அது ஒருவிதத்தில் மாறாத உறவாகவும் இருக்கும்.

நாலாவது சாதாரண தமிழக மக்கள். இதுதான் பெரிய தொகை. எல்லா கட்சிகளிலும் இவர்கள் உண்டு. ஈழத் தமிழர்கள் என்றால் அவர்கள் இன ரீதியாக கொதித்து எழுவார்கள். மொழி ரீதியாக கொதித்து எழுவார்கள். அவர்களுடைய கட்சித் தலைவர்கள் அவர்களை தேர்தல் நோக்கு நிலைகளில் இருந்து வழிநடத்தக் கூடும். ஆனால் ஈழத்தமிழர்களுக்கும் சாதாரண தமிழக மக்களுக்கும் இடையிலான உறவு என்பது தூய்மையானது. அரசியல் நலன்கள் அற்றது. சுயநலம் அற்றது. அதிலுள்ள உண்மை மற்றும் உணர்வு ஒருமைப்பாடு காரணமாகத்தான் தமிழகத்தில் இதுவரையிலும் 19 பேர் ஈழத் தமிழர்களுக்காக தீக்குளித்திருக்கிறார்கள்.

எனவே தமிழகத்தின் சாதாரண ஜனங்களுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான உறவுகள் ஒப்பீட்டளவில் புனிதமானவை. அந்த உறவை ஈழத்தமிழர்கள் மதிக்க வேண்டும். ஆனால் இந்த சாதாரண தமிழக மக்கள்தான் ஈழத் தமிழர்களால் விரும்பப்படுகின்ற அல்லது வெறுக்கப்படுகின்ற தலைவர்களைத் தெரிந்தெடுக்கிறார்கள். எனவே தமிழகத்தின் தலைவர்களை குறித்து கருத்து கூறும் பொழுதும் தமிழக தலைவர்களை அணுகும் போதும் சாதாரண தமிழக மக்களின் உணர்வுகளை மதித்தே எதையும் செய்ய வேண்டும்.இதுவிடயத்தில் சாதாரண தமிழக மக்களை பகைநிலைக்கு தள்ளாத ஒரு நிதானப்போக்கை ஈழத்தமிழர்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

மேற்கண்டவற்றின் அடிப்படையில் தொகுத்துச் சிந்தித்தால் ஈழத்தமிழ் நோக்கு நிலையில் இருந்து தமிழகத்தை எப்படி கையாள வேண்டும் என்ற ஒரு தெளிவான வழி வரைபடம் கிடைக்கும். துரதிஸ்டவசமாக ஈழத்தமிழர்களிடம் அவ்வாறான வழி வரைபடம் எதுவும் கிடையாது. ஆயுதப்போராட்ட காலத்தில் இருந்து இன்று வரையிலும் நிலைமை அப்படித்தான் இருக்கிறது. தமிழகத்துக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையில் தொடர்பாடல் மையங்கள் என்று கருதத்தக்க அலுவலகங்கள் அல்லது தகவல் வழங்கும் நிலையங்கள் தமிழகத்தில் இல்லை. தமிழக ஊடகங்களுக்கும் ஈழத்தமிழ் ஊடகங்களுக்கும் இடையில் ஒரு பொதுவான தொழில்சார் இடையூடாட்டக் கட்டமைப்பும் இல்லை. தமிழகத்திலுள்ள கருத்துருவாக்கிகளுக்கும் ஈழத்தமிழ் கருத்துருவாக்கிகளுக்கும் இடையிலும் ஒரு பொதுப் பரப்பு இல்லை.தமிழகத்து சிவில் அமைப்புகளுக்கும் ஈழுத்து சிவில் அமைப்புகளுக்கும் இடையிலும் பொதுவான ஒரு இடை ஊடாடட்டத்தளம் கிடையாது.

எனவே கடந்த பல தசாப்தங்களாக ஈழத் தமிழர்களும் தமிழகத் தமிழர்களும் இடையூடாடக்கூடிய பொதுப்பரப்புகளை கட்டமைப்புகளை ஈழத்தமிழர்கள் உருவாகியிருக்கவில்லை. தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழ் ஆதரவு செயற்பாட்டாளர்களும் கட்சிகளும் கூட அதைச் செய்திருக்கவில்லை. குறிப்பாக ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட பின்னர் மோசமாக சேதமடைந்த நிலைமைகளை சீர்செய்யும் விதத்தில் தீர்க்கதரிசனம் மிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. ராஜீவ் காந்தி கொல்லப்பட முன்பு ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக காணப்பட்ட தமிழகத்தின் மிகச்சிறந்த இடதுசாரி சிந்தனையாளர்களில் ஒருவரான எஸ்.வி. ராஜதுரை போன்றவர்கள் ராஜிவ் காந்தி கொல்லப்பட்டபின் ஈழத்தமிழர்களை நோக்கி இன்றுவரையிலும் முன்னரளவுக்கு நெருங்கிவரவில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்டவேண்டும்.

இவ்வாறான பாரதூரமான ஒரு வெற்றிடத்தில் தமிழகத் தலைவர்கள் ஈழத் தமிழர்களுக்காகத் தியாகம் செய்ய வேண்டும் என்று ஒரு பகுதி ஈழத்தமிழர்கள் எதிர்பார்கிறார்கள். தமிழகத் தலைவர்கள் மட்டுமல்ல தென்னிலங்கையில் இருக்கும் கட்சித் தலைவர்கள் செயற்பாட்டாளர்கள் பொறுத்தும் ஒருபகுதி ஈழத்தமிழர்களின் நோக்குநிலை அணுகுமுறை அவ்வாறுதான் இருக்கிறது. உலகிலுள்ள எல்லாருமே எங்களை நேசிக்க வேண்டும் எங்களுக்காகத் தியாகம் செய்யவேண்டும் என்று ஈழத் தமிழர்களில் ஒரு பகுதியினர் விரும்புகிறார்கள். ஆனால் அது ஒரு அப்பாவித்தனமான விருப்பம். ஏனெனில் ஈழத் தமிழர்கள் அல்லாத வெளி இனத்தவர்களும் தாயகத்துக்கு வெளியே இருப்பவர்களும் அவரவருக்கேயான அரசியல் சூழ்நிலைகளில் கைதிகளே. அவரவர் தங்களுடைய நிலைமைகளுக்குள்ளிருந்துதான் ஈழத்தமிழர்களுக்காக எதையும் செய்யமுடியும்.

உதாரணமாக மனோகணேசன். அவர் ஒரு தென்னிலங்கை மைய அரசியல்வாதி. அவர் ஒரு தமிழ்த் தேசியவாதியாக இருக்கவேண்டிய தேவை இல்லை. அவர் இனவாதத்துக்கு எதிரான ஒரு தமிழ் அரசியல்வாதியாக இருந்தாலே போதும். அதுவே ஈழத்தமிழர்களுக்கு ஒரு பலம்.

அடுத்த உதாரணம் சிங்கள திரைக்கலைஞர்கள் மற்றும் மனித உரிமைவாதிகள். இவர்கள் இனவாதத்துக்கு எதிராக நிலைப்பாடு எடுத்தாலே போதும். அவர்கள் தமிழ்தேசியவாதிகளாக இருக்கவேண்டும் என்று எப்படி எதிர்பார்ப்பது?

இது தமிழகத்திற்கும் பொருந்தும். ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் தமிழகம் ஈழத் தமிழர்களுக்கு ஒரு பின்தளமாக இருந்தது. இது வரையிலும் 19 பேர் தமிழகத்தில் தீக்குளித்திருக்கிறார்கள். இவைகாரணமாக ஈழத்தமிழர்கள் இந்தியாவை தாயகம் என்று அழைத்துக் கொண்டு அளவுக்குமிஞ்சி நம்பிக்கைகளை முதலீடு செய்கிறார்கள் அளவுக்கு மிஞ்சி தமிழகத்தலைவர்களிடம் எதிர்பார்க்கிறார்கள். இது ஒருவகையில் வெளியாருக்காக காத்திருக்கும் அரசியலில் ஒரு கிளைதான். வெளியாருக்காகக் காத்திருப்பது என்பதே தன் பலமிழந்து வெளிநோக்கி காத்திருப்பதுதான். அது அடிப்படையிலேயே பலவீனமான அரசியல். அந்த பலவீனம்தான் மற்றவர்கள் எல்லாரும் தங்களுக்காக தியாகம் செய்ய வேண்டும் என்று அளவுக்கு மிஞ்சி எதிர்பார்ப்பதும் ஆகும்.

ஆனால் அரசியல் உறவுகள் அவ்வாறு உண்மையானவை அல்ல. நலன்சாரா உறவுகளும் அல்ல. அவை முழுக்கமுழுக்க நலன்சார் உறவுகளே. இதைப் புத்திபூர்வமாக விளங்கிக் கொண்டால் ஈழத்தமிழர்கள் தமிழகத் தலைவர்களிடம் அளவுக்குமிஞ்சி எதிர்பார்க்க மாட்டார்கள். அவ்வாறு எதிர்பார்த்து அதில் ஏமாற்றம் அடையும் போது அளவுக்குமிஞ்சி வெறுக்கவும் மாட்டார்கள். கடந்த 12 ஆண்டுகளாக சமூக வலைத்தளங்களில் நிகழும் உரையாடல்களை தொகுத்துப் பார்க்கும் எவருக்கும் இது தெளிவாகத் தெரியும். சமூகவலைத்தளங்கள் இது விடயத்தில் முழுத் தமிழர்களையும் பிரதிபலிக்கவில்லை என்பதனை இக்கட்டுரை ஏற்றுக் கொள்கிறது. எனினும் ஈழத் தமிழர்களில் ஒரு பகுதியினரின் எதிர்பார்ப்பு அது என்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

இவ்வாறான ஒரு பின்னணியில் இப்போது தமிழகத்தில் ஒரு புதிய அரசாங்கம் வந்திருக்கிறது. அந்த அரசாங்கத்தை எப்படி நெருங்க வேண்டும்? எந்த அடிப்படையில் நெருங்க வேண்டும்? யாருக்கூடாக நெருங்க வேண்டும்? யாரை வைத்து யாரை கையாளவேண்டும்? போன்ற எல்லா உபாயங்களையும் முதலில் ஈழத் தமிழர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் முதலில் ஈழத்தமிழர்கள் இதுதொடர்பில் ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வரவேண்டும். தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் தங்களுக்கிடையே ஐக்கியப்பட்டு ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டும். அது ஒரு விதத்தில் எனது கட்டுரைகளில் நான் திரும்பத் திரும்பக் கூறுவது போல ஈழத்தமிழர்களுக்கான வெளியுறவு கட்டமைப்புத்தான். அந்த வெளியுறவு கொள்கையின் ஒரு பகுதியாக தமிழகத்தை எவ்வாறு கையாள்வது என்பதற்கும் ஒரு வழி வரைபடம் தெளிவாக உருவாக்கப்பட வேண்டும்.

தமிழகத்தின் புதிய அரசாங்கத்தில் ஈழத் தமிழர்களோடு தொடர்ச்சியாக நெருக்கமாக நிற்கும் வைகோவிற்கு நான்கு ஆசனங்கள் உண்டு. மற்றொருவர் திருமாவளவன். அவருடைய கட்சிக்கும் 4 ஆசனங்கள் உண்டு. இது தவிர திமுகவிற்குள்ளும் மருத்துவர் எழிலனைப் போல பலர் ஈழத்தமிழர்களோடு நெருக்கமான மானசீகமான உறவை கொண்டிருக்கிறார்கள். அவர்களைப்போல மேலும் புதிய ஆளுமைகளை எப்படி சம்பாதிக்கலாம் என்று ஈழத் தமிழர்கள் சிந்திக்க வேண்டும்.

இடதுசாரி மரபில் வந்த ஒரு தமிழக நண்பர் அடிக்கடி கூறுவார் தமிழகத்தில் ஈழத்தமிழ் ஆதரவு என்பது ஒரு உள்ளுறையும் சக்தி. அதை ஒரு தூலமான சக்தியாக மாஸ் போர்ஸ் ஆக மாற்ற வேண்டும் என்று. ஆம்.அதை ஈழத்தமிழர்களின் ஒத்துழைப்போடு தமிழக தலைவர்களும் செயற்பாட்டாளர்களும்தான் செய்ய முடியும்.அதை ஈழத்தமிழர்கள் நேரடியாக செய்ய முடியாது.

**வீணாவின் கவிக்கணை**

உழைக்கும் உழவருக்கு
ஒரு பிடி சோறு உறுதியில்லை,
மருத்துவர் செவிலியர்க்கு
உறக்கம் நிரந்தரமில்லை,
வீட்டில் அன்றாடம்
உழைக்கும் தாய்மார்களுக்கு
என்றுமே விடுமுறையில்லை,
உழைப்பவர் அனைவரும்
ஓய்ந்து விட்டால் உலகம்கூட
ஸ்தம்பித்து விடும் ஒருகணம்!
இறுக்கம் கூடிய நேரங்களிலும்
உன் தன்னம்பிக்கையை
இறுக்கிப்பிடித்திடு மனிதா!
முயற்சி கொண்டு உழைக்கும்
உள்ளமும் ஒருநாள்
ஜெயித்து வென்றிடும் இவ்வுலகில்!



# கோரோனா பரவல் தோன்றியதற்குப் பின்னரும் கோடிக்கணக்கான பணத்தை தேவையற்ற திட்டங்களுக்கு செலவழித்த பிரதமர் மோடி

**- விஜயவர்மன் (ஸ்காபுறோ)**



கொரோன காரணமாக அதிக பாதிப்புக்களும் மரணங்களும் இடம் பெறும் நாடுகளில் முதல் இடம் வகிக்கும் இந்தியாவின் இன்றைய நிலைமை மிகவும் கவலை தருகின்றது. கொவிட்-19 தொற்று இந்தியாவில் கோரத் தாண்டவமாடுகின்றது. நாளாந்தம் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அந்நாட்டில் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். தினமும் இலட்சக்கணக்கானவர்கள் புதிதாக கொரோனா தொற்றுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றனர். இவை தவிர, கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களில் தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் குணமடைந்தும் வருகின்றனர்.

ஆனால் இந்தியாவின் பிரதமர் மடி அவர்களோ கோடிக்கணக்கான இந்தியப் பணத்தைக் கொட்டி தான் நம்பிக்கைக் கொண்ட ஒரு மதத்தலைவருக்கு சிலை அமைக்க ஆயிரம் கோடிகளையும், தானும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் கூடியிருந்து நாட்டிற்கு பயன் தராத விடயங்களை ஆராய்வதற்காக 971 கோடி செலவில் புதிய பாராளுமன்றக் கட்டடத்தையும் கட்டுவதற்கு ஏற்பாடுகளை செய்திருந்தார்.

மக்களின் எதிர்ப்புக்கள் விமர்சனங்கள் மற்றும் எதிர்க்கட்சிகளின் விமர்சனங்கள் ஆகியவற்றையும் புறக்கணித்தே இந்தியப் பிரதமர் மோடி இவ்வாறான கோடிகளைக் கொட்டும் முயற்சியில் இந்த கொடிய கோரோனா காலத்திலும் நடவடிக்கை எடுத்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த நீலையில் இந்தியாவில் ஒரு வருட காலத்துக்கு முன்னர் கொரோனா தொற்று பரவத் தொடங்கிய பின்னர் இவ்வாறானதொரு அவல நிலைமை ஏற்பட்டிருந்ததில்லை. ஆயிரக்கணக்கானவர்கள் தினமும் தொற்றுக்கு உள்ளான போதிலும், உயிரிழப்புகள் இவ்வாறு அதிகரித்திருந்ததில்லை. இந்தியாவில் முதலாவது அலையின் போது கொரோனா தொடர்பான மரண அச்சம் மக்கள் மத்தியில் இருந்ததுமில்லை.

இந்தியாவில் இன்றைய நிலைமை இவ்வாறில்லை. வீதியோரங்களில் பிரேதங்கள் தகனத்துக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. தகனக் கிரியை செய்வதற்காக மயானங்களில் இடமில்லையென செய்திகள் வருகின்றன. தற்காலிகமாக வேறு இடங்களில் சடலங்கள் தகனம் செய்யப்படும்படியாக உயிரிழப்புகளின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துள்ளது. சில இடங்களில் உள்ள மயானங்களில் சடலங்கள் இரவு பகலாக எரிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

தலைநகர் டில்லியிலும், வேறு சில முக்கிய நகரங்களிலும் நிலைமை பாரதூரமாக காணப்படுகின்றது. டில்லியில் மாத்திரம் கொரோனாவினால் நாளாந்தம் 350 இற்கு மேற்பட்டவர்கள் மரணமடைவதாக தெரிவிக்கப்படுகின்றது. மக்கள் நெருக்கமாக வாழ்கின்ற பிரதேசம் அதுவென்பதால், கொவிட்19 தொற்று பரவுவதை கட்டுப்படுத்துவதென்பது கடினமான காரியமாக உள்ளது.

இந்தியாவில் இன்று கொரோனாவின் தாக்கம் அதிகரித்திருப்பதற்கு இரண்டு பிரதான காரணிகளைக் குறிப்பிட முடியும். முதலாவது காரணி இந்தியாவில் தற்போது பரவி வருவது கொரோனாவின் திரிபடைந்த வைரஸ் என்பதாகும். கொரோனாவின் முதலாவது அலைத் தாக்கத்தின் போது பரவிய வைரஸை பார்க்கிலும், இன்றைய திரிபடைந்த வைரஸானது பல மடங்கு வேகமாகப் பரவுவதாக மருத்துவ அறிவியலாளர்கள் கூறுகின்றார்கள். அதேசமயம், புதிய வைரஸ் ஏற்படுத்துகின்ற தாக்கமும் கொடூரமானதாகவே உள்ளது.



இரண்டாவது காரணி இந்தியாவில் நிலவுகின்ற ஒக்சிஜன் பற்றாக்குறை ஆகும். கொவிட் தொற்றினால் கடுமையாகப் பீடிக்கப்பட்டுள்ளோருக்கு மருத்துவ சிகிச்சையளிப்பதற்கு ஒக்சிஜன் பிரதானமாகத் தேவை. ஆனால் இந்தியாவில் போதுமான ஒக்சிஜன் சிலிண்டர்கள் இன்றைய நிலையில் கையிருப்பில் இல்லை. எனவே தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் அநேகமானோர் ஒக்சிஜன் கிடைக்காமல் பரிதாபமாகப் பலியாகிப் போனார்கள்.

அதேசமயம், இந்தியாவில் தலைநகர் டில்லி உட்பட பல நகரங்களில் உள்ள வைத்தியசாலைகள் கொரோனா நோயாளிகளால் நிரம்பி வழிவதனால், தொற்றாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதில் பெரும் நெருக்கடி எதிர்கொள்ளப்படுகின்றது. எனவே உரிய சிகிச்சை கிடைக்காததால் ஏராளமானவர்கள் மரணமடைந்து போனார்களென்பது வேதனை தருகின்றது.

இந்தியாவின் இன்றைய அதிர்ச்சி தரும் நிலைமையைக் கண்டு உலக நாடுகளே விழித்துக் கொண்டுள்ளன. பல நாடுகளில் இருந்து ஒக்சிஜன் கொள்கலன்கள் இந்தியாவுக்கு விரைகின்றன. பெருமளவு நிதியை உதவித் தொகையாக பல நாடுகள் வழங்கியுள்ளன. கொள்கை கோட்பாடுகள் வேறுபட்டிருந்தாலும், இடுக்கண் நேர்கையில் விரைந்து சென்று சென்று உதவுகின்ற பண்பு கொண்ட நாடாக இந்திய தேசம் உள்ளது. எனவே இந்தியாவின் இன்றைய நெருக்கடி நிலையில் மற்றைய நாடுகளும் அது போன்றே இந்தியாவுக்கு உதவிக் கரம் நீட்டுவதை காண முடிகின்றது.

மேலும், இந்திய மாநிலமான தமிழ்நாட்டிலும் கொரோனா வேகமாகப் பரவி வருகின்றது. ஆனாலும் டில்லி போன்ற நகரங்களுடன் ஒப்பிடுகையில் தமிழக நிலைமை பாரதூரமானதாக இல்லை. எனினும் மக்கள் அலட்சியத்தைக் கடைப்பிடிப்பார்களானால் தமிழக நிலைமையும் மோசமடையுமென்றே அஞ்சப்படுகின்றது.

இந்தியாவின் பெருமளவு மாநிலங்களில் தற்போது நிலவுவது இரண்டாவது அலைத் தாக்கமாகும். ஆனால் டில்லி மற்றும் குஜராத் மாநிலங்களில் தற்போது நிலவுவது மூன்றாவது அலைத் தாக்கம் ஆகும். ஏனைய மாநிலங்களிலும் மூன்றாவது அலைத் தாக்கம் ஏற்பட்டு விடக் கூடுமோ என்பதுதான் அங்கு இன்றுள்ள அச்சம்!

எது எவ்வாறிருந்த போதிலும், இந்தியாவின் இன்றைய அவல நிலைமைக்குக் காரணம் மக்கள் கடைப்பிடித்த அலட்சியமேயாகும். சமூக இடைவெளியை உரியபடி கடைப்பிடித்து சுகாதார அறிவுறுத்தல்களை சரிவரப் பேணியிருப்பின் இன்றைய பேரவலம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. கொரோனா



என்பதையே முற்றாக மறந்தபடி மக்கள் நடந்து கொண்டதன் விபரீதமே இன்றைய நெருக்கடியாகும். இந்தியாவில் இடம்பெற்ற கும்பமேளா கொண்டாட்டம் மற்றும் சட்டசபைத் தேர்தல் கூட்டங்களும் சமூக இடைவெளி பேணுவதில் பாதிப்பை ஏற்படுத்தின.

இது இவ்வாறிருக்க, கனடா உட்பட பல நாடுகளிலும் கொரோனா இன்று வேகமெடுத்துள்ளது. கொரோனாவிலிருந்து எம்மை விடுவித்துக் கொள்வது என்பது, மக்களின் விழிப்புணர்வில்தான் அது தங்கியுள்ளது. கொவிட் பற்றிய அவதானம் என்றும் அவசியமென்பதை நாம் மறந்து விடலாகாது!



# கனடாவில் இலங்கையின் தமிழின அழிப்பு அறிவியல் வாரம் மசோதாவை ஆதரித்து உரையாற்றிய ஒன்றாரியோ ஆளும் கட்சி உறுப்பினர் அரிஸ் பாபிகியன்



கனடா ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை 6ம் திகதி சமர்ப்பிக்கப்பெற்ற இலங்கையின் இன அழிப்பு தொடர்பான அறிவியல் வாரம் என்னும் மசோதாவை ஆதரித்து ஒன்றாரியோ மாகாண சட்ட மன்றத்தின் ஆளும் கட்சியின் உறுப்பினர் திரு அரிஸ் பாபிகியன் ஒரு உரையை ஆற்றினார்.

இந்த சட்டத்தின் மூலம் கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் வெற்றிகரமாக அங்கீகரிக்கப்பட் நிலையில் இனிவரும் காலங்களில் ஏனைய மாகாணங்களிலும் இவ்வாறான மசோதாக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளன என் அறியப்படுகின்றது. இனிமேல் ஒன்றாரியோ மாகாணத்தில் பாட-சாலைகளில் உள்ள ஏனைய மொழி பேசும் மாணவர்களும் இலங்கையில் 2009ம் ஆண்டு வரை தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இனப்படுகொலைகள் தொடர்பாக கற்று அறிந்து கொள்ளும் வாய்ப்பு இனிமேல் அரசின் அங்கீகாரத்தோடு இடம்பெறும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த மசோதாவை சட்ட மன்றத்தில் சமர்ப்பித்தவர் ஸ்காபுறொ ரூஜ் பார்க் தொகுதியின் சட்ட மன்ற உறுப்பினரான விஜய் தணிகாசலம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### The Speech delivered by Ontario Provincial Member for Scarborough - Agincourt Mr. Aris Babikian, on 'Tamil Genocide Educational Week'

Madam Speaker:

It is my honour to stand up in this august house to speak on an important issue dear to my heart.

First of all I would like to congratulate my colleague Vijy Thanigasalam on this important milestone in his family and in the lives of those in the Tamil community.

I am so proud that this house is acknowledging the trauma and the persecution the Tamil community in Sri Lanka faced in 2009 and onwards.

It is essential to call a spade a spade. What happened to the Tamil People was a genocide. It is also essential to stand up for the truth and bring justice to the victims, their families, and the survivors.

Madam Speaker :

We stand up here today to acknowledge the past, not to cast a blame. It is important to address the Tamil genocide issue for two reasons.

First, to bring closure and healing the wounds of the past. Without healing and closure to the victims, individually and collectively, there can be no reconciliation.

Furthermore, the systematic denial policy is the Final Stage of Genocide, as renowned Genocide scholar Gregory H. Stanton stated.

In addition to the victim, the denial policy traumatize and victimizes the future generations of the victim nation.



As the grandson of a survivor and third generation of the Armenian Genocide survivor, I live the trauma every time the perpetrator questions or denies my grandfather's inhumane treatment, his survivor story and the loss of entire generations of our family.

Therefore, it is critical for us to send a message to the denialist that we will not bow down to their revisionist history and disgraceful spin.

The second reason, Madam Speaker, why we need to address this thorny issue head on is because we owe it to humanity to learn from the mistakes of the past so that we will not repeat these atrocities again.

The twentieth century is called century of tears because over 60 million people were killed due the heinous acts of genocide.

Regrettably, no society is immune from scourge of Genocide and Crimes against humanity. You just need one firebrand individual to mobilise a society and turn one against each other, us against them concept.

We have seen how Talaat Pasha masterminded the Genocide of Armenians, Greeks, Pontians, Assyrians, Chaldeans in the Ottoman Empire, we have seen how Stalin caused the Ukrainian Holodomor, We have seen how Hitler initiated the Holocaust, we have seen how Pol Pot instigated the Cambodian genocide, we have seen how Paul Kagame triggered the Rwandan genocide. And so on. Therefore, its imperative to sensitize the future generation and educate them of the importance of peaceful coexistence and respect for our diverse makeup and to protect the venerable in our society.

By doing so we will be able to make the 21st century a better and more human century than the 20th century.

Never Again should be mean never again and our compass to leave a better world for Future generations. This should be our generation's legacy.

I STAND IN SOLIDARITY WITH THE TAMIL PEOPLE.

# கனடாவில் இலங்கையின் தமிழின அழிப்பு தொடர்பாக அறிவியல் வாரம் மசோதாவை ஆதரித்து உரையாற்றிய ஒன்றாரியோ எதிர்க் கட்சித் தலைவர் அன்றியா ஹோவர்த்

### NDP proud to support passage of Tamil Genocide Awareness Week Bill



கனடா ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை 6ம் திகதி சமர்ப்பிக்கப்பெற்ற இலங்கையின் இன அழிப்பு தொடர்பான அறி-வியல் வாரம் என்னும் மசோதாவை ஆதரித்து ஒன்றாரியோ மாகாண சட்ட மன்றத்தின் பிரதான எதிர்க் கட்சியான புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவி சிறப்பான ஓர் உரையை ஆற்றினார். அந்த உரை-யின் ஒளிப்பதிவு இங்கே உள்ளது. இந்த சட்டத்தின் மூலம் கனடா-வின் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள ஏனைய மொழி பேசும் மாணவர்களும் இலங்கையில் 2009ம் ஆண்டு வரை தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இனப்படுகொலைகள் தொடர்பாக கற்று அறிந்து கொள்ளும் வாய்ப்பு இனிமேல் அரசின் அங்கீகாரத்தோடு இடம்பெறும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த மசோதாவை சட்ட மன்றத்தில் சமர்ப்பித்தவர் ஸ்காபுறொ ரூஜ் பார்க் தொகுதியின் சட்ட மன்ற உறுப்பினரான விஜய் தணிகாசலம் ஆவார்.

QUEEN'S PARK – Official Opposition NDP Leader Andrea Horwath and the Ontario NDP Caucus issued the following statement after supporting the unanimous passage of Bill 104, Tamil Genocide Awareness Week into law:

"The passage of Bill 104 today is a long-overdue historical moment for the Tamil community of Ontario. This moment belongs to the many Tamil Canadians who have tirelessly pushed for the recognition of the Tamil Genocide at all levels of government for many years.

The Official Opposition has supported this legislation wholeheartedly since its introduction in 2019, and pushed many times for the government to pass this bill as soon as possible.

New Democrats will continue to stand with Tamil Ontarians in their efforts to seek justice, peace, and accountability for the Tamil Genocide, and support their advocacy, healing, and growth."

The Official Opposition Leader Andrea Horwath, along with NDP MPPs Gurratan Singh, Doly Begum, Tom Rakocevicl, and Marit Stiles all proudly spoke on the importance and significance of this legislation.




# பேஸ்புக் என்று அழைக்கப்பெறும் முகநூல் நிறுவனத்தின் வருமான இரண்டு மடங்காக அதிகரிப்பு

பேஸ்புக் என்று அழைக்கப்பெறும் முகநூலை மாதந்தோறும் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அது 10 வீத அதிகரிப்பாக, 2.85 பில்லியனாக உயர்ந்துள்ள நிலையில் அதன் இலாபம், அண்மைக் காலாண்டில் கிட்டத்தட்ட இருமடங்காக அதிகரித்துள்ளது. இதன் மூலம் அது 9.5 பில்லியன் டொலர் இலாபத்தை ஈட்டியுள்ளதாகத் தெரிவித்தது.

கொரோனா நோய்த்தொற்றுக் காலத்தில் அதிகமானோர் இணையத்தைப் பயன்படுத்தியதால், மின்னிலக்க விளம்பரங்கள் மூலம் நிறுவனம் அதிக இலாபம் பெற்றுள்ளது. பேஸ்புக் ஒரு வலுவான காலாண்டைக் கண்டுள்ளதாகவும், மக்கள் தொடர்ந்து இணைந்திருக்கவும் வர்த்தகங்கள் வளரவும் உதவியுள்ளதாகவும் அதன் தலைவர் மார்க் ஸக்கர்பர்க் வருவாய் வெளியீடு ஒன்றில் தெரிவித்தார். நிறுவனம், இணைய விளம்பரங்கள் மூலம் பெற்ற வருவாய் 25.4 பில்லியன் டொ-லரை எட்டியது. முந்தைய ஆண்டின் அதே காலாண்டுடன் ஒப்பிட்டுகையில் அது 46 வீதம் அதிகம்.

# முன்பைவிடப் பேரெழுச்சியவும் எதிர்க்கட்சியாகவும் நாம் தமிழர் கட்சி இனிவரும் நாட்களில் பணியாற்றும்



**மக்களுக்கான போராட்டக் களங்களிலும், துயர்துடைப்புப் பணிகளிலும் முன்பைவிடப் பன்மடங்கு உள்ளவேட்கையோடு பேரெழுச்சியாக நாம் தமிழர் கட்சி பணியாற்றும். மக்கள் மன்றங்களில் வலிமையாகக் குரலை ஒலிக்கச்செய்து எதிர்க்கட்சியாக மக்கள் மனங்களில் நிலை-பெறும் என்கிறார் நாம் தமிழர் கட்சி சீமான்**

*நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,*

நடைபெற்று முடிந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி 30 இலட்சத்திற்கும் மேலான மக்களின் வாக்குகளைப் பெற்று தமிழர் நிலத்தின் தனித்துவமான மாபெரும் அரசியல் அமைப்பாக மாறியிருப்பது வரலாற்றுச்சிறப்பு வாய்ந்த செய்தியாகும். கடந்த 2016 சட்டமன்ற தேர்தலில் 234 தொகுதிகளிலும் நாம் தமிழர் கட்சி தனித்துப்போட்டியிட்டு 4,58,104 வாக்குகளைப் பெற்று 1.1 வாக்கு விழுக்காடு அடைந்தது. கடந்த 2019 நாடாளுமன்றத்தேர்தலிலும் தனித்துப் போட்டியிட்டு 16,45,185 வாக்குகளைப் பெற்று ஏறத்தாழ 4 விழுக்காடு வாக்குகளைப் பெற்றது. நடந்து முடிந்துள்ள 2021 சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி 30,41,974 வாக்குகளைப் பெற்று தமிழகத்தின் மூன்றாவது மாபெரும் அரசியல் பேரியக்கமாகக் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கிறது.

கடந்த 11 ஆண்டுகளில் தமிழக அரசியல் பரப்பில் நாம் தமிழர் கட்சி ஏற்படுத்தியிருக்கிற அதிர்வுகள் சாதாரணமானவையல்ல. கடந்த 2009 ஆம் ஆண்டுத் தமிழர்களின் மற்றொரு தாய் நிலமான ஈழத்தில் நடைபெற்ற இன அழி-வினைக் கண்டு கொதித்தெழுந்த தமிழின இளையோர் 2010 மே 18 ல் மதுரை-யில் நாம் தமிழர் இயக்கத்தை ஒரு வெகுசன அரசியல் அமைப்பாக மாற்றினோம். தொடர்ச்சியாகப் பல்வேறு அடக்குமுறைகளுக்கு மத்தியிலும், அரசு அதிகாரத்தின் பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், பொய்மையும் வன்மம் நிறைந்த அவதூற்றல்களுக்கு இடையிலும் மொழியை, இனத்தினை உயிருக்கு மேலாக நேசிக்கும் இளைஞர்களை உள்ளடக்கியப் பெரும் படையாகக் கட்டி எழுப்பினோம்.

பொய்ப்புளுகுகளால், வசன அடுக்குகளால் புரையோடிப்போன தமிழக அரசியல் பரப்பை, கொள்கை சமரசமின்றி உயிர்ப்போடு போராடிய எங்களது போராட்டங்களால் அதிரவைத்தோம். சாதி - மத உணர்ச்சியைச் சாகடித்து "நாம் தமிழர்" என்ற உணர்வோடு ஊருக்கு ஊர் திரண்ட இளைஞர் கூட்டம் இந்த மண்ணிற்காகத் தூய அரசியலை கட்டியெழுப்பியபோது அதனைத் தகர்க்க, கடும் உழைப்பினால் விளைந்த எங்களது முயற்சிகளை முறியடிக்க எங்களைக் குறித்துத் தொடர்ச்சியான பல பொய்யான பரப்புரைகள் நடைபெற்றன. ஆனா-லும், நாங்கள் மக்களையே நம்பி நின்றோம். உழைப்பினை மிஞ்சியது எதுவும் இல்லை என்று உணர்ந்து உழைத்தோம். எங்கெங்கெல்லாம் எம் மண்ணின் வளங்கள் கொள்ளையடிக்கப்பட்டனவோ அங்கெல்லாம் விரைந்து சென்று போராட்டக்களங்களில் முன்நின்றோம். தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டபோது போர்க்குரல் எழுப்பி வீதிகளில் நின்று முழங்கித் தீர்த்தோம்.

வெறும் அரசியல் கட்சியாக மட்டுமில்லாமல், இந்திய அரசியல் கட்சிகளின் வரலாற்றில் முதல்முறையாகச் சுற்றுச்சூழல் பாசறை, கையூட்டு - ஊழல் ஒழிப்புப் பாசறை போன்ற பல்வேறு அமைப்புகளை உருவாக்கி மாற்று அரசியலுக்கான பல முயற்சிகளை முன்னெடுத்தோம். தமிழர் பண்பாட்டு மீட்சி அரசியலுக்காக வீரத்தமிழர் முன்னணி தொடங்கித் தஞ்சை பெருவுடையார் கோயிலின் உச்சியில் தமிழை முழங்க வைத்தோம்.

2016 சட்டமன்றத் தேர்தலில் சமூக நீதி அடிப்படையில் வேட்பாளர்களைத் தேர்வுசெய்து நல்லரசியலை விதைக்கத் தொடங்கினோம். 2019 பாராளுமன்றத் தேர்தலில் 40 பாராளுமன்ற தொகுதிகளில் 20 இடம் ஆண்களுக்கு 20 இடம் பெண்களுக்கு எனப் பாலினச் சமத்துவத்தைப் பேணி, இந்தியத் தேர்தல் அரசியல் வரலாற்றில் மாபெரும் முன்னெடுப்பை நிகழ்த்திய முதன்மை அமைப்பாக நாம் தமி-ழர் கட்சி தலைநிமிர்ந்து நின்றது.

நடந்து முடிந்த 2021 சட்டமன்றத்தேர்தலில் 50 விழுக்காடு பெண்களுக்கான இடம், பொதுத்தொகுதியில் ஆதித்தமிழர்களுக்குப் பிரதிநிதித்துவம், இசுலாமியச் சொந்தங்களுக்கு மற்ற கட்சிகளைவிட அதிக வாய்ப்பு, சமூகத்தின் விளிம்பு நிலை-யில் இருக்கின்ற பல எளிய சமூகங்களுக்குத் தேர்தலில் வேட்பாளராக நிற்கின்ற சம உரிமை என மற்ற எந்தக் கட்சியும் செய்யத் துணியாத புரட்சிகரச் செயல்களை நாம் தமிழர் கட்சி துணிந்து செய்தது. கூட்டணி இல்லாமல், தனித்துவமானக் கொள்கைகளை முன்வைத்து, படித்த இளைஞர்கள், எளியப் பெண்களை வேட்பாளர்களாக முன்னிறுத்தி நாம் தமிழர் கட்சி இத்தேர்தலை மிக எழுச்சிகரமாகச் சந்தித்தபோது கிடைத்த ஆதரவு, மக்கள் கவனிக்கத் தொடங்கிவிட்டார்கள் என்ற புத்தெழுச்சியை வழங்கியது.

கோடி கோடியாய்க் கொட்டப்பட்ட பணமூட்டைகளுக்கு மத்தியில் எளிய மக்களின் பிள்ளைகளான நாங்கள் பெற்றிருக்கின்ற 30 இலட்சத்திற்கும் மேலா-ன வாக்குகள் என்பது சனநாயகத்தின் மீது பற்றுறுதி கொண்ட ஒவ்வொருவரும் பெருமிதம் கொள்ளத்தக்க வாக்குகள் மட்டுமல்ல் வரலாற்றின்போக்கில் அடிமைப்படுத்தப்பட்டு வீழ்த்தப்பட்ட தமிழ்த்தேசிய இனம் மீண்டெழும் என நம்புகிற ஒவ்வொரு தமிழரும் பெற்றிருக்கின்ற நம்பிக்கைத்துளிகள் இச்சமூகம் செழிக்க ஊன்றப்பட்ட ஆழ விதைகள். மாற்றத்திற்கான பெரும் பயணத்தில் நம்பிக்கை கொண்டு மக்கள் அளித்த அங்கீகாரத்திற்கான அடையாளச் சான்றுகள். சனநா-யகம் சாகடிக்கப்பட்டுப் பணமும், அதிகாரமும் கோலோச்சிய இத்தேர்தல் களத்தில் அவை யாவற்றிற்கும் இரையாகாது தமிழ்த்தேசிய தத்துவத்திற்காகவும், எளிய மக்களின் நல்லரசியல் துளிர்க்கவும் பெரும் நம்பிக்கை கொண்டு வாக்குச்செலுத்தி அங்கீகரித்த தாய்த்தமிழ் உறவுகளுக்கு இந்தத் தருணத்தில் எனது அன்பினையும், நன்றியினையும் உரித்தாக்குகிறேன்.

எங்கள் மீது நம்பிக்கை வைத்து மக்கள் அளித்துள்ள வாக்குகள் மூலம் விளையும் உந்துதலைக் கொண்டு, மக்களுக்கான போராட்டக் களங்களிலும், துயர்துடைப்புப் பணிகளிலும் முன்பைவிடப் பன்மடங்கு உள்ளவேட்கையோடு பேரெழுச்சியாக நாம் தமிழர் கட்சி பணியாற்றும் எனவும், மக்கள் மன்றங்களில் வலிமையாகக் குரலை ஒலிக்கச்செய்து எதிர்க்கட்சியாக மக்கள் மனங்களில் நிலை-பெறும் எனவும் உறுதியளிக்கிறேன்.

புதிதாக அமைய இருக்கிற தமிழக அரசுக்கும், கேரளாவில் தேர்வுசெய்யப்பட்டிருக்கும் ஐயா பினராயி விஜயன் அவர்களுக்கும், மேற்கு வங்கத்தில் தேர்வுசெய்யப்பட்டிருக்கும் அம்மையார் மம்தா பானர்ஜி அவர்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சி எப்போதும் வெல்லும்! நாம் தமிழர் வெற்றி அதைச் சொல்லும்!!

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



# 'வெளிநாடு வாழ் இந்தியர்கள்' என்கிற துறை 'வெளிநாடு வாழ் தமிழர் நலன்' என்று பெயர் மாற்றம்

## தமிழகத்தின் புதிய முதலமைச்சராக பதவிஏற்கும் முன் மு.க ஸ்டாலின் அறிவிப்பு

முக ஸ்டாலின் வெளிநாடு வாழ் இந்தியர்கள் என்கிற துறை வெளிநாடு வாழ் தமிழர் நலன் என்று பெயர் மாற்றம் அடைகிறது என்று தமிழக முதலமைச்சராக பொறுப்பெற்க உள்ள முக ஸ்டாலின் தெரிவித்துள்ளார். தமிழக முதலமைச்சராக திமுக தலைவர் முக ஸ்டாலின் நாளை பொறுப்பேற்க உள்ளார். அவாகளுக்கு கவர்னர் பன்வாரிலால் புரோஹித் பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைக்க உள்ளா.

இந்நிலையில், தமிழக முதலமைச்சராக நாளை பதவியேற்க உள்ள திமுக தலைவர் முக ஸ்டாலின் இன்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், தமிழக அரசின் அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் பெயர்கள் சிலவற்றை மாற்றுவதாக அவர் தெரிவித்தார். அந்த வகையில் 'வெளிநாடு வாழ் இந்தியர்கள்' என்கிற துறை 'வெளிநாடு வாழ் தமிழர் நலன்' என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது. முக ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில்,

1. தமிழகத்தின் நீர்த் தேவையை நிறைவுசெய்யும் பொருட்டு உண்டாக்கப்படும் தனி அமைச்சகம் 'நீர்வளத் துறை' என்று அழைக்கப்படும். இத்துறை தமிழகத்தில் தங்குதடையின்றி உழவர்களுக்கு நீர் கிடைப்பதற்கும், நிலத்தடி நீரை விருத்தி செய்வதற்கும், நீர்நிலைகளைத் தூர்வாரி பராமரிப்பதற்கும், அவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கும் முக்கியத் துறையாகச் செயல்படும். மற்றத் துறைகளை ஒருங்கிணைக்கும் மையப்புள்ளியாக இது இருக்கும்.

2. வேளாண்மைத் துறை என்கிற அமைச்சகம் 'வேளாண்மை உழவர் நலத்துறை' என்று பெயர் மாற்றம் செய்யப்படுகிறது. இந்த அரசின் நோக்கம் சாகுபடியைப் பெருக்குவது மட்டும் அல்ல, நெற்றி வியர்வையை நிலத்தில் சிந்தி நெற்கதிர்களை அறுவடை செய்யும் உழவர்களுடைய நலன்களையும் பேணிக் காப்பது என்கிற தொலைநோக்குப் பார்வையையும், திட்டங்களையும் உள்ளடக்கியதாக இத்துறை செயல்படும்.

3. சுற்றுச்சூழல் துறை என்கிற அமைச்சகம் 'சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை' என்று பெயர்மாற்றம் செய்யப்படுகிறது. காலநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் தொடர்பான எச்சரிக்கைகளையும், ஆயத்த நடவடிக்கைகளையும், விழிப்புணர்வு பரப்புரைகளையும், கட்டமைப்புகளையும் இந்த அமைச்சகம் செயல்படுத்தும்.



4. மக்கள் நல்வாழ்வுத் துறை என்பது மருத்துவத்தையும் உள்ளடக்கியது என்பதாலும், சுகாதாரம் என்பது துப்புரவை மட்டுமே குறிப்பது என்பதாலும் அத்துறைக்குப் பரந்துபட்ட நோக்கத்தில் 'மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறை' என்று பெயர் சூட்டப்படுகிறது.

5. மீனவர்கள் நலமில்லாமல் மீன்வளத்தைப் பெருக்கி பயனில்லை என்பதாலும், மீனவர்களுடைய நல வாழ்விற்கான திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்த வேண்டும் என்கிற அடிப்படையாலும் மீன்வளத்துறை 'மீன்வளம் மீனவர் நலத் துறை' என்று அழைக்கப்படுகிறது.

6. தொழிலாளர் நலத்துறையின் செயல்பாடுகள் காலப்போக்கில் மாறி இன்று திறன்களை மேம்படுத்த வேண்டிய கட்டாயத்தையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. எனவே அத்துறை 'தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை' என்று பெயரிடப்படுகிறது.

7. செய்தி மக்கள் தொடர்புத் துறை 'செய்தித் துறையாக உருமாற்றம் அடைகிறது. செய்தி என்பதிலேயே அத்துறையின் செயல்பாடான மக்கட்தொடர்பும் அடங்கியிருக்கிறது.

8. சமூக நலத்துறை என்பது பெண்களுக்கு உரிமை வழங்குகிற பல்வேறு செயல்பாடுகளை உள்ளடக்கிய துறை. எனவே அதைக் குறிக்கும் பொருட்டும், அந்தத் திக்கில் செயல்படும் பொருட்டும் திட்டங்களைத் தீட்டும் நோக்கத்திலும் 'சமூக நலன் மகளிர் உரிமைத் துறை' என்று வழங்கப்படவுள்ளது.

9. பணியாளர் என்கிற பதம் இன்று மேலாண் வட்டத்தில் அவர்களைப் பாரமாகக் கருதும் போக்கைச் சுட்டிக்காட்டுவதால் மனித வளமாகவே மதிக்கப்பட வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தில் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை 'மனித வள மேலாண்மைத் துறை' என்று அழைக்கப்பட உள்ளது.

10. 'வெளிநாடு வாழ் இந்தியர்கள்' என்கிற துறை 'வெளிநாடு வாழ் தமிழர் நலன்' என்று பெயர் மாற்றம் அடைகிறது. உலகெங்கும் பரவியுள்ள தமிழர்களுடனான தாயகத் தமிழர்களின் உறவை மேம்படுத்தவும், வெளிநாடு வாழ் தமிழ்க் குடும்பங்களிடமும் அவர்கள்தம் வருங்கால தலைமுறையினரிடமும் தமிழைக் கொண்டுச் சேர்த்து வளப்படுத்தும் நோக்கத்துடன் இப்பெயர் மாற்றம் நடைபெற உள்ளது.

இனித் தமிழும் தமிழகமும் வெல்லும். உலக அளவில் கடைப்பிடிக்கப்படும் உயர்ந்த செயல்பாடுகளை மனத்தில் வைத்தும், தமிழக அரசு 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்கின்ற சிறந்த நோக்கத்தின் அடிப்படையிலும் இந்தப் பெயர் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இவை வெறும் பெயர் மாற்றமாக இல்லாமல் செயல்பாட்டிலும் மிகப் பெரிய மாற்றங்களைத் திட்டங்களாகக் கொண்டு செயல்படத் தூண்டுகோல்களாக இருக்கும்' என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதன்மூலம் தென்மாவட்ட வளர்ச்சிக்கு அவர்கள் பாடுபடவேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# மு.க ஸ்டாலின் தலைமையில் 15 புதுமுகங்கள், 19 அனுபவஸ்தர்கள் அடங்கிய திமுகவின் புதிய அமைச்சரவை



தமிழகத்தில் பொறுப்பேற்கும் அமைச்சர்களில் 15 பேர் புதிய அமைச்சர்கள் உள்ளனர். 19 பேர் அனுபவம் உள்ள அமைச்சர்கள். திமுக அமைச்சரவையில் முதல்வர் ஸ்டாலினுடன் சேர்த்து 34 அமைச்சர்கள் பொறுப்பேற்க உள்ளனர். இவர்களில் மிகுந்த அனுபவம் உள்ள அமைச்சர்களும், அதிமுக, திமுக இரண்டு ஆட்சியிலும் அமைச்சர்களாக இருந்தவர்களும், சட்டப்பேரவைக்கு வரும்போதே அமைச்சர் ஆன புதுமுகங்கள் என்கிற கலவையாக அமைச்சரவை அமைந்துள்ளது. ஸ்டாலின் முதல்வர். இவர் ஏற்கெனவே துணை முதல்வராகவும், உள்ளாட்சித்துறை அமைச்சராகவும் இருந்தார்.துரைமுருகன் நீர்வளத்துறை அமைச்சர். இவர் நீண்டகால அமைச்சர் அனுபவம் உள்ளவர். பொதுப்பணித்துறை உள்ளிட்ட துறைகளின் அமைச்சராக இருந்தார்.கே.என்.நேரு உள்ளாட்சி நிர்வாகம். இவர் ஏற்கெனவே போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்துள்ளார். ஐ.பெரியசாமி கூட்டுறவுத்துறை அமைச்சர். இவர் ஏற்கெனவே வருவாய் மற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சராக இருந்துள்ளார்.பொன்முடி உயர்கல்வித்துறை அமைச்சர். இதற்கு முன்னரும் உயர்கல்வித்துறை அமைச்சராக இருந்தார்.எ.வ.வேலு பொதுப்பணித்துறை அமைச்சர். இவர் ஏற்கெனவே உணவுத்துறை அமைச்சராக இருந்தார்.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேளாண்மைத்துறை அமைச்சர். இதற்கு முன் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்தார்.

கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வருவாய்த்துறை அமைச்சர். இதற்கு முன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக இருந்தார்.தங்கம் தென்னரசு தொழில் துறை, தமிழ் ஆட்சி மொழி, தொல்லியல் துறை அமைச்சர். இதற்கு முன்னர் பள்ளிக் கல்வித்துறை அமைச்சராக இருந்தார். எஸ்.ரகுபதி சட்டத்துறை அமைச்சர். இதற்கு முன் ஜெயலலிதா அமைச்சரவையில் வீட்டுவசதித்துறை அமைச்சராக இருந்துள்ளார்.முத்துசாமி வீட்டுவசதித் துறை அமைச்சர். இதற்கு முன்னர் எம்ஜிஆர் ஆட்சியில் போக்குவரத்துறை அமைச்சராக இருந்தார். பெரியகருப்பன் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர். இதற்கு முன் அறநிலையத்துறை அமைச்சராக இருந்தவர்.தா.மோ.அன்பரசன் ஊரக தொழிற்துறை அமைச்சர். இதற்கு முன் தொழில்துறை அமைச்சராக இருந்துள்ளார்.மு.பெ.சாமிநாதன் செய்தித்துறை அமைச்சர். இதற்கு முன்னர் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சராக இருந்தார். கீதா ஜீவன் சமூக நலத்துறை அமைச்சர். இதற்கு முன்னரும் சமூக நலத்துறை அமைச்சராக இருந்துள்ளார்.

அனிதா ராதாகிருஷ்ணன் மீன்வளத்துறை அமைச்சர். முன்னர் வீட்டுவசதித்துறை அமைச்சராக ஜெயலலிதா அமைச்சரவையில் இருந்தவர். ராஜகண்ணப்பன் போக்குவரத்துத் துறை அமைச்சர். முன்னர் பொதுப்பணித்துறை அமைச்சராக ஜெயலலிதா அமைச்சரவையில் பதவி வகித்தவர். கா.ராமசந்திரன் வனத்துறை அமைச்சர். இதற்கு முன்னர் கதர் வாரியத்துறை அமைச்சராகப் பதவி வகித்துள்ளார்.சக்கரபாணி உணவுத்துறை அமைச்சர். இவர் தமிழக சட்டப்பேரவையின் புதிய அமைச்சர் ஆவார். திமுக கொறடாவாக முன்னர் பதவி வகித்துள்ளார்செந்தில்பாலாஜி மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வை அமைச்சர். இதற்கு முன்னர் ஜெயலலிதா அமைச்சரவையில் போக்குவரத்துத் துறை அமைச்சராகப் பதவி வகித்தவர்.ஆர்.காந்தி கைத்தறித் துறை அமைச்சர். முதல் முறையாக அமைச்சர் ஆகிறார்.மா.சுப்பிரமணியம் சுகாதாரத்துறை அமைச்சர். புதிய அமைச்சராகப் பொறுப்பேற்கிறார். இதற்கு முன் சென்னை மாநகராட்சி மேயராகப் பதவி வகித்தவர்.பி.மூர்த்தி வணிகவரித்துறை அமைச்சர். புதிதாக அமைச்சராகப் பொறுப்பேற்கிறார்.எஸ்.எஸ். சிவசங்கர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர். புதிதாக அமைச்சராகப் பொறுப்பேற்கிறார்.சேகர்பாபு அறநிலையத்துறை அமைச்சர். புதிதாக அமைச்சராகப் பொறுப்பேற்கிறார்.

பழனிவேல் தியாகராஜன் நிதித்துறை அமைச்சர். புதிதாக அமைச்சராகப் பொறுப்பேற்கிறார். ஆவடி நாசர் பால்வளத்துறை அமைச்சர். புதிதாக அமைச்சராகப் பொறுப்பேற்கிறார்.மஸ்தான் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர். புதிதாக அமைச்சராகப் பொறுப்பேற்கிறார்.அன்பில் மகேஷ் பொய்யாமொழி பள்ளிக் கல்வித்துறை அமைச்சர். புதிதாக அமைச்சராகப் பொறுப்பேற்கிறார். மெய்யநாதன் சுற்றுச்சூழல் துறை அமைச்சர். புதிதாக அமைச்சராகப் பொறுப்பேற்கிறார்.சி.வி.கணேசன் தொழிலாளர் நலத்துறை அமைச்சர். புதிதாக அமைச்சராகப் பொறுப்பேற்கிறார்.மனோ தங்கராஜ் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர். புதிதாக அமைச்சராகப் பொறுப்பேற்கிறார்.

மதிவேந்தன் சுற்றுலாத்துறை அமைச்சர். புதிதாக அமைச்சராகப் பொறுப்பேற்கிறார்.கயல்விழி செல்வராஜ் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர். புதிதாக அமைச்சராகப் பொறுப்பேற்கிறார். இதில் பாஜக வேட்பாளர்களை குறிப்பாக பாஜக தலைவர் முருகனை தாராபுரத்தில் தோற்கடித்த கயல்விழி செல்வராஜையும், தடா பெரியசாமியை திட்டக்குடியில் தோற்கடித்த சி.வி.கணேசனையும் அமைச்சராக்கியுள்ளனர்.சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த இருவரும், பெண்கள் இருவரும் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர்.

# ஒன்ராறியோவில் மே மாத இறுதிக்குள் முதற்தடவையாக கோவிட் — 19 தடுப்பூசி 65 சதவீத வளர்ந்தோர்களுக்கு போடுவதை எமது அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது

## ஒன்ராரியோ மாகாண சுகாதார அமைச்சர் கூறுகின்றார்



ஒன்ராறியோ, மே மாத இறுதிக்குள் கோவிட்-19 க்கு எதிரான முதல் தடவை ஏற்றப்படும் ஊசிகள் 65 சதவீத வளர்ந்தவர்களுக்கு தடுப்பூசி போடுவதை நோக்கமாகக் கொண்டு எமது அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. மேலும், தடுப்பூசி ஏற்றப்படும் மருந்தகங்களின் எண்ணிக்கையை உயர்த்துவதன் மூலமும், ரொரன்ரோவில் உள்ள தொற்று பாதிப்பு அதிகம் உள்ள (ஹொட் ஸ்பொட்) பகுதிகளின் நடமாடும் மொபைல் கிளினிக்குகளை அனுப்புவதன் மூலமும். 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஐந்து மில்லியன் ஒன்ராரியோ மக்கள் எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன்னர் தடுப்பூசிகளைப் பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன இந்த திட்டத்தின்படி, ஒரு மாதத்திற்குள் வாராந்தம் 940,000 ஃபைசர் தடுப்பூசிகள் எமது மாகாணத்தில் நிறைந்திருக்கும் என்று என்று மாகாணத்தின் சுகாதார அமைச்சர் கிறிஸ்டின் எலியட் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்தார்.

அன்று மாகாண அரசின் குயின்ஸ் பார்க் வளாகத்திலிருந்து ஊடகங்களின் செய்தியாளர்களுக்கு வழங்கிய தகவல்களின்போது அ வர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தடுப்பூசி திட்டத்தில் வார இறுதிக்குள் மேலும் 1,000 மருந்தகங்கள் சேர்க்கப்படுகின்றன, மொத்த மருந்தகங்கள் சுமார் 2,500 ஆகக் கொண்டுவரப்படுகின்றன, இருப்பினும் அவைகளுக்கு எப்போது தடுப்பூசிகள் கிடைக்கும் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

மாடர்னா தடுப்பூசிகளின் ஒரு பகுதி, யோர்க் மற்றும் டுறஹாம் பிராந்தியங்கள், ஹாமில்டன், ஒட்டாவா மற்றும் விண்ட்சர்-எஜெக்ஸ் ஆகிய 60 அதிக தொற்றுக்கள் கண்டறியப்பட்ட மருந்தகங்களுக்கு செல்கின்றன.

ரொரொன்ரோ, பீல் மற்றும் யோர்க் பிராந்தியங்களில் உள்ள சிறு மற்றும் நடுத்தர வர்த்தக நிலையங்களில் உள்ள பணியாளர்களுக்கு தடுப்பூசி போடுவதற்காக வெள்ளிக்கிழமை நடமாடும் ஐந்து மொபைல் கிளினிக்குகள் இதில் அடங்கும், அங்கு ஊழியர்கள் வீட்டிலிருந்து வேலை செய்ய இயலாமல் பணியாற்றுபவர்களுக்கே இந்த வாய்ப்பு கிட்டும். என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# இணையவழித் தொடர்பைப் பெறமுடியாத மாணவர்களின் குடும்பங்களுக்கு அதன் மாதக் கட்டணத்தையும் எமது அரசு செலுத்தி அவர்களின் கல்வி நடவடிக்கைகளில் அக்கறை கொண்டுள்ளோம்

## பல்லின ஊடகங்களுடனான சந்திப்பில் ஒன்றாரியோ கல்வி அமைச்சர் தெரிவிப்பு

**- ஸ்காபுறோவிலிருந்து ஆர்.என். லோகேந்திரலிங்கம்**


ஒன்ராறியோ அரசாங்கம் எதிர்வரும் 2021-22 கல்வி ஆண்டுக்கான பொதுக் கல்வியை முன்னேற்றுவதற்கும் மாணவர்களைப் பாதுகாப்பதற்கும் 2 பில்லியன் டாலருக்கும் அதிகமான புதிய நிதி ஒதுக்கீட்டை வழங்கி வருகிறது. இந்த நிதி ஒதுக்கீட்டில் கோவிட்-19 க்கு தாக்கத்தைக் குறைக்கவும் அதிலிருந்து வெற்றியடைவும் 6 1.6 பில்லியனுக்கும் அதிகமான வளங்களும் ஆளணியும் அமைக்கப்பெற்றுள்ளன. தற்போதுள்ள தொற்றுநோய்க்கு எதிராக போராடும் வகையில் கற்றல் மீட்பு மற்றும் புதுப்பித்தலை ஆதரிப்பதற்கான 85.5 மில்லியன் டாலர் நிதி ஒதுக்கீடும். வகுப்பறைக் கல்வியை இடையில் நிறுத்திய வண்ணம் இணைய வழி கற்றலுக்குச் செல்லும் மாணவர்களில் வசதியற்ற மாணவர்களுக்கு மடிக்கணனி மட்டுமன்றி, இணையவழித் தொடர்பைப் பெறமுடியாத குடும்பங்களுக்கு அதற்குரிய மாதாந்தக் கட்டணத்தையும் எமது அரசாங்கம் செலுத்துகின்றது. இந்தவகையான நிதி ஒதுக்கீடும் மாணவர்களுக்கான வாய்ப்புக்கள் மற்றும் வசதிகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஏற்பாடுகளை இதுவரை ஒன்றாரியோ எந்த அரசாங்கமும் செய்து கொடுக்கவில்லை. இணையவழித் தொடர்பைப் பெறமுடியாத மாணவர்களின் குடும்பங்களுக்கு அதற்குரிய மாதாந்தக் கட்டணத்தையும் எமது அரசாங்கம் செலுத்தும் அளவிற்கு நாம் அவர்களின் கல்வி நடவடிக்கைகளில் அக்கறை கொண்டுள்ளோம் என்று நான் கூறுவேன்.

இவ்வாறு தெரிவித்தார் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ்சே தெரிவித்தார்.

நேற்று மாலை ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள பல்லின ஊடகங்களின் ஆசிரியர்களை இணையவழி ஊடகச் சந்திப்பின் மூலமாக சந்தித்த அவர் தொடர்ந்து அவர்களோடு பேசும் போதும் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதும் பின்வரும் விபரங்களைத் தெரிவித்தார்.

2021-22 காலப்பகுதியில் மாணவர்களுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கும் திட்டத்தின்படி மொத்த முதலீட்டை. 25.6 பில்லியனாகக் கொண்டு, இந்த ஆண்டு மாணவர் தேவைகளுக்கான மானியங்களுக்கு 561 மில்லியன் டாலர் அதிகரிப்பும் இதில் அடங்கும்.

"ஒன்றாறியோ வரலாற்றில் எந்தவொரு அரசாங்கமும் செய்யாத ஒரு பாரிய நிதி ஒதுக்கீட்டை எங்கள் அரசாங்கம் பொதுக் கல்வியில் அதிக முதலீடு செய்கிறது" என்று ஒன்றாரியோ மாகாணக் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ் கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், "வகுப்பில் கற்றல் பாதுகாப்பாக மீண்டும் தொடங்குவதை மதிப்பிடுவதற்கு நாங்கள் சுகாதாரப் பிரிவு மற்றும் மருத்துவ அதிகாரிகளுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பதால், எங்கள் முன்னுரிமை வகுப்பறையில் பாதுகாப்பாக இருக்கவே வழங்கப்பட்டு வந்தது.

இதைப்போன்றே, தொடர்ந்து அந்த முன்னுரிமையை வழங்குவதற்காக, பாடசாலைகளினதும் மாணவர்களினதும் பாதுகாப்பு தொடர்பாக எங்கள் அரசாங்கமும் முதல்வரும் 6 1.6 பில்லியனுக்கும் அதிகமான தொகையை கிடைக்கச் செய்துள்ளார்கள், அதே நேரத்தில் வாசிப்பு, கணிதம், மனநலம் மற்றும் சிறப்பு கல்வித் தேவைகளுக்கு அதிக ஆதரவுடன் மாணவர்களின் நீண்டகால வெற்றியில் முதலீடு செய்கிறது. இதற்காக விசேடமாக கற்பிக்க ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்".

இதேவேளையில் மாணவர்களுக்கும் பாடசாலை பணியாளர்களுக்கும் தடுப்பூசிகளை வழங்குவதில் முக்கியமான முன்னேற்றம் காணப்பட்டாலும், மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. புதிய கல்வி ஆண்டுக்கு முன்னதாக, ஒன்றறியோ அரசாங்கம் COVID-19 பாதிப்புக்களுக்களிலிருந்து பாடசாலைகளையும் மாணவர்களையும் பாதுகாக்க மொத்தம் 6 1.6 பில்லியனுக்கும் அதிகமான வளங்களை வழங்கி வருகிறது.



இந்த விபரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றையும் ஊடகவியலாளர்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார். இந்த பெருந்தொகை நிதி ஒதுக்கீடு மூலம் ஒன்றாரியே அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

சிறப்பு கல்வி, மனநலம், நல்வாழ்வு மற்றும் ஏற்றத் தாழ்வு இல்லாத பாடசாலை சூழல் ஆகியவற்றில் 59 மில்லியன் செலவுசெய்யப்படவுள்ளது. இதுவரை இல்லாத அளவுக்கு அதிக முதலீடு.

அத்துடன் 35 மில்லியன் டாலர் கூடுதல் தொழில்நுட்ப நிதியானது, மாணவர்களின் முன்னேற்றம் கருதி மாணவர்களுக்கான தொழில்நுட்பக் கல்வியை வழங்கும் வண்ணம் சாதனங்கள் போன்றவற்றிக்கு வருடாந்தம் 15 மில்லியன் மற்றும் தொடர்ச்சியான கற்றல் தொழில்நுட்பத்திற்கான million 20 மில்லியன்.

மேலும் பாடசாலைகளின் கட்டங்களை பராமரித்தல் தொடர்பான அதிகரித்த செலவுகளுக்கு 29 மில்லியன் மாணவர்களின் போக்குவரத்து மற்றும் சுகாதார நடைமுறைகளை கவனிக்கவும் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 66 மில்லியன் பொது சுகாதார பிரிவுகள் மற்றும் சோதனைகளில் பாடசாலைகள் மையப்படுத்தப்பட்ட தாதிமார்களை வேலைக்கு அமர்த்துவதற்காகவும் அவர்களுக்குரிய வசதிகளைச் செய்யவும் 86 மில்லியன்.

மேலும் 450 மில்லியன் டாலர் வரை தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (பிபிஇ) மற்றும் முக்கியமான பொருட்கள் மற்றும் உபகரணங்கள், ஆகியவை மாகாண அரசின் அரசு மற்றும் திணைக்களங்களின் தேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலைகளுக்கு வழங்கப்படும் மற்றும் கோவிட்-19 தொடர்பான செலவினங்களை சமாளிப்பதற்காக கல்விச் சபைகளுக்கு 2 8 508 மில்லியன் வரை.

கோவிட்-19 இன் விளைவாக கற்றல் இடையூறுகளின் விளைவுகளைத் எதிர்கொள்வதற்காகவும் மாகாணத்தில் உள்ள மாணவர்களுக்கு உதவுவதற்காகவும் ஒன்றாறியோ அரசாங்கம் கூடுதல் .585.5 மில்லியனை முதலீடு செய்வதன் மூலம் கற்றல் மீட்பு மற்றும் புதுப்பித்தலை ஆதரிக்கிறது. முதலீடுகள் கனிஸ்ட பிரிவு மாணவர்களுக்கு வாசிப்பு மற்றும் கணிதத்தை கற்பிப்பது மற்றும், மாணவர்களின் பிற ஈடுபாடுகள், மற்றும் மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு ஆதரவு. இந்த கற்றல் மீட்பு மற்றும் புதுப்பித்தல் மற்றும் இந்த நடவடிக்கைகளில் ஈடுபடும் கல்வியாளர்களுக்கு உதவுவதற்காகவும் உரிய நேரத்தில் தலையீடுகளை இயக்குவதற்கும் பாடசாலைகளில் ஒன்றாறியோவில் இயங்கும் மனநல பராமரிப்பு நிறுவனங்களின் இணைந்து செயற்படுவதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படும். கணித பாட வழிகாட்டிகள் மற்றும் பயிற்சியாளர்கள் உள்ளிட்ட மேலதிக கற்பித்தல் வளங்கள் மற்றும் கோடைகாலத்தில் நடத்தப்பெறும் விசேட கற்றல் மற்றும் சிறப்பு கல்வி வகுப்புக்கள், பிற முயற்சிகளில். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் அடுத்த கல்வி ஆண்டுக்கு முன்னதாகவே ஏற்பாடு செய்யப்பட்டு மாகாணத்தின் பாடசாலைகள் ஆயத்த நிலையில் இருக்கும்.

இவ்வாறுஒன்றாரியோ கல்வி அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம் நாடுகளைப் பகைத்துக் கொள்வது இலங்கைக்கு ஆபத்து



**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)**



இலங்கை தனது கொடூரமான சட்டங்கள் மற்றும் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தொடர்ச்சியாக கடும் சர்வதேச கண்டனங்களை எதிர்கொள்கிறது. அண்மையில் இந்த ஆண்டு மார்ச் மாதம் ஐ நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக மேற்குலக நாடுகள் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து இலங்கை மிகவும் நெருக்கடியான சூழலில் உள்ளது.

ஆனால் தன் மீது சர்வதேச கண்டனம் மற்றும் விமர்சனங்கள் குறித்து சிறிதும் இலங்கை கவலைப்படுவதாகத் தெரியவில்லை. ஜனநாயக வழிமுறைகள், மனித உரிமை மாண்புகள் போன்றவை தமது அகராதியில் இல்லை என்று அரசு நினைக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இப்போது இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பான (Organisation of Islamic Cooperation -OIC- ஓஜசி) "தீவிரவாத எண்ணங்களிலிருந்து மக்களை மீட்பது" மற்றும் "பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை" என்று கூறி சிறுபான்மை சமூகங்களை - குறிப்பாக முஸ்லிம் சமூகத்தை ஓரங்கட்டும் வகையிலான சட்டங்களை முன்னெடுத்துள்ளது என்று கூறி அதைக் கடுமையாகக் கண்டித்துள்ளது.

முஸ்லிம் சமூகத்தை திட்டமிட்டு ஓரங்கட்டுவதன் மூலம் அவர்கள் தன்னிச்சையான முறையில் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்று ஓஜசி கூறியுள்ளது.

ஓஜசியின் சுயாதீனமான மற்றும் நிரந்தரமான மனித உரிமைகள் ஆணையம் - IPHRC - முஸ்லிம் பெண்கள் அணியும் புர்கா உடையை இலங்கை அரசு தடை செய்துள்ளது குறித்து கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது. இது சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளை மீறும் வகையில் உள்ளது என்றும், சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தினரின் உரிமைகளை பறிக்கும் செயலாகும் என்று கூறியுள்ளது.

"இலங்கையின் கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் அண்மையில் கொண்டுவரப்பட்ட "வன்முறையுடன் கூடிய அதிதீவிர மதவாதக் கொள்ளையிலிருந்து மக்களை விடுவிப்பதற்காக" ஏற்படுத்தப்பட்டுள்ள "சமூக இணைப்பு மையங்கள்" போன்றவை முஸ்லிம்களை தன்னிச்சையாகத் தடுத்து வைத்து சித்திரவதை செய்து அவர்களின் மனித உரிமைகளைப் பறிப்பதோடு மட்டுமின்றி, அப்படி சட்டவிரோதமாகச் செயல்படுவோரைக் காப்பாற்ற அந்தச் சட்டம் வழி செய்கிறது" என்று அந்த அமைப்பின் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.



இலங்கை உடனடியாக தனது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கோரியுள்ள இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு, தாங்கள் அண்மையில் ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தின் முன் கொண்டுவரப்பட்ட தீர்மானம் மற்றும் அதன் ஆணையர் வெளியிட்டுள்ள அறிக்கை ஆகியவற்றை தாங்கள் தீவிரமாகக் கவனத்தில் எடுத்துள்ளதாகக் கூறுகிறது. ஐநா அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி சிறைச்சாலைகள் மற்றும் பொலிஸ் நிலையங்களில் இடம்பெறும் மரணங்கள், சித்திரவதை, சட்டவிரோத கொலைகள் ஆகியவற்றில் ஈடுபட்டவர்கள் சுதந்திரமாகச் சுற்றித் திரிவது கவலையளிக்கிறது என்று அவர்கள் கூறியுள்ளனர்.

அரசுகளுக்கிடையே உலகளவில் இரண்டாவது பெரிய கூட்டமைப்பாக இந்த ஓஜசி திகழ்கிறது. 57 உறுப்பு நாடுகளைக் கொண்ட அந்த அமைப்பு அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் மிகவும் பலம் கொண்ட ஒரு அமைப்புமாகும். பன்னாட்டளவில் எடுக்கப்படும் தீர்மானங்களில் ஒரு குழுவாக தீர்க்கமான ஒரு முடிவை ஏற்படுத்தும் வகையில் கூட்டாக வாக்களிக்கும் வல்லமையுள்ளது ஓஜசி.

ஆனால் இலங்கை அரசு அதன் அரசியல் மற்றும் பொருளாதார பலத்தைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. அவர்கள் ஒன்றிணைந்து இலங்கைக்கு எதிராக ஒரு முடிவை எடுக்கும் சூழல் ஏற்பட்டால், இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்து சர்வதேச மட்டத்தில் அரசியல் ரீதியான பின்னடைவைச் சந்திக்கக் கூடும்.

இப்படியான பின்புலத்தில் ஓஜசியின் கண்டனம் மிகவும் முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.

இலங்கையில் முஸ்லிம் மக்கள் ஏற்கனவே எதிர்கொண்டுவரும் நெருக்கடிகளை கோவிட்-19 தொற்று காரணமாக மேலும் மோசமாகியுள்ளன என்று அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்தப் பெருந்தொற்று காரணமாக அங்குள்ள முஸ்லிம்கள் மேலும் தனிமைப்படுத்தப்பட்டு புறந்தள்ளப்படுகிறார்கள் என்றும் அவர்கள் மீது இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் முறையாக விசாரிக்கப்பட்டு, அனைவருக்கும் நீதி கிடைக்கும் வழிமுறைகளை இலங்கை அரசு ஏற்படுத்திக் கொடுத்து, நாட்டிலுள்ள அனைத்து சிறுபான்மையினருக்கும் நியாயமான, சுதந்திரமான வகையில் வழக்கை எதிர்கொண்டு நீதியைப் பெற்றுக் கொள்ள வழி இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

பன்னாட்டு அடிப்படையில் ஒப்புக் கொள்ளப்பட்டபடி அனைத்து மக்களும் தமது சொந்த கலாச்சாரம் மற்றும் மத அடையாளங்களைப் பேணும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ள ஓஜசி அது மீறப்படுவது சமூகத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் எச்சரித்துள்ளது.

"ஒருவரின் உடை / கலாச்சார நடைமுறைகள் காரணமாக புறக்கணிக்கப்படுவது, ஒரு குறிப்பிட்ட முத்திரை குத்தப்பட்டு அதன் அடிப்படையில் நடத்தப்படுவது ஆகியவை மக்களை மேலும் பிளவுபடுத்தி தனிமைப்படுத்தப்படும் நிலைக்கு இட்டுச் சென்று பாரிய சிக்கல்களுக்கு வழி வகுக்கும்" என்கிறது இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு.

பெரும்பான்மையின் மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில், இஸ்லாமியர்கள் மீது ஒரு அவநம்பிக்கையை ஏற்படுத்தி, அவர்களைக் கண்டு அஞ்சி, வெறுப்புணர்வு கொண்டு காழ்ப்புணர்ச்சியுடன் நடந்து கொள்வது நாட்டின் பன்முகத் தன்மைக்கு எதிரானது என்று கூறும் ஓஜசி, அது எதிர்மறையான தாக்கத்தையே ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் பேணப்படுவது தொடர்பில் இலங்கை சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதியை மதித்து நடந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள ஓஜசி, இலங்கையிலுள்ள முஸ்லிம்களும் தமது பிரச்சனைகளுக்கு உள்ளூர் வழிமுறைகள் மற்றும் நீதிமன்றங்கள் மூலமே தீர்வுகாண அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.

அதாவது உள்நாட்டுப் பிரச்சனைகளுக்கு உள்நாட்டு வழிமுறைகள் மூலமே தீர்வுகாண வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ள ஓஜசி, அனைத்து உள்நாட்டுப் பிரச்சனைகளையும் சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச் செல்வது உசிதமானது அல்ல என்கிற மென்மையான செய்தியையும் இலங்கையிலுள்ள முஸ்லிம்களுக்கு தெரிவித்துள்ளது. அதேவேளை இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள சிறுபான்மை சமூகத்தின் நலன்கள் பேணப்படுவதற்கு சர்வதேச சமூகம் அந்நாட்டுடன் ஈடுபட வேண்டும் எனவும் ஓஜசி வலியுறுத்தியுள்ளது. அதன் மூலம் இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக செயல்படுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வழி ஏற்படும் என்கிறது ஓஜசி. இலங்கையில் போர்க் காலத்திலும், போர் முடிந்து 12 ஆண்டுகள் ஆன பிறகும் ஏராளமான தமிழர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டு இன்னும் வழக்கு விசாரணைக்காக நீதிமன்றங்களுக்கு கொண்டுவரப்படாமல் உள்ளனர். இதே போன்று அண்மைக் காலத்தில் முஸ்லிம்களும் அந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். உதாரணமாக "மன்னாரமுது" எனும் புனைப் பெயரில் கவிதைகளை எழுதும் அஹ்னா∴ப் ஜசீம் கடந்த ஓராண்டாக இந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் எழுதிய "நவரசம்" எனும் கவிதைத் தொகுப்பில் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் கவிதைகள் இருந்தன என்று அரசு கூறுவது "பச்சைப் பொய்" என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. உண்மையில் அவரது கவிதைகள் பயங்கரவாதத்திற்கு எதிரானவை என்று அதை வாசித்தவர்கள் கூறுகின்றனர். தமிழ் மொழியை எழுதப் படிக்கத் தெரியாத பொலிசார் எப்படி அவர் கவிதைகள் பயங்கரவாதத்தை ஊக்குவித்தன என்று கூறுகின்றனர் என்று அவரது சட்டத்தரணிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இலங்கையில் கொடூரங்களுக்கு பெயர்போன மகசின், வெளிக்கட, போகம்பர, அனுராதபுர போன்ற சிறைகளில் இன்னும் நூற்றுக்கணக்கான தமிழ் கைதிகள் வழக்கு விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஐ நா, இந்தியா உட்பட பல நாடுகள் இந்த விடயத்தில் தலையிட்டும் இலங்கையின் ஆட்சியாளர்கள் அதை செவிமடுக்க மறுக்கின்றனர்.

பன்னாட்டு அரங்கில் சீனாவை மட்டுமே நம்பி நினைத்ததை சாதித்துவிடலாம் எனும் தவறான எண்ணத்தில் இலங்கை பயணிக்கிறது. இது மிகவும் ஆபத்தான பயணமாகும் என்பதை இலங்கை புரிந்து நடந்துகொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம்.

சர்வதேச அரசியல் என்பது சினிமா போன்றதல்ல. சினிமாவில் மட்டுமே ஹீரோவாக அறியப்படும் நபர் நூற்றுக்கணக்கன நபர்கள் வந்தாலும் அவர்களை அடித்து துவம்சம் செய்து துளியளவுகூட கீறல் இல்லாமல் தப்பிப்பார். ஆனால் பன்னாட்டு அரசியலில் ஒரு நாடு நூறு நாடுகளை அடித்து நொறுக்கிவிட்டு தங்களைக் காப்பாற்றும் என்று இலங்கை நம்பினால் அவர்கள் "முட்டாள்களின் உலகத்தில்" உள்ளனர் என்பதைத் தவிர வேறு எதையும் சிந்தித்து பார்க்க முடியாது.



OIC-IPHRC categorically condemns Sri Lanka's enactment of discriminatory laws under the pretext of 'deradicalization' and 'counter terrorism' prompting arbitrary arrests, torture and banning of burqa as tantamount to grave deprivations of human rights of Muslim minorities and violative of Sri Lanka's international human rights obligations.

2021-04-29

**Jeddah 29th April 2021:** The Independent Permanent Human Rights Commission (IPHRC) of the Organization of Islamic Cooperation (OIC) joins the international community in strongly condemning the Sri Lankan Prevention of Terrorism Act (PTA) and its recently enacted regulation namely 'De-radicalization from holding violent extremist religious ideology', which allows creation of "Reintegration Centers" to arbitrarily detain Muslims and subject

இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு பலம் பொருந்திய ஒரு அமைப்பு என்பது இலங்கைக்கு தெரியாத விஷயம் அல்ல. கடந்த முறை இலங்கைக்கு எதிராக ஐ நா தீர்மானங்கள் கொண்டுவரப்பட்ட போது, இப்போது அரசால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 90 நாட்கள் விசாரணைக் கைதியாக வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் உட்பட பல முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களும், ராஜபக்ச அரசால் இதே ஓஜசி நாடுகளுக்கு அனுப்பப்பட்டு தமக்கு ஆதரவளிக்கும்படி கோர அனுப்பப்பட்டார்கள். இப்போது அதே ஓஜசி நாடுகள் இலங்கை மீது கடும் அதிருப்தியும் கண்டனத்தையும் வெளிப்படுத்தியுள்ளன.

இதை ராஜபக்ச அரசு புரிந்து கொண்டு செயல்படுவது அவர்களுக்கும் நாட்டுக்கும் நலம் பயக்கும். ஆனால் புரிந்து கொள்வார்களா என்பதே கேள்வி!

# முதலமைச்சராக நாளை பதவியேற்கும் ஸ்டாலின் அவர்களது அரசு இமாலாயச் சிக்கல்களை எதிர்கொள்கிறது!

கனடா நக்கீரன்

முடி அணிந்த தலையில் அமைதியின்மை இருக்கிறது **(Uneasy lies the head that wears a crown)** என்பது பிரபல ஆங்கில நாடக ஆசிரியர் வில்லியம் ஷேக்ஸ்பியரின் கிங் ஹென்றி ஐஈ, பகுதி இரண்டு நாடகத்தில் வரும் வரியாகும். ஒரு அரசன் போன்ற பெரிய பொறுப்புகளையுடைய ஒருவர் தொடர்ந்து கவலையில் இருக்கிறார் அதனால் அவர் சரியாக தூங்குவதில்லை என்பது பொருளாகும். தமிழில் சொல்ல வேண்டும் என்றால் தலையில் தங்கத்திலான முடி ஆனால் அரியணை முள்ளாலானது!



பத்து ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் திராவிட முன்னேற்றக் கழகம் 6 ஆவது தடவையாக தமிழ் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. அதன் தலைவர் மு.க. ஸ்டாலின் நாளை (வெள்ளிக்கிழமை) காலை முதலமைச்சராக பதவி ஏற்க இருக்கிறார். முதல்வராகப் பதவியேற்கும் முன்பு ஸ்டாலின் கலைஞர் கருணாநிதி, பெரியார் ஈவேரா மற்றும் அண்ணா நினைவிடங்களுக்கு சென்று மரியாதை செலுத்திவிட்டு, கோட்டைக்கு செல்லவிருக்கிறார். முதல்வர் இருக்கையில் அமர்ந்ததும் முக்கியமான 4 கோப்புகளில் கையெழுத்திடவுள்ளார்.

1. கொரோனா நிவாரண நிதியாக ரேஷன் அட்டைதாரர்களுக்கு ரூபா4,000 வழங்கும் திட்டம்.

2. தமிழகத்தில் உள்ள அனைத்து நகரப் பேருந்துகளிலும் பெண்கள் இலவசமாகப் பயணம் செய்யலாம்.

3. "மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின்" கீழ் பத்தாம் வகுப்பு வரை மட்டுமே படித்துள்ள பெண்களுக்கு திருமண உதவித்தொகை தரப்பட்டுவருகிறது. அப்படி வழங்கப்படும் உதவித்தொகை ரூபா 25,000 இல் இருந்து ரூபா 30,000 ஆக உயர்த்துவது. அத்துடன் 8 கிராம் தங்கம் தாலியும் வழங்கப்படும்.

4. முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு அரசு வேலையில் முன்னுரிமை அல்லது வழிபாட்டுத்தலங்களை சீரமைக்க நிதி அல்லது பேறுகால உதவித்தொகை உயர்வு.

மு.க. ஸ்டாலின் ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் பதவியேற்கிறார். தமிழ்நாட்டில் கொரோனா என்ற கொடிய தொற்று நோய் விசுவரூபம் எடுத்துள்ளது. புதன்கிழமை வரை புதிதாக நோய்வாய்ப்பட்ட 24,898 பேர்களோடு மொத்தம் 1,28,311 பேர் கோவிட் - 19 தொற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். சென்னையில் மட்டும் புதிதாக 6,678 பேர் நோய்வாய்ப்பட்டுள்ளனர். இதன் மூலம் மொத்த தொகை 3,70,596 தொட்டுள்ளது. இறந்தவர் தொகை 14,974 ஆகவும் குணமானவர்கள் தொகை 11,51,058 ஆகவும் இருக்கிறது. போதாக்குறைக்கு உயிர்க்காற்றுத் தட்டுப்பாடு காரணமாக நோயாளிகள் இறக்கும் நிலைமை நீடிக்கிறது.

இது தொடர்பாக கொரோனா தொற்று நோய் அசுர வேகத்தில் பரவுவதை கட்டுப்படுத்த போர்க்கால வேகத்தில் நடவடிக்கை எடுக்குமாறு தனது அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் செய்திருக்கிறார். மேலும் தொடருமுன் கடந்த ஏப்ரில் 6 ஆம் தேதி நடந்த தேர்தல் முடிவைப் பார்ப்போம்.

கன்னியாகுமாரி மக்கள் அவைக்கு நடந்த இடைத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் விஜயே வசந்த் பாரதிய ஜனதாக் கட்சியில் போட்டியிட்ட பொன் இராதாகிரு்ணனை 1,37,950 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்துள்ளார். அவருக்குக் 5,76,037 வாக்குகளும் . பொன். இராதாகிருஷ்ணனுக்கு 4,38,087 வாக்குகளும் கிடைத்தன.

இந்தத் தேர்தலில் 234 தொகதிகளிலும் தனித்துப் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி மூன்றாவது பெரிய கட்சியாக தன்னைப் பலமாக அடையாளப்படுத்தியுள்ளது. ஏனைய அணிகள் பல கட்சிகளின் கூட்டாக அமைந்து பலம் சேர்த்த போது தனியாகக் களம் கண்ட நாம் தமிழர் கட்சியின் வாக்குவங்கி இம்முறை 6.85 விழுக்காடாக அதிகரித்துள்ளது அரசியல் வட்டாரங்களில் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது. 2016 இல் நடந்த தேர்தலில் ஒரு விழுக்காடு வாக்குகளை மட்டும் அந்தக் கட்சி பெற்றிருந்தது.

ஊடகங்களின் கவனத்தை கமல்ஹாசனின் மக்கள் நீதிமையமும் தினகரனின் அம்மா மக்கள் முன்னேற்றக்கழகமும் அதிகம் பெற்றிருந்தாலும் அவற்றைவிட மூன்று மடங்கு வாக்குவங்கியை நாம் தமிழர் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். திமுக, அதிமுக இரண்டும் பல கட்சிகளுடன் கூட்டணி வைத்துப் போட்டியிட்டன என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

இந்தத் தேர்தலில் திமுக மற்றும் அதிமுக பணத்தை தண்ணீர் போலச் செலவழிந்திருந்தன. ஒவ்வொரு தொகுதியிலும் அண்ணளவாக ரூபா 10 கோடிக்குக் குறையாது இரண்டு கட்சிகளும் செலவழித்தன. தேர்தல் ஆணையத்தின் பறக்கும் படை ரூபா 470 கோடி ரூபாயை பணமாகவும் தங்கமாகவும் பரிசுப் பொருட்களாகவும் கைப்பற்றியிருந்தது. இதில் பெரும்பான்மை திமுக, அதிமுக இரண்டுக்கும் உரியனவாகும். வாக்காளர்களுக்கு வழக்கம் போல பணம், சேலை, வேட்டி, மது தாராளமாக வழங்கப்பட்டன. வாக்காளர்களுக்குப் பணம் கொடுக்காத கட்சிகளில் நாம் தமிழர் கட்சியும் மக்கள் நீதி மையம் இரண்டையும் குறிப்பிட வேண்டும்.

ஸ்டாலின் அவர்களது அமைச்சரவைப் பட்டியல் வெளியாகியுள்ளது. மொத்தம் 34 அமைச்சர்களில் 19 பழைய முகங்களும் 15 புது முகங்களும் அமைச்சரவையில் இடம் பிடித்துள்ளார்கள். அமைச்சரவையில் துரைமுருகன் – நீர்பாசனத்துறை, கே.என் நேரு – நகராட்சி வளர்ச்சித்துறை, ஐ.பெரியசாமி – கூட்டுறவுத்துறை, பொன்முடி – உயர்கல்வித்துறை, எ.வ.வேலு – நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித்துறை, எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் –வேளான்துறை, கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் – வருவாய்த்துறை, தங்கம் தென்னரசு, தொழில்துறை, தமிழ்வளர்ச்சித்துறை, ரகுபதி- சட்டத்துறை, முத்துசாமி, வீட்டுவசதித்துறை, பெரிய கருப்பன் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

### தமிழ்நாடு 15 ஆவது சட்ட சபை தேர்தல் முடிவுகள்

| கட்சி | தொகுதிகள் | வாக்குகள் | % | இருக்கை 2021 | இருக்கை 2016 |
|---|---|---|---|---|---|
| திமுக | 185 | 1,56,85,421 | 37.70 | 133 | 89 |
| காங்கிரஸ் | 25 | 1,976,527 | 4.27 | 18 | 08 |
| மதிமுக | 06 | 4,86,979 | 1.13 | 04 | 00 |
| வி.சிறுத்தைகள் | 06 | 4,57,763 | 1.06 | 04 | 00 |
| சிபிஎம் | 06 | 3,90,819 | 0.9 | 02 | 00 |
| சிபிஐ | 06 | -- | 1.09 | 02 | 00 |
| அதிமுக | 191 | 1,43,85,410 | 33.29 | 66 | 136 |
| பாமக | 23 | 17,45,229 | 4.04 | 05 | 00 |
| பாஜக | 20 | 11,80,456 | 2.73 | 04 | 00 |
| அமமுக | 165 | 10,65,142 | 2.47 | 00 | 01 |
| தேமுதிக | 60 | 1,95,610 | 0.45 | 00 | 00 |
| மக்கள் நீதி மையம் | 234 | 10,58,847 | 2.45 | 00 | புதிது |
| நாம் தமிழர் | 234 | 29,58,458 | 6.85 | 00 | 00 |

சேப்பாக்கம் தொகுதியில் வெற்றி பெற்ற உதயநிதி ஸ்டாலின் அமைச்சர் பட்டியலில் இடம்பெறவில்லை. இந்த தேர்தலில் அவர் மொத்தம் 91,776 வாக்குகள் பெற்றுள்ளார். இதன் மூலம் அவர் தன்னை எதிர்த்து போட்டியிட்ட பாமக வேட்பாளர் கசாலியை விட 68,133 வாக்குகள் கூடுதலாக பெற்று வெற்றி வாகை சூடியுள்ளார். இதன் மூலம் தனது தாத்தாவை மிஞ்சிய பேரனாக வந்துவிட்டார்.

கடந்த 1996 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் சேப்பாக்கம் தொகுதியில் கருணாநிதி முதல் முறையாக போட்டியிட்டார். அந்த தேர்தலில் அவர் 35,784 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். 2001ஆம் ஆண்டு தேர்தலில் 4,834 வாக்குகள் வித்தியாசத்திலும், 2006ஆம் ஆண்டு தேர்தலில் 8,526 வாக்குகள் வித்தியாசத்திலும் கருணாநிதி தொடர்ந்து வெற்றி பெற்றார்.

அதிமுக வை சேர்ந்த 11 அமைச்சர்கள் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டுள்ளார்கள். முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி உட்பட 16 அமைச்சர்கள் வெற்றி பெற்றார்கள். அதிமுகவின் பின்னடைவுக்கு முக்கிய காரணம் அதில் ஏற்பட்ட பிளவு. தினகரனின் அம்மா திராவிட முன்னேற்றக் கழகம் வாக்குகளைப் பிரித்ததால் அதிமுக 20 தொகுதிகளில் தோல்வியைத் தழுவ வேண்டியிருந்தது.

தேர்தல் காலத்தில் தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களிலும் நேரடியாகப் பார்க்காது தொடர்ந்து ஸ்டாலின் பரப்புரை செய்தார். அவர் கடந்து வந்த அரசியல் பாதை கரடுமுரடானது. இன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவியேற்கும் ஸ்டாலின் தனது கடும் உழைப்பால் படிப்படியாக முன்னுக்கு வந்தவர்.

1973 - ஆண்டு தி.மு.க-வின் பொதுக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1976 - பிரதமர் இந்திரா காந்தி பிரகடனப்படுத்திய அவசர காலச் சட்டத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தி, சிறை சென்றார். சென்னை மத்தியச் சிறையில் கிட்டதட்ட ஓராண்டு காலத்தைக் கழித்தார்.

1982 - திமுக இளைஞரணியின் அமைப்பாளராகத் தேர்வானார்.

1984- முதல்முறையாக ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார். பின்னர் 1989 ஆம் ஆண்டு மீண்டும் அதே ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். எனினும் 1990 ஆம் ஆண்டு திமுக ஆட்சி கலைக்கப்பட்டதால் 5 ஆண்டு பதவிக் காலத்தை முழுமையாக வகிக்க முடியாமல் போனது

1996 - சட்டமன்றத் தேர்தலில் அதே தொகுதியில் வெற்றிபெற்றார். அதே ஆண்டில், சென்னை மாநகராட்சி மேயராகவும் தேர்வானார்.

2001 - ஆண்டு மீண்டும் சென்னையின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2002 - இரட்டைப் பதவிக்கு எதிராக அப்போதைய முதல்வர் ஜெயலலிதா சட்டம் கொண்டுவர, மேயர் பதவியைத் துறந்து சட்ட சபை உறுப்பினர் பணியைத் தொடர்ந்தார்.

2003 - திமுகவின் துணைப் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.

2006 - சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க வெற்றிபெற்றதை அடுத்து முதன்முறையாக உள்ளாட்சித்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

2008 - திமுக பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2009 - துணை முதலமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.

2011 - கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்டு வென்று சட்ட சபைக்கு சென்றார்.

2016 - மீண்டும் கொளத்தூர் தொகுதியிலிருந்து தேர்வுசெய்யப்பட்டார்.

2017 - திமுக செயல் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2019 - நாடாளுமன்றத் தேர்தலில் மொத்தம் 39 மக்களவைத் தொகுதிகளில் 38 இடங்களை திமுக கைப்பற்றி அமோக வெற்றிபெற்றது.

மேற்கு வங்காளத்தில் திரிணாமுல் காங்கிரஸ் 290 இடங்களில் போட்டியிட்டு 213 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது. சென்றமுறை 209 இடங்களில் வெற்றிபெற்றிருந்தது. இருந்தும் திரிணாமல் கட்சித் தலைவி மமதா பானர்ஜி போட்டியிட்ட நந்திக்கிராம் தொகுதியில் தோற்கடிக்கப்பட்டுள்ளார். மேற்கு வங்காளத்தில் ஆட்சியைப் பிடிக்க முடியாவிட்டாலும் பாஜக 77 இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது. 2016 இல் நடந்த தேர்தலில் 03 இடங்களில் மட்டும் வெற்றிபெற்றிருந்தது.

புதுச்சேரியில் மொத்தம் உள்ள 30 சட்டமன்றத் தொகுதிகளில் என்.ஆர்.காங்கிரஸ் - பாஜக கூட்டணி 16 சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது. இதில் என்.ஆர்.காங்கிரஸ் கட்சி 10 சட்டமன்றத் தொகுதிகளிலும், பாஜக 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளது. என்ஆர் காங்கிரஸ் கட்சித் தலைவர் இரங்கசாமி ஆட்சி அமைக்க இருக்கிறார்

கேரளத்தில் ஆளும் இடதுசாரி முன்னணி 93 தொகுதிகளில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைத்திருக்கிறது. ஒரே கட்சி அடுத்தடுத்து ஆட்சி அமைப்பது இதுவே முதல் தடவையாகும். காங்கிரஸ் கட்சியின் தலைமையிலான ஐக்கிய சனநாயக முன்னணி 40 இடங்களிலும் ஏனையோர் 7 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன.

முதலமைச்சராக நாளை பதவியேற்கும் ஸ்டாலின் அவர்களது அரசு இமாலாயச் சிக்கல்களை எதிர்கொள்கிறது. கொரோனா, பொருளாதாரச் சிக்கல்கள், ஊழல், கையூட்டு, ஏழ்மை, வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் எல்லாவற்றிற்கும் மேலாக மத்தியில் அசுரபலத்துடன் இருக்கும் பாஜக அரசு எனக் கடுமையான சவால்களை எதிர்கொள்கிறார்.

அரசை இயக்குவது என்பது, ஒரு மிகப் பெரிய நிறுவனத்தின் நிருவாகத்தை நடத்துவதுபோன்றது. அதை வெற்றிகரமாகச் செய்யக் வினைத் திறமை தேவை. அதுதான் மு.க.ஸ்டாலினின் பலம்.

# சட்ட சபையை கைப்பற்றியது போன்று தமிழகத்தின் அனைத்து மாநகராட்சிகளையும் முழுமையாகக் கைப்பற்றுவதே ஸ்டாலினின் திட்டம்

மலேசிய மடல்

கோலாலம்பூரிலிருந்து நக்கீரன்

கோலாலம்பூர், மே 07:

இன்னும் ஒரு சில மணி நேரத்தில் பரவலாக இருந்தது. அந்த எதிர்பார்ப்பில் ஒரு நியாயமும் பொதிந்திருந்தது.

அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கான பரப்புரையின்போது, தமிழகமெங்கும் சுற்றிவந்து சளைக்காமல் களமாடியதுடன், சேப்பாக்கம்-திருவல்லிக் கேணி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு அதிக வாக்குகள் பெரும்பான்மையில் வெற்றியும் பெற்றார் உதயநிதி.

ஆனாலும் மு.க. ஸ்டாலினைப் பொறுத்தவரை ஒருவித குறையுடனும் மனத்தாங்கலுடனும்தான் முதல்வராக பொறுப்பேற்கிறார்.

அதிமுக ஆட்சியை இழந்தாலும் 66 இடங்களை வென்று, கம்பீரத்துடன் நடைபோடுவதை ஸ்டாலினால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. இதற்கு வஞ்சம் தீர்க்கவும் வெற்றிக் கணக்கை நேர் செய்யவும் தமிழ் நாட்டில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராபள்ளி, சேலம், திருநெல்வேலி, ஈரோடு, தூத்துக்குடி, திருப்பூர், வேலூர், திண்டுக்கல், தஞ்சாவூர் உள்ளிட்ட 12 மாநகராட்சிகளுக்கும் 148 நகராட்சிகளுக்கும் தேர்தலை நடத்தி, அவற்றில் குறைந்தது 90 சதவிகித அளவிற்கு வெற்றியைக் குவித்து, அதிமுகவை துடைத்தொழிக்க திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

குறிப்பாக, 12 மாநகராட்சிகளிலும் 100 விழுக்காட்டு வெற்றியைப் பெற்றால்தான் நிம்மதி என்றும், சட்டமன்ற பொதுத் தேர்தல் பின்னடைவை சரிகட்ட அதுதான் சிறந்தவழி.., ஒரே வழி என்னும் கங்கணத்திலும் ஸ்டாலின் இருக்கிறார்.







அண்மைய சட்டமன்ற பொதுத் தேர்தலின்போது, ஸ்டாலின் அவதானத்தில் இருந்து தப்பிய அம்சங்கள் இரண்டு. அந்த இரு கூறுகளின்வழிதான் அதிமுக இந்த அளவுக்கு சட்டமன்றத் தொகுதிகளை வென்றுள்ளது.

உண்மையில், நாம் மீண்டும் ஆட்சிக்கு வந்து விடலாம் அதற்கு தோதாக புது டில்லியும் புது டில்லியின் தமிழக முகவர் பன்வாரிலால் புரோகித்தும் இருப்பதால் எம்ஜிஆர் காலத்தைப் போல தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்து விடலாம். அவ்வாறு நடந்து விட்டால், ஜெயலலிதா இல்லாமல் தன்னாலும் சாதிக்க முடியும் என்பதை தமிழக அரசியலுக்கு எடுத்துக்காட்ட முடியும் என்றெல்லாம் இடைப்பாடி பழனிசாமி திட்டம் வகுத்திருந்தார்.







அதனால்தான், நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்களாக இருந்த வைத்திலிங்கம் ஒரத்த நாடு தொகுதியிலும் முனுசாமி வேப்பன ஹள்ளி தொகுதியிலும் களம் இறங்கினர். அதிமுக ஆட்சியில் தொடர்ந்தால், இந்த இருவரும் அமைச்சராக விரும்பினர். அதற்கு பழனிசாமியும் இசைவு தெரிவித்திருந்தார்.

இது, சாத்தியா என்று நினைப்பவர்களுக்கு சாத்தியப்படும் வகையில் புது டில்லியும் அதிமுகவும் அணி சேர்ந்து “100” என்ற இரகசியத் திட்டத்தை வகுத்தனர்.

பொதுத் தேர்தலில் எவ்வளவு பணம் செலவழிந்தாலும் அதைப்பற்றி அதிமுக கவலைகொள்ளத் தேவையில்லை. எப்படியாவது, நூறு தொகுதிகளில் அதிமுக வெல்ல வேண்டும். முடிந்தால், அதற்கு மேலும் பத்து தொகுதிகளை வென்றால் இன்னும் சிறப்பு என்று புதுடில்லி பாதை வகுத்துத் தந்தது.

ஒருகால், அதிமுக 100 தொகுதிகளில் வென்றால் மீதமுள்ள 134 தொகுதிகளில் திமுக-வும் ஏறக்குறைய அதிமுக அளவிற்குத்தான் வெல்ல முடியும். காரணம், காங்கிரஸ், மதிமுக, விசிக, இரு பொதுவுடைமைக் கட்சிகள், முஸ்லிம் லீக், மனித நேய மக்கள் கட்சி, தமிழக வாழ்வுரிமைக் கட்சிகள் உள்ளிட்ட திமுக கூட்டணிக் கட்சிகளுக்கு கிடைக்கும் தொகுதிகள் போக திமுக-விற்கு அந்த அளவிற்குத்தான் இடம் கிடைக்கும். அத்துடன், அதிமுக அணியில் உள்ள பாமக, பாஜக கட்சிகளுக்கும் சில தொகுதிகளில் வெற்றி கிடைக்கும். எனவே, எப்படியாவது, எதைச் செய்தாவது அதிமுக 100 இடங்களில் வெல்ல வேண்டும் என்பது புது டில்லி வகுத்துத் தந்த திட்டம்.







அப்படி நேர்ந்தால், அதிமுக ஆட்சியை இழந்தாலும் திமுக பெரும்பான்மைப் பெறுவதைத் தடுக்க முடியும் திமுக தனியாக ஆட்சி அமைப்பதையும் தவிர்க்க முடியும். அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு, ஒருகால் தொங்கு சட்ட மன்றம் அமைந்தால், பன்வாரிலால் தற்போதைய ஆட்சியேத் தொடரலாம் பழனிச்சாமியே முதல்வராக நீடிக்கலாம். ஆனால், இரு வாரத்திலோ ஒரு மாத காலத்திலோ சட்டமன்றத்தைக் கூட்டி பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று ஒரு சப்பைக்கட்டு கட்டுப்பாட்டை விதித்திருப்பார்.

இது போதாதா?

அதற்குள் சொத்தையானவர்களையும் சோடைபோனவர்களையும் விலைபேசி வாங்க புதுடில்லி வர்த்தகர் களத்தில் இறங்கி காரியத்தை கச்சிதமாக முடிப்பார் என்பது திட்டம்.



நக்கீரன்

அதிமுக அரசின் அனைத்து அமைச்சர்களையும் தோற்கடிப்பேன் என்று கங்கனம் கட்டிய ஸ்டாலினின் மூக்கில் கரியைப் பூச வேண்டும் என்றால் அனைத்து அமைச்சர்களும் தத்தம் தொகுதிகளில் வென்றாக வேண்டும். அவர்கள், மற்ற தொகுதிகளில் பிரச்சாரம் செய்ய செல்லாவிட்டாலும் பரவாயில்லை. கைவசம் இருக்கும் வகை-தொகை இல்லாத பசையைக் கொண்டு அனைத்து வாக்காளர்களையும் ஒட்டும் வேலையை அட்டியின்றி செய்தாக வேண்டும் வென்றாக வேண்டும் என்பது புது டில்லி அரசியல் வர்த்தகரும் பழனிசாமியும் கட்டளை இட்டனர்.

இந்தக் கணக்கின் அடிப்படையில்தான், ஸ்டாலின் முதல்வராக முடியவே முடியாது என்றும் அதிமுகதான் மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் என்றும் ராஜேந்திர பாலாஜி, சி.வி.சண்முகம் போன்ற அமைச்சர்களுடன் இடைப்பாடி பழனிச்சாமியும் ஓ.பன்னீர் செல்வமும் அடிக்கடி அடித்துச் சொல்லி வந்தனர்.

பாஜக மாநில தலைவர் எல். முருகனும் இப்படி அடிக்கடி சொல்லி வந்ததன் பின்னணி இதுதான். வாக்கு எண்ணிக்கைக்கு இரு நாட்களுக்கு முன் மக்கள் நீதி மையத் தலைவர் கமலகாசனும் தொங்கு சட்டமன்றம்தான் அமையும் என்று உறுதியாக சொன்னதும் ஏறக்குறைய இந்த “100” சதித்திட்டத்தின் பிரதிபலிப்புதான்.

சீமானின் இயக்கம் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தமிழகக் கிளை என்றால் கமலகாசனின் கட்சி பாஜக-வின் இரகசிய கிளை.

இரண்டாவது அம்சம், இந்தத் தேர்தலை விட்டால் நம் சாதிக்காரருக்கு இன்னொரு வாய்ப்பு கிடைக்காது எனவே, ஆயிரம் இருந்தாலும் நம் பழனிச்சாமிக்குத்தான் நாம் அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டும் என்ற சாதிப் பிரச்சாரம் பச்சையாக தமிழகத்தின் தென் பகுதியிலும் மேலைப் பகுதியிலும் இடம்பெற்றது.

ஆனாலும் புது டில்லியும் அதிமுகவும் வகுத்த “100” என்னும் சதி வலையில் சிக்காமல் தப்பிய ஸ்டாலின், இன்னும் சில மணி நேரத்தில் தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்க உள்ளார்.

சுகாதார அமைச்சர் மா. சுப்பிரமணியனின் ஒத்துழைப்புடன் கொரோனா பரவலும் தாக்கமும் மட்டுப்பட்ட பின், சூட்டோடு சூடாக, அதிமுக நடத்தாமல் விட்டுவிட்டு பின் வாங்கிய மாநகராட்சி மற்றும் நகராட்சித் தேர்தலை முழு வீச்சில் குறுகிய கால அவகாசத்தில் அதிரடியாக நடத்தி முடிக்க வேண்டும். இதில், மாநகராட்சிகளைப் பொறுத்தவரை 12 இடங்களையும் கொத்தாக அள்ள வேண்டும். அதற்குப்பின் சென்னை மாநகராட்சியின் மேயராக உதயநிதியை உருவாக்குவது எனபது திமுக-வின் திட்டம்.

இதற்கிடையில், ஸ்டாலின் வகித்த மேயர் பதவியைப் பிடுங்குவதற்காக ஜெயலலிதா கொண்டு வந்த ஒருவருக்கு ஒரு பதவி என்னும் சட்டத்தைத் திருத்தி, சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் உதயநிதி ஸ்டாலின் மேயர் பதவி ஏற்பதற்கான தடை அகற்றப்படும்.


எனவே, உதயநிதியின் ஆதரவாளர்களும் திமுக இளைஞர் பிரிவினரும் திரை இரசிகர்களும் அவர் அமைச்சராகவில்லையே என்று கவலைப்பட வேண்டியதில்லை.

சிங்கார சென்னையின் தந்தையாக உதயநிதி உலா வரும் நாள் வெகு தொலைவில் இல்லை.

நக்கீரன் - Nakkeeran: 013-244 36 24




## உங்களுடைய முறை விரைவில் வருகிறது.





ஒன்ராரியோவின் கோவிட்-19 தடுப்பூசி திட்டம் நோய் பரவலைத் தடுத்து உயிர்களைக் காக்க உதவுகிறது.

தினமும் ஆயிரக்கணக்கானோர் ஒன்ராரியோவில் தடுப்பூசி போட்டுக்கொள்கிறார்கள்.

தடுப்பூசி வேலை தொடரும்போது, நாமும் முகக் கவசம் அணிந்து, கைகளைக் கழுவி சமூக இடைவெளியைக் காக்கவேண்டும்.

300 மொழிகளில் உதவிபெற **ontario.ca/covidvaccineplan** க்கு செல்லுங்கள் அல்லது 1-888-999-6488 ஐ அழைத்து மேலும் தெரிந்துகொள்ளுங்கள்.

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

LIMITED SEATS AVAILABLE

tico.ca




ONLY ~~14 DAY~~
7 DAY HOTEL
QUARANTINE

CANADA
TO
SRI LANKA

MAY

416-292-6200
416-317-4344 Viber
647-505-3134 Viber
sales@airlinktravel.ca

AIR LINK
Travel Ltd.

# SARAVANAA BHAVAN®

CANADA

WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN

Mother's Day

அரசியான உங்கள் அம்மாவை!

அன்னையர் தினத்தில்

எங்கள் **விசேட சாப்பாடு** ஒன்றை

வழங்கி உபசரியுங்கள்

Mixed Vegetable Sambar, Cauliflower Rasam, Drumstick (chettinad) Vathal Kuzhambu Potato Kara Curry, Beans Poriyal, Special Avial, Semiya Kesari, Javvarisi Payasam (Sago), Soya & Veg Briyani, Kadai Paneer, Mix Fruits Sweet Pachadi, Mango pickle, Onion Vada, Butter Milk, Appalam, Yoghurt, Dry salt Chillies, Poori/Chappati, White Rice

Order Online: www.saravanabhavan.ca

SARAVANAABHAVANCANADA

SCARBOROUGH | MISSISSAUGA

416 293 7755 | 905 290 0769

சரவண பவன் இரண்டு கிளைகளிலும்

SCARBOROUGH: WOODSIDE SQUARE, FINCH AND MCCOWAN INTERSECTION. 1571 SANDHURST CIRCLE, UNIT 153, SCARBOROUGH, ON. M1V 1V2

MISSISSAUGA: HURONTARIO AND EGLINTON INTERSECTION, 4559 HURONTARIO STREET, UNIT 12B, MISSISSAUGA, ON. L4Z3L9

*மே 9 அன்று மட்டுமே



Carefirst

# கோவிட் -19
## POP-UP சோதனை

புதிய நேர அட்டவணை

உங்களுக்கு ஏதேனும் அறிகுறிகள் இருந்தால், அல்லது நீங்கள் COVID-19 உடன் தொடர்பு கொண்டிருக்கலாம் என்று நினைத்தால், தயவுசெய்து ஒரு சந்திப்பை பதிவு செய்து சோதனை செய்யுங்கள்.

எல்லாம் வரவேற்கத்தக்கது, வயது வரம்பு இல்லை. உங்கள் OHIP சுகாதார அட்டையை கொண்டு வாருங்கள். உங்களிடம் OHIP அட்டை இல்லையென்றால், தயவுசெய்து 1 துண்டு ஐடியைக் கொண்டு வாருங்கள்.

* தயவுசெய்து கவனிக்கவும், சர்வதேச பயண அனுமதிக்கு COVID-19 சோதனை கோரும் நபர்கள் பொதுவில் நிதியளிக்கப்பட்ட COVID-19 சோதனைக்கு தகுதியற்றவர்கள்

**Carefirst One-Stop Multi-Services Centre**
300 Silver Star Blvd, Scarborough ON M1V 0G2 (Midland & McNicoll)
[illegible] 10, 2021 [illegible] — 9:30 a.m. - 2:30 p.m.

**YMCA**
101 YMCA Blvd, Markham ON L6G 0A1 (Kennedy & Hwy 407)
[illegible] 5, 2021 [illegible] — 9:30 a.m. - 2:30 p.m.

**Markham Chinese Presbyterian Church**
2250 Denison St, Markham ON L3S 1E9 (McCowan & Denison)
[illegible] 6, 2021 [illegible] — 9:30 a.m. - 2:30 p.m.

**Islamic Society of Markham (நியமனம் மூலம் மட்டுமே)**
2900 Denison Street, Markham, ON L3S 4J8 (Denison & Middlefield)
[illegible] 8, 2021 [illegible] — 9:30 a.m. - 2:30 p.m.

உங்கள் சோதனை சந்திப்பை முன்பதிவு செய்யுங்கள்
**www.carefirstontario.ca**
Walk-in ஆனால் காத்திருப்பு நேரம் மாறுபடலாம்

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து பார்வையிடவும் **www.carefirstontario.ca** அல்லது அழைக்கவும் **416-646-5108**

**உங்களிடம் கொண்டு வரப்பட்டது: Carefirst Seniors and Community Services Association**

Carefirst Family Health Team
Health for All Family Health Team
Islamic Society of Markham
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
YMCA of Greater Toronto

Updated on April 5, 2021



Carefirst

# தென்கிழக்கு மார்க்கம் பகுதிக்கு கோவிட் - 19 சம்பந்தமான அதிமுக்கியத்துவமான சமூகச் செயற்பாடுகள்

நீங்கள் கோவிட் - 19 நோயினால் பாதிக்கப்பட்டிருந்து, உங்களுக்குச் சமூக ஆதரவு தேவைப்பட்டால் எங்களை அழையுங்கள்.
**Carefirst இனது சமூக ஆதரவு சேவைகள் உள்வாங்கல் தொடர்பு எண்:**
**416 646 5108** (திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை, முற்பகல் 9. 00 மணியிலிருந்து பிற்பகல் 5. 00 மணிவரை)

**தடுப்பூசிகள் எம்மை தொற்று நோய்களில் இருந்து பாதுகாக்க உதவுகிறது.**

யோர்க் நகரத்தில் உங்கள் கோவிட் 19 தடுப்பூசிகளுக்கான முன்பதிவினை மேற்கொள்ள http://york.ca/covid19vaccine என்ற இணையத்தை அணுகுங்கள்

உங்களுக்கு தடுப்பூசி போடுவதற்கான முன்பதிவினை மேற்கொள்ள உதவி தேவைப்பட்டால் கீழே தரப்பட்டுள்ள கிளினிக்குகளின் தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

- **Aaniin Community Centre** 1-877-464-9675
- **Cornell Community Centre** 1-833-943-3900

நீங்கள் கோவிட் 19 தடுப்பூசிக்கு தகுதியுடையவரா என அறிய அழையுங்கள் 1-877-463-3675. உங்களுக்கு தடுப்பூசி ஏற்புடையதா என அறிந்து கொள்ள உங்கள் குடும்ப மருத்துவரை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளுங்கள்

**ஏனைய வளங்கள்:**

**ஒன்ராரியோ தொலைபேசிச் சுகாதார சேவை உங்களுக்கு நோய்க்குரிய அறிகுறிகள்** காணப்பட்டால் அழைக்க வேண்டியது
Tel: 1-866-797-0000

**ஒன்ராரியோ 211 / சமூகம் மற்றும் சமூக சேவைகள் உதவித் தொடர்பு:**
211ontario.ca

**யோர்க் பிராந்திய கோவிட் - 19 தன்னார்வத் தனிமைப்படுத்தல் நிலையம்**
York Region COVID-19 Voluntary Isolation Centre
1-877-464-9675
york.ca/isolationcentre

**யோர்க் பிராந்தியப் பொதுச் சுகாதாரப் பிரிவு**
1-800-361-5653

**Carefirst முதியோர், சமூக சேவை இணையம் மற்றும் கீழ்வரும் சேவைப் பங்காளர்களினால் இது எடுத்துவரப்படுகிறது:**

Carefirst Family Health Team
Centre for Immigrant and Community Services
Community & Home Assistance to Seniors (CHATS)
City of Markham
EYRND Ontario Health Team
Health Common Solutions
Health for All Family Health Team
Hong Fook Mental Health Association
Islamic Society of Markham - Jam'e Masjid Markham
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
Markham Wesley Centre
Social Services Network
Tamil Civic Action
The Cross-cultural Community Services Association
YMCA of Greater Toronto (Markham)
York Region Community and Health Services
York Region Public Health
105 Gibson Centre
360° Kids Support Services



# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**

# PRECONSTRUCTION HOUSES & TOWNHOUSES!








**Bala Logendralingam**
REALTOR®

EXECUTIVE Award
100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9





# கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors


வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

**Reduce your debts upto 80%**



**Suren Sornalingam**
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

இலங்கைக்கு வரும் முன்னர் அழகிய
திருகோணமலையை நினவிற் கொள்ளுங்கள்




# TRINCOMALEE BEACH RESORT & SPA

தற்போதைய கோரோனாத் தொற்றுக் காலத்தில் இலங்கைக்கு
பயணம் செய்யும் போது சில நாட்கள் தனிமைப்படுத்தல்
அவசியமாகின்ற போது, எமது
TRINCOMALEE BEACH RESORT & SPA
உங்களுக்கு ஒரு வாய்ப்பாக இருக்கும்.

அதற்கு காரணம் இலங்கை அரசால் CERTIFIED LEVEL 1 என்னும்
தனிமைப்படுத்தலுக்கான அங்கீகாரத்தைப் பெற்ற ஹோட்டல் இதுவாகும்.

**CERTIFIES LEVEL 01**

SAFE & SECURE MODERN, ELEGANT
4-STAR RESORT OVERLOOKING THE
INDIAN OCEAN. ROMANTIC AND
CHARMING GATEWAY IN THE
TANTALIZING SHORES OF
TRINCOMALEE IN SRI LANKA.

GOVERNMENT APPROVED QUARANTINE(COVD 19) HOTEL

+94 77 041 0000(WhatsApp available)
+94 26 222 0200

trincomaleebeachresort.com

# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

**0%வட்டி**

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:

**வசந்தி சிவராஜா - 416-616-3077**

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

### எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும்
இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

## 30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

*SUMMER SPECIAL* கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...




உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.




காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

# SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 945



## நாச்சிமார் திருக்கோயில்
### வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

"காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கருவாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகி பயிராகி உணர்வாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயே உன்னை
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை."

ஆலயம் விருத்தியடைய இதனைச் சரிவர நிர்வகிக்கும்பொருட்டு, கி.பி 1893 ஆம் ஆண்டில் ஆலய பரிபாலனத்திற்கென அமைக்கப்பட்ட ஐவரைக்கொண்ட பஞ்சாயத்தும், பதின்நான்கு பேரைக்கொண்ட நிர்வாகசபையும் நிறுவப்பட்டது. இவர்கள் நிர்வாகத்தில் இக்கோவில் வளர்ச்சிகண்டதோடு, நாச்சிமார்கோவில் அருளும், புகழும்கொண்ட கோவிலாக விளங்கியது. இதன் பின்னர் சுற்றுப்புறப் பிரதேசங்களில் உள்ளவர்கள் மட்டுமன்றி, நாட்டின் பல பாகங்களிலுமிருந்தும் இக்கோவிலுக்கு மக்கள் வர ஆரம்பித்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில், நமசிவாயம் செல்லப்பா என்பவர் இந்தியாவிற்குத் தலயாத்திரை மேற்கொண்டார். அப்பொழுது சுவாமிமலையிலுள்ள சிற்பாச்சாரியரைக்கொண்டு, விக்கிரகங்கள் பலவற்றைச் செய்வித்தார். பூமாதேவி சமேத மகா விஷ்ணு, இலக்குமி. வள்ளிநாயகி, தெய்வயானை சமேத சுப்ரமணியப்பெருமான், வைரவர், நவக்கிரகங்கள், சண்டேசுவரி, ஆகிய விக்கிரகங்களை அவர் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்தார். இவ்விக்கிரகங்கள் நாச்சிமார்கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ்வேளையில், சுற்றுப்பிரகார மண்டபமும் அமைக்கப்பட்டு, 1926 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, கொடித்தம்பமும் அமைக்கப்பட்டு, கொடியேற்றம் முதல் தீர்த்தம் வரை பத்துத்திருவிழாக்கள் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது. ஆதியிலே காணப்பட்ட பதிவேட்டுக் குறிப்பின்படி, இக்கோவிலிலே ஒன்பது நாட்களே திருவிழா நடைபெற்றுள்ளது. பத்தாம் நாள் பங்குனி உத்தரத்தன்று மணிவிழாவும், பதினோராம் நாள் ஊஞ்சல் திருவிழாவும் நடைபெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு, 1870 ஆம் ஆண்டளவில் கற்கோவிலாக மாற்றம் பெற்றபின், இங்கு ஆண்டுதோறும் அலங்கார உற்சவங்கள் நடைபெற்றதாக, குறிப்புக்களிலே கூறப்பட்டுள்ளது. ஆலயவளர்ச்சியின் காரணமாக, ஆலயப்பணிகள் பலவாகக் காணப்பட்டன. இவற்றைச் சமாளிக்கும் விதத்தில், 1933 ஆம் ஆண்டளவில் புதியதொரு நிர்வாகசபை நிறுவப்பட்டது.

இக்கோவிலிலுள்ள மகாமண்டபம், மு. முத்துவேலுபத்தரின் உபயமாகவும், கோவிலுக்கு முன்னால் வடக்குப்பக்கமாக அமைந்துள்ள திருக்குளம், கந்தர் உடையார் என்பவராலும் கட்டப்பட்டது. 1965 ஆம் ஆண்டிலே, சப்பை ரதமும் (சப்பறம்) செய்யப்பட்டது. பல புனருத்தாரணப் பணிகளின் பின் மீண்டும், 1967 ஆம் ஆண்டு, மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அத்தோடு பத்து நாட்கள் நடைபெற்று வந்த வருடாந்த மகோற்சவமும், பதினைந்து நாட்களாக மாற்றம் பெற்றது. 1968 ஆம் ஆண்டு சிறு மஞ்சமும் செய்யப்பட்டது. 1971 ஆம் ஆண்டு இவ்வாலயத்துக்கென அழகிய சிற்பத்தேர் உருவாக்கப் பட்டது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிற்பாச்சாரியார் ஆ.தம்பித்துரை அவர்கள், தேரை உருவாக்கினர். சித்திரத்தேரின் அடித்தளத்துச் சிற்பங்கள் சில இந்தியாவிலே செய்யப்பட்டன.

இக்கோவிலின் இராசகோபுரம் சைவாகமவிதிகளுக்கு அமைய நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இராசகோபுரத்தை அமைக்கும் பணிகள், 1976 ஆம் ஆண்டிலே ஆரம்பமாகியது. இவ்வேலைகள் தமிழகச் சிற்பாசாரியாரான நாகலிங்கம் அவர்கள் தலைமையிலே நடைபெற்றது. நாச்சிமார்கோவில் இராசகோபுரம், அற்புதமான அமைப்பைக்கொண்டது. இக்கோபுரம் 51.5 அடி உயரமும், 17.5 அடி விட்டமுங் கொண்டது. இக்கோபுரத்திலே ஐந்து வாசல்களும், ஐந்து கோபுரங்களும் காணப்படுகின்றன. கோபுரத்தின் அடித்தளத்திலே, கோவிலோடு தொடர்புடைய ஐதீகங்கள், சிற்பவடிவிலே பேசுஞ் சித்திரங்களாகக் காணப்படுகின்றன. சிவனும், சக்தியும் போட்டிபோட்டு ஆடிய திருநடனக்கோலங்கள், திருக்கல்யாணக்கோலம், பிள்ளையார், முருகன், பிரமன், ஆகியோரின் சிற்பங்கள் ஆகியன எழிலுடன் வடிக்கப்பட்டுள்ளன. அமாவாசையைப் பௌர்ணமியாக்கி அபிராமி பட்டருக்குக் காட்டிய காட்சி, சமயகுரவர் நால்வரின் அற்புதத் தோற்றங்கள், சிவபிரானின் தவக்கோலம், விஸ்வப்பிரம்மாவின் வடிவம் முதலியன இக் கோபுரத்திலே சிற்பவடிவிலே காணப்படுகின்றன. கோபுரத்தின் மூன்றாவது தளத்திலே பழனியாண்டவர், விநாயகர், சிவபெருமான் ஆகியோரின் உருவங்களும், நான்காவது தளத்திலே உமாதேவியார் முருகப்பெருமானுக்கு, சக்திவேலைக்கொடுக்கும் காட்சி, மற்றும் அர்த்தநாரீஸ்வரர், விஷ்ணு, பிள்ளையார், துவாரபாலகர் போன்றோரின் உருவங்களும் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. ஐந்தாவது தளத்திலே சரஸ்வதி, மகாலக்சுமி, மாரியம்மன், விநாயகர், முருகன் ஆகியோரின் உருவங்கள் பேசும் சிற்பங்களாக, கலைநயத்தோடு மிளிர்கின்றன.

*வளரும்...*




# அடக்குமுறை ஆட்சியை எதிர்க்கத் துணிந்த இளைஞர்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

இராணுவ ஆட்சி ஒன்றுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது மிகவும் ஆபத்தான ஒன்று. கைது செய்யப்பட்டு இருக்குமிடம் தெரியாமல் தடுத்து வைக்கப்பட்டு "நன்றாக கவனிக்கப்பட்டு" பின்னர் உயிர் தப்பினால் உலக அதிசயம் எனும் நிலையில் உருக்குலைந்த நிலையில் விடுவிக்கப்பட்டு பின்னர் நடைபிணமாக வாழும் நிலைக்கு தள்ளப்படுவர். அல்லது கடத்தல் அல்லது கைதோடு "கதை முடிந்தது" என்பதே பெரும்பாலும் நடைபெறும்.

ஜனநாயக ஆட்சி என்று கூறிக் கொண்டு மறைமுக இராணுவ ஆட்சியை முன்னெடுக்கும் நாடுகளிலும் நிலைமை இதுதான்.

இதற்கு சாமானியர்கள் முதல் நாட்டின் அதிபர் அல்லது பிரதமராக இருந்தவர்களும் விதிவிலக்கல்ல. பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி நடைபெற்ற போது நாட்டின் முன்னாள் பிரதமர் ஜுல்ஃபிகர் அலி புட்டோ அவரால் இராணுவத் தலைவராக நியமிக்கப்பட்ட முகமது ஜியா உல் ஹக்கால் தூக்கிலிடப்பட்டார்.



கடந்த கால வரலாற்றை புரட்டிப் பார்த்தால், நேரடியாகவோ அல்லது ஜனநாயகம் என்கிற போர்வையில் மறைமுகமாக இராணுவ ஆட்சி முன்னெடுக்கப்பட்ட நாடுகளில் பொருளாதாரம் நலிவடைந்து, சர்வதேச சமூகத்தால் தனிமைப்படுத்தப்பட்டு, மக்கள் அவல நிலைக்கு ஆளாகி, இன்னல்களும் வறுமையும் மட்டுமே நிலைத்திருந்தது என்பதை யாரும் மறக்க முடியாது.

ஜுல்ஃபிகர் அலி புட்டோவின் அரசியல் நேர்மை குறித்து விமர்சனங்கள் உண்டு. "கொடுங்கோலன்" முகமது ஜியாவுல் ஹக்கால் புட்டோ தூக்கிலிடப்பட்ட பிறகு அவர் ஆட்சி செய்த பத்தாண்டுகள் பாகிஸ்தானை பல தசாப்த்தங்கள் பின்னோக்கி இட்டுச் சென்றது.

அங்கு கல்வி, சுகாதாரம், சாலை மேம்பாடு, அடிப்படைக் கட்டமைப்புகள் ஆகியவை பின்னுக்கு தள்ளப்பட்டு, மதரீதியிலான செயல்பாடுகள், இஸ்லாமிய ஷரியா சட்டத்தின் அமலாக்கம், நீதிமன்றங்களின் அதிகாரப் பறிப்பு, மதரசாக்களுக்கான ஆதரவு, இராணுவச் செலவினங்கள் தேவைக்கும் அதிகமாக செய்யப்பட்டது, மதநிந்தனைச் சட்டம் என்ற பெயரில் சிறுபான்மையினரைக் கொடுமைப்படுத்தல் ஆகியவை நடைபெற்றன.

அதன் விளைவுகளை இன்றும் பாகிஸ்தான் அனுபவித்து வருகிறது. சமூக முன்னேற்றம், பெண்கள் கல்வி, அடிப்படை கட்டமைப்பு வசதிகள், விவசாயம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படாமல் இருந்தது பாகிஸ்தானின் பொருளாதாரத்தை அதலபாதாளத்திற்கு தள்ளியது.

இராணுவ ஆட்சி நடைபெற்ற பல நாடுகளில் மத அடிப்படை வாதம் பெருமளவுக்கு வளர்ந்து அது பின்னர் "அடக்க முடியாத பூதமாக" உருவெடுத்தது என்பது உண்மை.

இதற்கு ஆசியாவில் பர்மா, பாகிஸ்தான், வங்கதேசம், சீனா, கம்போடியா, இரான், இந்தோனீசியா என்று பல உதாரணங்களைக் காட்ட முடியும். ஆப்ரிக்காவில் அல்ஜீரியா, பெனின், புர்கினா ஃபாசோ, சாட், மாலி, மத்திய ஆப்ரிக்க குடியரசு, சாட், உகாண்டா என்று பட்டியல் நீளும்.

கொடுங்கோல் ஆட்சி நடக்கும் போது, அதற்கு எதிராக குரல் கொடுப்பது மிகவும் ஆபத்தானது. அப்படிக் குரல் கொடுத்தவர்கள் காணாமல் போவது சர்வ சாதாரணம். அவர்கள் காணாமல் போகாமல் இருந்தாலும் குரல்வளை நெரிக்கப்பட்டு நடைபிணமாக வாழும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.



மேலே கூறியுள்ளவை அனைத்தும் இலங்கைக்கும் பொருந்தக் கூடும். அங்கு இராணுவ ஆட்சி நடைபெறவில்லை, ஜனநாயக ரீதியில் தேர்தல் நடத்தப்பட்டு அதில் வெற்றி பெற்றவர்களே ஆட்சியை நடத்துகின்றனர் என்றாலும் பல செயல்பாடுகள் இராணுவ ஆட்சிக்கு ஒப்பாக உள்ளன என்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடும் விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன.

இலங்கையில் பௌத்த பேரினவாதம் வலுப்பெறுவது, அதன் காரணமாக சிறுபான்மை மக்கள் அச்சுறுத்தப்பட்டு அவர்களின் உரிமைகள் நசுக்கப்படுவது, சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தின் பங்கு, போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேவையில்லாமலும், தேவைக்கு அதிகமாகவும் இராணுவம் நிலை கொண்டுள்ளது ஆகியவற்றை அவர்கள் உதாரணமாகக் காட்டுகிறார்கள்.

இந்தக் கட்டுரையின் நோக்கம் நேரடியான இராணுவ ஆட்சி அல்லது ஜனநாயகம் என்கிற போர்வையில் இராணுவ ஆட்சியை நடத்தும் நாடுகள் அல்லது அங்கு ஏற்படும் சீர்கேடுகளை எப்படி தனி நபர்களால் எதிர்த்து சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்க முடியும் என்பதை ஒரு உதாரணத்தின் மூலம் அலசுவதேயாகும்.

தனியொரு நபரால் இராணுவ ஆட்சியை எதிர்த்து வெற்றி பெறுவது மிகவும் சவாலான ஒன்று. அந்த தனி நபருக்குப் பின்னால் ஒரு இயக்கம் மற்றும் மக்களின் பேராதரவு இருந்தால் மட்டுமே அது சாத்தியமாகும். ஆனால் தனி நபர் ஒருவரால் தனது சொந்த நலனை தியாகம் செய்து நல்லதொரு எதிர்கால வாய்ப்பையும் பறிகொடுத்து தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார் பர்மாவின் நீச்சல் வீரர் வின் ஹ்டெ ஊ (Win Htet Oo) டோக்யோ ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபெறும் தனது கனவை கைவிட்டுள்ளார்.

தனது தாய்நாடான மியான்மாரில் (பர்மா) இராணுவ ஆட்சி நடைபெறும் நிலையில் "தான் டோக்யோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்றால் அது அந்த இராணுவ ஆட்சிக்கான பிரச்சாரமாக அமைந்துவிடும்" என்றா வின் ஹ்டே ஊ கருத்து வெளியிட்டுள்ளார்.



மியான்மாரின் முன்னணி நீச்சல் வீரரான அவர் இராணுவ ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், தான் எதிர்வரும் டோக்யோ ஒலிம்பிக் போட்டியில் பங்குபெறப் போவதில்லை என்று அறிவித்துள்ளார்.

"தற்போதுள்ள சூழலில் மியான்மார் தேசிய ஒலிம்பிக் குழுவின் சார்பில் சார்பில் நான் பங்குபெற்றால், அது இப்போது ஆட்சி செய்யும் கொலைகார ஆட்சியை அங்கீகரிப்பது போலாகும், மேலும் அந்த ஆட்சிக்கு நியாயத்தன்மைக்கு அங்கீகாரம் அளிப்பது போலாகிவிடும்" என்று தனது ஃபேஸ்புக் பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

அவரது மன வேதனையும் உணர்ச்சிக் கொந்தளிப்பும் அவரது பதிவில் மிகவும் தெளிவாகத் தெரிகிறது.

"நான் துவக்க விழா பேரணியில் பங்குபெற மாட்டேன். எனது மக்களின் ரத்தம் தோய்ந்த கொடியை ஏந்திச் செல்லும் குழுவுடன் என்னால் செல்ல முடியாது".

அவர் கூறியுள்ள கருத்துக்கள் மிகவும் அர்த்தம் பொதிந்தவை. அங்கு இராணுவ ஆட்சி எந்தளவுக்கு மோசமாக நடந்துகொள்கிறது என்பதை அவரது வார்த்தைகள் காட்டுகின்றன.


பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழும் பர்மாவில் ஜனநாயக ஆட்சியைவிட மிக நீண்டகாலம் இராணுவ ஆட்சியே நடைபெற்றுள்ளது. அங்கும் "அனைத்திலும் பௌத்தம், பிக்குமார்கள் அனைத்திலும் மேலானவர்கள்" எனும் கருத்தாக்கம் வலுவாக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டது. அங்கு கல்வி மற்றும் வர்த்தகத்தில் ஆளுமை செலுத்திவந்தனர். இராணுவ ஆட்சி மற்றும் பௌத்த பேரினவாதம் ஆகியவற்றின் காரணமாக சிறுபான்மையினரின் நலன்கள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டன. இலங்கையில் இனக்கலவரங்களின் போது எப்படி தமிழ் மக்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டதோ அதேபோன்று பர்மாவிலும் நடைபெற்றது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து வியாபாரத்தைற்காக சென்று அங்கு கோலோச்சிய நகரத்தார் என்றழைக்கப்படும் செட்டியார்கள் மற்றும் இதர வேலைகளில் இருந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் பாதிக்கப்பட்டு அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டனர்.

இலங்கையில் தமிழர்களுக்கு நடைபெற்ற அதே கொடுமைகள் பர்மாவிலிருந்த தமிழர்களுக்கும் நடைபெற்றன. அது வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் அங்கு "ரோஹிஞ்சா" முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழுத்து விடப்பட்டன. இதையடுத்து நாடு பல நெருக்கடிகளை சந்தித்தது. ஆங் சான் சூ சீ அம்மையார் தலைமையிலான தேசிய ஜனநாயக லீக் தேர்தலில் பெரும் வெற்றி பெற்று ஜனநாயக ரீதியில் ஆட்சியைப் பிடித்தாலும், ஆட்சியில் இராணுவத்தின் ஆதிக்கம் கணிசமான அளவில் இருந்தது. அதனால் இலங்கையைப் போலவே பன்னாட்டு எதிர்ப்புகளைச் சந்திக்க நேர்ந்தது.

இந்நிலையில் கடந்த பிப்ரவரி ஒன்றாம் திகதி நடைபெற்ற இராணுவ சதிப்புரட்சியில் சிவிலியன் தலைவரான ஆங் சான் சூ சீ தலைமையிலான ஆட்சி கலைக்கப்பட்டு இராணுவ ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது. வெளிநாட்டவர் ஒருவரை திருமணம் செய்து கொண்டதால் சூ சீ அம்மையாரால் நாட்டின் அதிபராக முடியாது. எனினும் அரசின் ஆலோசகர் எனும் புதிய பதவி அவருக்காக உருவாக்கப்பட்டது. நாட்டில் அதிபர் என்று ஒருவர் இருந்தாலும், உண்மையான ஆட்சி அதிகாரம் அம்மையாரிடமே இருந்தது.

பிப்ரவரி மாதம் ஜனநாயக ஆட்சி கலைக்கப்பட்டு இராணுவ ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்ட பிறகு அதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஏராளமான மக்கள் வீதியில் இறங்கிப் போராட ஆரம்பித்தனர். நாட்டில் ஜனநாயக ஆட்சி மீண்டும் செயல்பட வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கை.



இராணுவ ஆட்சிக்கு எதிராக எழுந்த மக்கள் புரட்சியை அடக்க பாதுகாப்புப் படைகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இதுவரை 750 பேருக்கும் மேலான போராட்டக்காரர்கள் பலியாகியுள்ளனர் என்று அங்கு நடைபெறும் போராட்டங்களை கண்காணிக்கும் குழுவொன்று தெரிவிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதையே நாட்டின் நீச்சல் வீரரான ஹ்டெ ஊ தனது ஃபேஸ் புக் பக்கத்தில் எழுதியுள்ள பதிவில் வெளிப்படுத்தியுள்ளார்.

"விளையாட்டு வீரர்களும் சத்தியாகிரக போராட்டத்தில் பங்குபெற முடியும் என்று பர்மிய மக்களுக்குக் காட்ட வேண்டும் என்பதே எனது விருப்பம்" என்று தற்போது ஆஸ்திரேலியாவின் மெல்பர்ண் நகரில் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் வின் ஹ்டெ ஊ கூறுகிறார்.

"ஒலிம்பிக் துவக்க விழாவில் தேசியக் கொடியுடன் நடை பவனி மேற்கொள்ளும் வீரர்கள் மத்தியில் போலியாகச் சிரித்துக் கொண்டு, நாட்டில் அனைத்துமே இயல்பாக உள்ளது எனும் தோற்றத்தை வெளிப்படுத்த எனக்கு விருப்பமில்லை - அது உண்மையில் எனக்கு எரிச்சலூட்டுகிறது. அது இராணுவ ஆட்சிக்கு பிரச்சாரமாக அமைவதோடு மட்டுமின்றி ஒலிம்பிக் விழுமியங்களைக் குறைத்து மதிப்பிடுவதும் ஆகும்".

பொதுமக்களின் நியாயமான போராட்டங்களை நசுக்க முயன்ற பல இராணுவத் தளபதிகள் மற்றும் உயரதிகாரிகளின் நடத்தை காரணமாக மியான்மார் மீது பிரிட்டன், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை பயணம் மற்றும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

கடந்த 2019ல் தென்கிழக்காசிய விளையாட்டுப் போட்டிகளில் ஹ்டெ ஊ ஆடவருக்கான 50 மீட்டர் ஃபிரீ ஸ்டைல் நீச்சல் போட்டியில் பங்கேற்று டோக்யோ ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தகுதி பெற்றிருந்தார். ஆனால் மனசாட்சி இடம் கொடுக்காததால் குருதி படிந்த கொடியின் கீழ் பங்கேற்க அவர் விரும்பவில்லை. எனவே தன்னை ஒலிம்பிக் கொடியின் கீழ் சுயாதீனமாகப் பங்கேற்கும் வீரராக அனுமதிக்கும்படி அவர் சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்திடம் விண்ணப்பித்திருந்தார்.



ஆனால் அந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளது. அதற்கு சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் - ஐஓசி - கூறிய காரணம் விந்தையானது. "தாமதிந்த வகையில் அவர் பர்மிய அணியில் தேர்வு செய்யப்படவில்லை". ஆனால் அவர் ஏற்கனவே தகுதி பெற்றிருந்தாரே! இது ஐஓசிக்கு தெரியாதா? ஒரு வகையில் உலகளவில் பல விளையாட்டு அமைப்புகளும் இராணுவ ஆட்சியைப் போலவே நடந்து கொள்கின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மை.

இலங்கைக்கும் மியான்மாருக்கும் நிறைய ஒற்றுமைகள் உள்ளன என்று நீங்கள் கூறுவது கேட்கிறது!

# இதை நான் எழுதுவதனாலும் பயங்கரவாதி எனப்படலாம்!

- தீபச்செல்வன்

முன்னாள் விடுதலைப் புலிப் போராளியான எனது நண்பன் ஒருவன், சிங்கள இராணுவத்தின் வதைமுகாமில் இருந்து விடுவிக்கப்பட்டவுடன் நாட்டை விட்டு வெளியேறிக் கொள்வது என முடிவெடுத்தான். அவனிடம் அப்போது பெரிதாக எதுவுமில்லை. போர்க்களக் கடற்கரையின் ஓரமாக குண்டுபட்டு செத்துப் போன தன் தாயையும் தங்கையையும் மணலை கிளறி புதைத்துவிட்டான். அவன் தந்தை அப்போது நிலைகுலைந்ததுதான். அதன் பின்னர் அவர் திரும்பி வரவே இல்லை. யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, பலரும் ஊர் திரும்பிய போதும் அவர் திரும்பியிருக்கவில்லை. இவன் சிறைவாசம் அனுபவித்து வந்தவுடன் சில மாதங்களாக தன் தந்தையை தேடிக் களைத்துப் போயிருந்தான்.

அவனிடம் இருந்தது ஒரு சிறிய நிலத்துண்டு மாத்திரம் தான். அதில் ஒரு குடிசையைக்கூட கட்டிக்கொள்ள அவன் மனம் ஒப்பவில்லை. பதிவுகள், காணிச் சான்றுகள் ஏதுமற்ற அந்த நிலத் துண்டை தவித்த முயல் அடிக்கும் கதையாய் வாங்கவும் சிலர் வந்துபோனார்கள். ஒரு நாள் பின் மாலைப் பொழுது, கிளிநொச்சி நகரத்தில் துவிச்சக்கர வண்டியில் என்னை விலத்திப் போன அந்த நண்பன், எனை அழைத்து தனது துவிச்சக்கர வண்டியை நிறுத்திவிட்டு தான் நாளையே நாட்டை விட்டு போகப் போவதாக கூறினான். இந்த நாட்டை விட்டு வெளியேறுவதுதான் அவனுக்கு விடுதலைதரக்கூடியதா என எனக்குள் கேள்வி எழுந்தாலும் அதுவே அவனுக்கு மருந்தாகவும் இருக்கக் கூடும் என்றுதம் நினைத்துக் கொண்டேன்.

நான் ஒரு கணம் அதிர்ந்தேன். எனக்கும் நிலைகுலைவாக இருந்தது. பள்ளிக்கூடம் வேண்டாம். படிப்புத் தேவையில்லை. பாவடைத் தாவணியின் பின்னே சுற்ற நேரமில்லை என்று விடுதலைப் போராட்டத்தில் இணைந்த என் நண்பனுக்கு இப்போது நாட்டை விட்டு வெளியேறி விட வேண்டும் என்ற தவிப்பு ஏன் ஏற்பட்டது. அவன் நேசித்த இந்த மண்ணை விட்டு வெளியேற வேண்டும் என்று ஏன் நினைத்துக் கொண்டான். நம் நகரத்தில் வசிப்பவன் ஒருவனை இழந்துவிடுகிறோம், அல்லது விலகியிருக்கப் போகிறோம் என்பது வருத்தம் தருவதுதான். இந்த மண்ணில் இருந்து ஏதோ ஒரு வித்தத்தில் நாம் மெல்ல மெல்ல துடைக்கப்பட்டுக் கொண்டிருப்பதே அச்சத்தை பெருக்குகிறது.

ஈழ நிலம், பல்வேறு துயரங்களின் குறீயீடாக இருக்கிறது. ஈழ நிலம், பல்வேறு குரல்களின் குறியீடாக இருக்கிறது. இந்த நிலத்தில் தம் புத்திரர்களை பறிகொடுத்த தாய்மார்களின் கண்ணீர் ஒரு பெருத்த நதியைப் போல் பாய்ந்து கொண்டிருக்கிறது. தம் புத்திரர்களைத் தேடி அலைகின்ற தாய்மாரின் வறண்ட தொண்டைக் குழிகள் நெருப்பின் பாலைவனமாக தகிக்கிறது. எங்கள் தெருக்களின் ஓரங்களில் கண்களுக்கு தென்படுகின்ற மெலிந்து ஒடிந்துபோன தாய்மார்களிடம் தம் புத்திரர்களை தேடும் நெடுங்கதைகள் இருக்கின்றன. கால்கள் தேய்ந்து, வீதியின் ஓரமாக சரிந்து கிடந்த தாயொருத்தியைக் கண்டபோது இருதயமே ஊதிப்பெருத்தது.

சிலர் சொல்லுகிறார்கள், அந்த மண்ணில் போர் முடிந்துவிட்டது. எல்லாமே தீர்ந்துவிட்டதென. ஆனால் இங்கே துயரத்தின் நெருப்பு இன்னமும் தணியவில்லை. அது ஒரு அடர்ந்த வனத்தை மெல்ல மெல்ல எரியூட்டுவது போல் பரவிக் கொண்டிருக்கிறது. சிங்கள அரசும் சொல்கிறது இப்போது தமிழர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என. சில காலத்தில் இப்போது இலங்கையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஏனென்றால் தமிழர்களும் இல்லை என்று சொல்லக்கூடும். வீதிகளை செப்பனிடுவதும் காப்பெற் இட்டு விரைவுச் சாலைகள் ஆக்குவதும், பாலங்களை அமைப்பதும், அழிக்கப்பட்ட கட்டடங்களை சீமெந்தால் பூசி மீள் நிர்மாணிப்பதையும் செய்து விட்டால் எல்லாக் காயங்களும் மறைந்துவிடும் என்று பாசாங்கு செய்கிறது சிங்கள அரசு.

அத்துடன் போரில் எவரும் கொல்லப்படவில்லை என்று சில வேளை சொல்லுகின்றது சிங்கள அரசாங்கம். இப்போது அரசுக்கு எதிராகவும் அன்றைக்கு இனவழிப்புப் போரில் தமிழ் மக்களுக்கு எதிராகவும் நின்ற முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா, போரில் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பதை பல வருடங்களுக்குப் பிறகு ஏற்றுக் கொண்டுள்ளார். இதுவொரு முக்கியமான வாக்குமூலம். சில ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாகவே இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் போரில் ஒன்றரை லட்சம் மக்கள் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு லட்சத்திற்கும் மேலானவர்கள் அழிக்கப்பட்டுள்ளனர்.

இப்போது பலருடைய உதடுகளில் ஒரு வாசகம் உச்சரிக்கப்படுவதை பார்கிறேன். "பேசாமல் இந்தப் போரிலேயே செத்துப் போயிருக்கலாம்.." ஆனால் இந்தப் போரில் கொல்லப்பட்டவர்களுக்கான நீதி தேவை என்பதற்காகவும் ஈழ நிலம் போராடிக் கொண்டிருக்கிறது. அந்த நீதி கிடைத்திருந்தால் மேற்படி வார்த்தைகள் நம் சனங்களிடமிருந்து வந்திருக்காது. ஆனால் இப்போது எங்களுக்கு பிரமாண்ட வீதிகள் வேண்டாம். மேம்பாலங்களும் வேண்டாம். மிகப் பெரிய மாடிக் கட்டிடங்கள் வேண்டாம். எங்கள் காயங்களை ஆற்றுவதற்கு நீதி



தேவைப்படுகிறது. நீதிதான் இப்போது மருந்து.

கொல்லப்பட்டவர்கள் பாக்கியசாலிகள் என நம் சனங்கள் சொல்கிறார்கள். இங்கே இன்னொரு கொடுமை துவங்குகிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் போல அபாக்கியசாலிகள் வேறு யாருமில்லை. போரில் கொல்லப்பட்டவர்களை சில சமங்களில், சில கணங்களில் மறந்தும் இருந்து விடுகிறோம். போரில் கணவனை இழந்த ஒரு பெண் இன்னொரு துணையை தேடிக் கொண்டு தன் குழந்தைக்கான வாழ்க்கையை வேறு விதமாக மாற்றிக் கொள்கிறாள். போரில் தன் பிள்ளையை பலி கொடுத்த தாய், அதற்கு கிரியைகளை செய்துவிட்டு தன் மனசை ஆற்றிக் கிடக்கிறாள்.

ஆனால் பிள்ளையை காணாமல் ஆக்கப்படுவதற்கு கொடுத்த தாய் வாழவும் முடியாமல் சாகவும் முடியாமல் தவிக்கிறாள். பிள்ளை இருக்கிறானா? இல்லையா என்று தெரியாத பெருந்தவிப்பு அது. தன் வீட்டுப் படலைச் சத்தம் கேட்கும் ஒவ்வொரு கணத்திலும் நம்பி எழுந்து ஏமாந்து துடிப் போகிற அவளுக்கு கிடைத்திருப்பது பெரும்வாதை. இந்த அரசு இனவழிப்புப் போரில், இனப்படுகொலை வாயிலாக ஈழத் தமிழ் இனத்தை பெரும் வாதைக்கு உட்படுத்தியது என்றால், காணாமல் ஆக்கப்படுவதன் வாயிலாக அதனை பன்பமடங்கு வாதைக்குள் தள்ளியிருக்கிறது என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

அந்த வாதை மெல்ல மெல்ல நம் நிலத்தைக் கொன்றபடியிருக்கிறது. தாய்மார்களை, பிள்ளைகளை, மனைவியரை அது மெல்ல மெல்ல அழித்துக் கொண்டிருக்கிறது. ஆனந்த சுதாகர் என்ற தமிழ் அரசியல் கைதியைத் தேடித் தேடியே அவரது மனைவி தன் உயிரை துறந்துகொண்டாள். தேடலும் துயரமும் அவளை நோய்மையில் தள்ளியது. உயிருடன் இருக்கும் வரையில் பார்க்க முடியாதுபோன அவள் கணவன், அவள் அதற்காய் உயிர் துறந்து கிடந்த தருணத்தில் அந்து பார்ப்பது எவ்வளவு துயரத்தின் கோரம்?

ஆனந்த சுதாரகனுக்கு இரண்டு குழந்தைகள். அவர்கள் எந்தப் பாவமும் அறியாதவர்கள். தம் தாயை நோய்மைக்கு பலி கொடுத்து, நடத் தருவில் அந்தரித்து நின்றபோது ஸ்ரீங்கள அரசை நோக்கி, தம் தந்தையரை விடுவிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்கள். இறுதிவரையில் அரசு கண்திறக்கவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் எட்டு அப்பாவித் தமிழ் மக்களை படுகொலை செய்த குற்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட சுனில் ரத்நாயக்காவை இன்றைய இலங்கை அதிபர் கோத்தபாய ராஜபக்ச, பொதுமன்னிப்பு அளித்து விடுவித்தார். இலங்கையின் நீதி இப்படியாகத்தான் இருக்கிறது. அது தமிழர்களுக்கு ஒரு விதமாகவும் சிங்களவர்களுக்கு இன்னொரு விதமாகவும்தான் இருக்கிறது.

இப்போது சிங்கள அரசாங்கம், இன்றைய தமிழ் இளைஞர்களை கைது செய்கின்ற படலத்தை துவங்கியுள்ளது. வடக்கு கிழக்கில் காரணம் ஏதுமின்றி கைது செய்யப்படுகின்ற இளைஞர்களின் பெற்றோர்களிடம் எழுத்துமூலமாக ஒரு காரணம் சொல்லப்படுகிறது. "விடுதலைப் புலிகளை மீள உருவாக்க முயற்சித்தார் என்ற குற்றத்தில் உங்கள் பிள்ளையை கைது செய்கிறோம்" என்று அறிவிக்கிறார்கள். தினக்கூலி வேலைகளுக்குச் சென்று தம் குழந்தைகளுக்கு பால்மா வாங்கி வருவதுதான் விடுதலைப் புலிகளை மீள உருவாக்குகின்ற நடவடிக்கையா? அண்மையில் கிளிநொச்சியில் ஒரு போராட்டத்தில், பிறந்து சில மாதங்களேயான ஒரு பச்சைக் குழந்தை தன் தந்தையின் விடுதலைக்காக வெயிலில் தவம் கிடக்கிறது.

இல்லாத விடுதலைப் புலிகளுக்காக ஏன் இந்தக் கைதுகள்? தமிழ் மக்களை கைது செய்து சிறையில் அடைத்து அவர்களின் வாழ்க்கையை குலைப்பதற்காகவே இந்தக் கைதுகள் நடக்கின்றனவா? ஏற்கனவே பல நூறு இளைஞர்கள் சிறைகளில் வாடுகின்றனர். அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்கிற போராட்டம் நெருப்பாய் தொடர்கிறது. காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளைத் தேடியே எம் தாய்மார் அலைகின்றனர். இன்னுமின்னும் துயரம் இந்த நிலத்தில் பெருகுகிறது. இந்த நிலையில் எஞ்சியிருப்பவர்களையும் சிறையில் அடைத்து, இந்த நிலத்திதிலிருந்து நம்மை துடைக்கிறது சிங்கள அரசு. இந்த மண்ணில் எந்தக் காரணத்தையாவது சொல்லி, எவரும் சிறையில் அடைக்கப்படலாம். இல்லாமல் ஆக்கப்படலாம். அழிக்கப்படலாம். ஏன் இந்தப் பத்தியை நான் எழுதுவதனாலும் பயங்கரவாதி எனப்படலாம்.

மிகச் சமீபத்தில், என் பாடசாலைக்கு வயல்வெளி வழியே செல்லுகின்ற ஒரு வீதியின் ஊடாக பயணம் செய்து கொண்டிருந்தேன். நாட்டை விட்டு வெளியேறிய என் நண்பன், விதைநெல்லை அள்ளி உழுத நிலத்தில் வீசிக் கொண்டிருந்தான். உக்ரேனை தாண்டிச் சென்றுவிட்ட பிறகு, இந்த மண்ணை விட்டு இனியும் கடந்தால் உயிர் பிரிந்துவிடுமோ என அஞ்சி நாட்டிற்கே திரும்பிவிட்டேன் என்றான். இந்த மண்ணை விட்டு வாழவும் முடியாது, இந்த மண்ணில் நாம் வீழ்ந்துவிடவும் முடியாது என்பதைதான் என் போராளி நண்பனின் முகத்தில் படித்துக் கொண்டேன்.



# உரும்பிராய் இரசாயன உரக் கலப்பற்ற வீட்டுத் தோட்ட முகவர் நிலையத்தின் முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் உரும்பிராயில் சில வருடங்களுக்கு முன்னர் கனடாவில் வாழும் திரு. சிவக்கொழுந்து மகேந்திரனால் ஆரம்பிக்கப்பெற்ற இந்த இரசாயன உரக் கலப்பில்லாத வீட்டுத் தோட்ட முகவர் நிலையம் ஆயிரக்கணக்கான காய்கறிக் கன்றுகளை இயற்கைப் பசளை கொண்டு வளர்த்து மக்களுக்கு விநியோகிக்கத் தொடங்கியுள்ளது.

அங்கு மிகக் குறைந்த விலைக்கே இந்தக் கன்றுகள் விற்பனை செய்யப்படுகின்றன.

கத்தரி, மிளகாய், வெண்டைக்காய், கறி மிளகாய், பாகற்காய் புடோல், போன்ற பல வகை காய்கறிக் கன்று இங்கு விதை போட்டு வளர்க்கபபட்டு தற்போது விநியோகம் செய்யப்படுகின்றன.

இவ்வாறான கன்றுகளின் ஒரு தொகுதியை அங்குள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வழங்கி ஆதரவு வழங்க வேண்டும் என்பதே திரு. சிவக்கொழுந்து மகேந்திரனின் நல்லெண்ணம் ஆகும். இதன் மூலம் அங்கு வறுமையில் உள்ளவர்களுக்கு வாழ்வாதாரத்தையும் நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்கலாம்.




**ஒரு குடும்பத்திற்கு 100 டாலர்கள் போதுமானது**

யாழ்ப்பாண மாவட்டத்தில் எந்த ஒரு கிராமத்திலும் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு இவ்வாறான காய்கறிக் கன்றுகளை இலவசமாக வழங்க உதவி புரிய விரும்பும் அன்பர்கள் மற்றும் அமைப்புக்கள் இந்த முயற்சிக்கு ஆதரவளிக்கலாம்.

கனடாவில் திரு. சிவக்கொழுந்து மகேந்திரனை அழைக்கவும்: **(437) 335-5424**

# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario
ACCREDITED WITH COMMENDATION — ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



# BEST INDIAN ASTROLOGER & PSYCHIC
## Pandit: VEERANANDA

காசியில் இருந்து வருகை தந்துள்ளார்

31 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 11 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்




உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே

இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவார்



**MOST POWERFUL SPIRITUALIST**

Family, Money, Childless, Health, Depression, Negativity, Husband Wife, Relationship, Marriage, Enemy, Court, Jealousy, Business, Work,Curses

- கை பார்த்து, முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். படைப்படம் பார்த்து
- ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,
- இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
- செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி,
- நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம்,
- காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு சொல்லப்படும்
- ஏந்தப் பிரச்னையாக இருந்தாலும் 5 நாட்களில் தீர்வு காண்பார

## Removes Black Magic, Jadoo, Vodoo, Obeya, Witchcft, Jinn Curses, & Gives 100% Protection

- சர்க்கரை வியாதி
- ஆஸ்துமா
- தீராத கை-கால் வலி
- அல்சர்
- தோல் வியாதி
- அலர்ஜி
- மூட்டு வலி
- உடல் பருமான்
- அதிகரிக்க – குறைக்க
- காக்கா வலிப்பு
- ஆண்மை குறைவு
- ஞாபக சக்தி குறைவு
- மூலம்
- சிறுநீர்க் கோளாறு
- பெண்களுக்கான
- மாதவிடாய் பிரச்சனைகள்
- நரம்புத் தளர்ச்சி
- சரவாங்கி
- வாயுக்கோளாறு
- தலைவலி
- கழுத்து வலி
- முகப்பரு, தேமல்
- வெண்குட்டம்
- வாதம்
- மஞ்சல் காமாலை
- முடி உதிர்வு, உட்டணம்
- பக்கவாதம்
- நரம்பு வாதம்

எந்தவித பக்கவிளைவுகளும் கிடையாது நம்பி வாரீர் நலமுடன் வாழ்வீர்

**ஆயுர்வேத சிகிச்சை**

## Call For Appoinment: 647-858-3355

1101 Victoria Pank Ave, # 3 , Scarborough ON M4B 2K2

Opp. NO FRILLS, ( VICTORIA PARK & ST CLAIR AVE )

# இவ்வார ராசிபலன்

**07-05-2021 வெள்ளி தொடக்கம் 13-05-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** ஆனந்தப் பயணமும் அதிஅற்புத மகிழ்ச்சியும் கிடைக்கக்கூடிய நல்ல வாரம். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். சொத்து சேர்க்கை உண்டு. உழைப்பில் கவனம் தேவை. கோரிக்கை நிறைவேறும். மனை வாங்கும் யோகம் உண்டு. பொருளாதார வளம் மேம்படும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சந்திரபகவான், அதிர்ஷ்ட எண்: 1,8,2,5
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,S




**ரிஷபம்:** முற்பகலிலேயே முக்கிய மாற்றங்கள் நிகழக்கூடிய நல்ல வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பிரம்மசக்தி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,M




**மிதுனம்:** வாட்டி வதைத்த வருத்தங்கள் வக்கனையாய் விலகக்கூடிய நல்ல வாரம். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெருமைகள் சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பணத் தேவை அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷம் தாமதமாகும். புகழ் கூடும். அந்தஸ்து உயரும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புகள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனகசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,2,5,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D




**கடகம்:** கடைத்தெடுத்த கவலைகள் காணாமல் போகக்கூடிய நல்ல வாரம். முகப் பொலிவு கூடும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய்வழி உறவில் கவனம் தேவை. பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 7,4,5,2
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,N




**சிம்மம்:** மெல்லிய ஆசைகள் கண்ணியத்தோடு நிறைவேறக்கூடிய அற்புதமான வாரம். தனவரவு பெருகும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. புதிய நட்பு உருவாகும். பழைய கடன் தீரும். உதவும் குணம் அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலைகள் உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உடல் நிலையில் கவனம் தேவை. உறவினர் வருகை உண்டு. வணிகத்தொழில் வளம் கூடும். பழைய பாக்கி வசூலாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மருதகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,2,1,6
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,S




**கன்னி:** ஆரோக்கியத்தில் திருப்தி கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். உற்சாகம் அலை மோதும். பணக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றம் தெளிவு கூடும். ஏற்றங்கள் அமையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கைலாசநாதப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,0,7,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,L




**துலாம்:** ஆலய தரிசனத்தால் ஆத்ம பலம் பெருகக்கூடிய அற்புதமான வாரம். தேக ஆரோக்கியம் கூடும். உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத் தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில்மேன்மை உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. இடமாற்றம் உண்டு. தடுமாற்றம் ஏற்படும். எதிர்ப்புகள் விலகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: உச்சிப்பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 4,5,3,0
அதிர்ஷ்ட நிறம்: வாடாமலலி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,A




**விருச்சிகம்:** அறியாத அதிர்ஷ்டங்களை அறிந்துக் கொள்ளக்கூடிய அற்புதமான வாரம். விரக்திகள் மறையும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்பு கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கல்வி ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 8,1,7,6
அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,Y




**தனுசு:** இல்லத்திலும் மற்றவர் உள்ளத்திலும் மதிப்பு உயரக்கூடிய மகத்தான வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப்போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J





ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மகரம்:** விருப்பங்கள் நிறைவேறி திருப்பங்கள் நடக்கக்கூடிய வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: தேவிசெல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** சங்கடங்கள் விலகி சந்தோஷம் மிகுதியாகக் கூடிய நல்ல வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கஜமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மீனம்:** பூமியும், நிலமும் வாங்கக்கூடிய மேன்மையான வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வடிவுடைஅம்மன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M

---


**Flex Institute நிறுவனத்துடன் சேர்ந்து உங்கள்**
**கனடா செல்லும் கனவினை நனவாக்குங்கள்!**

நீங்கள் கனடாவுக்குச் செல்வதைப் பற்றிய கவலையா? உங்கள் கனவை நாம் நனவாக்குகின்றோம். இலங்கையின் முன்னணி கனேடிய விசா ஆலோசனை நிறுவனங்களில் ஒன்றான நற்பெயரை Flex Institute நிறுவனம் கொண்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் கனடா செல்லும் விண்ணப்பதாரிகளுக்கு எமது சிறந்த சேவையினை வழங்கி அதன் மூலம் அவர்களின் விசா விண்ணப்பங்களின் வெற்றியை உறுதிப்படுத்துகிறோம். நாம் முக்கியமாக எமது கனடிய விண்ணப்ப நிலையத்தின் மூலம் **Student Visa, a Student- Dependent, Open Work Permit, Visitor Visa, Visa Refusals, Family Visit Visa, Business Visit, and Super Visa Facilities**. வழங்குகிறோம். இதற்கென்றே எமது அனுபவமிக்க தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்கள் உங்களுக்கான உதவிகளை செய்வதற்கு காத்திருக்கிறார்கள். எந்த விதமான தங்குதடையோ, தாமதமோ இன்றி உங்களுக்கான விசாவினை கூடிய விரைவில் பெற்றுத் தருவதில் உத்தரவாதமளிக்கின்றோம். இதற்கென்றே அமைந்ததுதான் எமது On The Spot Consultation சேவை. எமது வாடிக்கயாளர்களில் பலர் மாணவர் முதல் பிற பிரிவுகள் வரை அவர்களது விசா விண்ணப்பங்களை வெற்றிகரமாகப் பெற்றுள்ளனர். **University of Canada, West Algoma University, Fanshawege College, Centennial College, Seneca College, Georgian College, Cambrian College, ST. Laurence College, University of Saskatchewan, Lakehead University**. போன்ற கனடாவிலுள்ள முன்னணி பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் கல்வி கற்பதற்காக விசாவினைப் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகளை நேருக்கு நேராக வழங்குவதுடன் விசாவினை பெற்றுத்தர உதவுவதுடன் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கல்வி மற்றும் நிதி பின்னணி குறித்து கவனமாக அவதானித்து அவர்களின் விருப்பத்திற்கேற்ப கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும் தேர்வு செய்ய நாம் உதவத் தயாராக உள்ளோம். எமது Flex Institute வாடிக்கையாளர், மாணவர்களின் மறுக்கப்பட்ட விசாக்களை பெற்றுத் தந்து அதன் மூலம் பலரது நன்மதிப்பையும் பெற்றுள்ளோம்.



ஆலோசனைகளை தவிர IELTS பயிற்சி நிலையம் ஒன்றினை அமைத்து ஆங்கில மொழியில் பரீட்சை **IELTS, Duolingo English Test, TOFEL and PTE (Academic)** பயிற்சி மற்றும் உதவிகளை செய்து தருகிறோம். ஒரு அனுபவமிக்க விசா நிறுவனமாக எம்மை நாம் உத்தரவாதம் அளிப்பதுடன் உங்கள் விசாவிற்கும் உத்தரவாதம் அளித்து உங்கள் கனடிய கனவு நனவாகும். என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

- இலவச ஆலோசனை
- புலமைப்பரிசில்கள்
- 1000க்கும் மேற்பட்ட கல்வித்திட்டங்கள்

Student Visa, Student Dependent, Business Visa, Family Visit Visa, Super Visa requirements சம்பந்தமான ஆலோசனைகள் வழங்கப்படும்.

Are You Looking For
**Canada**

- Student Visa
- Visit Visa
- Rejected visa
- Business visa
- Super Visa
- Tourist Visa

**Call us on: 0777 761 346**

flex Institute Step Towards a Bright Future
6A, Parakumba Place, Colombo 06.
Hotline: 0777 761346
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk
10 வருட கால நம்பிக்கையான சேவை

- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்



# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

#44



அடுத்து வரும் எங்கள் தலைமுறைப் பிள்ளைகளுக்கும், சிவாஜி ஐயா பற்றி ஆய்வு செய்ய முயலுவோர்க்கும் இத்தொடர் குறிப்புகள் உதவுமாயின் மிகுந்த மகிழ்ச்சியடைவேன் பெருமை கொள்வேன்!

முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு கருணாநிதி ஐயாவிடத்தும், நடிகர் திலகம் அவர்களிடத்தும் மிகுந்த பக்தியும், அன்பும் கொண்டு வாழ்ந்து வரும் மரியாதைக்குரிய கவிஞர் வைரமுத்து அவர்கள் சிவாஜி ஐயா பற்றி வியந்து வியந்து எழுதி வைத்ததைப் பார்ப்போம்.

"உங்கள் "பராசக்தி" வெளிவந்து ஓராண்டுக்குப் பிறகுதான் நான் பிறந்தேன்",

நீங்கள் விருட்சமாய் வளர வளர நான் விதையாய் முளைத்திருக்கிறேன்.

உங்கள் தோள்கள் பொன்னாடைகள் தரித்துக் கொண்ட பொழுதில் என் கால்சட்டைப் பொத்தான்களைச் சொந்தமாய் போட்டுக் கொள்ளும் சுயம் கூட இல்லை எனக்கு!

மார்கழி மாதத்துத் திருப்பாவையாய்... எனது வாழ்வின் வைகறையில் உங்கள் குரல் எங்கிருந்தோ வந்து என்னை எழுப்பியிருக்கிறது,

இழுத்துக் கட்டப்பட்ட வீணையின் நரம்புகளை தொடுத்துக் கட்டப்பட்ட கலைஞரின் தமிழ் உங்கள் நாவின் பசை தடவி என் இதய பரப்பில் வந்து அப்படியே அப்பிக் கொண்டது.

மனசின் மர்மப் பிரதேசங்களைத் துழாவித் தொட்டது உங்கள் குரல். எங்கள் பிஞ்சு வயதில் பிரம்மிக்க வைத்தது உங்கள் உருவம். உதடுகளால் பேச முடியாத வார்த்தைகளை உச்சரித்து காட்டியது உங்கள் புருவம்.

என்னோடு சண்டை பிடித்தது உங்கள் மௌனம். ராஜ தோரணையோடு இளவரசனாய் நீங்கள் எட்டு வைத்த போது, உங்கள் அரையின் இடப்பக்கத்தில் தொங்கியது வாள் வலப்பக்கத்தில் தொங்கியது நான்.

மனசு எழுதப்படாத சிலேட்டாய் இருந்த காலையில் சரித்திரபுருஷர்களை வரையப்போனால் உங்கள் உருவமே திரண்டு நின்றது. கட்டபொம்மனையும், கப்பலோட்டிய தமிழனையும் உங்கள் அசைவுகளின் மூலம் அடையாளம் கண்டுகொண்ட பிறகு நிஜங்கள் பிம்பமென்றும், இந்த பிம்பமே நிஜமென்றும் நம்பினேன்!

வித்தையில் கீரியும் பாம்பும் சண்டையிடா என்று தெரிந்தும் கடைசி வரை காத்திருக்கும் கிராமத்துச் சிறுவன் மாதிரி, புராணங்கள் பொய்யென்று தெரிந்த பிறகும் உங்கள் அபிநயங்களுக்காகவே ஆராதித்தேன்.

சொன்னால் நம்பமாட்டீர்கள். உங்கள் படங்களைப் பார்க்க போனபோது மட்டும் தான் கால் சட்டைப் பைகளில் நிரப்பிக் கொண்டு போன கடலைகளை தின்னாமல் திருப்பிக் கொண்டு வந்திருக்கிறேன்.

எங்கள் ஊரில் உப்புத்தண்ணீர்க் கிணற்றுக்கு பக்கத்தில் ஒட்டப்படும் சுவரொட்டிகள் ஈரம் காய்வதற்குள் வந்து வாசித்து விட்டு போகிறவன் நான் தான்.

"மனோகரா" பார்த்துவிட்டு அந்த உணர்ச்சியில் சிறிதும் சிந்தாமல் அப்படியே வீட்டுக்கு வந்து சங்கிலிக்குப் பதிலாய்த் தாம்பு கயிற்றால் என்னை பிணைத்து இருவரை இழுத்துப் பிடித்துக் கொள்ளச் செய்து விட்டு, புளியமரத்தைப் புருஷோத்தமராக்கி என்னை வசனம் பேச வைத்தவர் நீங்கள் அல்லவா?

வீரபாண்டிய கட்டபொம்மன் பார்த்துவிட்டு சோளத்தட்டையில் வாள் செய்து என்னை சுழற்றவைத்தவர் நீங்களல்லவா?

பாடல்களை உங்கள் உதடுகள் உச்சரித்து உமுகிற போது டிஎம் சௌந்தர்ராஜன் உங்களுக்காக பாடுகிறாரா..? இல்லை... டி எம் எஸ்சுக்காக நீங்கள் பாடுகிறீர்களா என்று நான் நெற்றி உயர்த்தி வியந்தது நிஜமல்லவா!

அப்போதெல்லாம் நினைத்தேனா உங்களுக்காக நான் இயற்ற போகும் பாடல் எனக்கு தேசிய விருது தேடித்தரும் என்று!

திரைப்படத்தின் மூலமாக எனக்கு கல்வி வந்தது. அந்த கல்வியில் ஒரு பகுதி உங்களால் வந்தது. மரபுரீதியான குணாம்சங்களை செல்லரித்த வாழ்க்கையின் வக்கரிப்புகளை நவீன வாழ்க்கையின் நச்சுப் பற்களில் சிக்கிச் சிக்கி சிதிலமாகப் போன பன்முகப் பாத்திரங்களை இந்த மண்ணில் இன்னும் அறுந்து போகாதிருக்கிற நல்லியல்புகளின் சல்லி வேர்களை எங்கள் கண்களுக்கும் காதுகளுக்கும் பக்கத்தில் வந்து வந்து பரிமாறியது நீங்கள்தான்!

கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக தமிழர்களின் சாயங்காலத்து சந்தோசம் நீங்கள்.

ஆனால் நான் ஒன்று சொல்வேன் நடிகர்திலகம் அவர்களே...! தமிழனாய்ப் பிறப்பதற்காய்ப் பெருமைப்பட்டுக் கொள்ள எவ்வளவோ காரணங்களுண்டோ அவ்வளவு காரணங்கள் சிறுமைப்பட்டுக் கொள்வதற்கும் உண்டு.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து", என்றுரோமே! தந்தோம் எவன் வாங்கிக்கொண்டான்..? வாங்கவில்லை!

முதற்காரணம் - நம் சுருங்கிய எல்லை. நம் எல்லையைப் போலவே குறுகியிருக்கும் மனோபாவம்.

ஒரு கலைஞனை உணரவோ உணர்த்தவோ முடியாத ஊமைத்தனம்.



என்னதான் ஏற்றினாலும் நம் தீபங்கள் திருவண்ணாமலைக்கு மேல் தெரிவதில்லை.

உங்கள் ஆற்றலுக்கு நீங்கள் இருந்து வருகிற உயரம் சரி, ஆனால் தெரிந்திருக்க வேண்டிய உயரம் இது அல்ல! என்னவோ வாயில் வராத பெயர்களை எல்லாம் வரிசைப் படுத்துகிறார்களே... மர்லன் பிராண்டோ - கிரிகிரிபெக் - ரிச்ட் பேட்டன் - ஓமர் ஷரிப் - சார்லஸ் பிரவுன்சன் - சீன்கொனரி - ஒலிவியாடி - ஹவில்லான்ட்...

இவர்களையெல்லாம் விட எங்கள் நாட்டின் இனிய கலைஞனே! நீங்கள் எத்தனை மில்லி கிராம் எடை குறைந்தீர்கள்?

அவர்களுக்கெல்லாம் இல்லாத சில ஆற்றல் உங்களுக்குண்டு. இன்று ஓரளவு விபரம் தெரிந்த பிறகும் கூட வியந்து தான் நிற்கிறேன்!

தனக்கொரு இமேஜ் என்ற எல்லையை கட்டிக் கொள்ளாமல் குருபியாய் - தொழுநோயாளியாய் - விழியிழந்தவராய் - மூத்து சிதைந்த மூத்தவராய் - குடிகாரனாய் - கொள்ளைக்காரனாய் - பிச்சைக்காரனாய் - அத்தனை பாத்திரங்களையும் ஏற்கத் துணிந்த உங்கள் ஆண்மையை வியக்கிறேன்!

மேல்நாடுகளில் ஒரு பாத்திரம் நடிக்க ஓராண்டு ஈராண்டு ஒத்திகை பார்ப்பார்களாம். எந்த பாத்திரத்திற்கும் ஒத்திகை தேவையில்லாத உங்கள் உன்னதம் கண்டு வியக்கிறேன்!

எந்த மனிதனைப் பார்த்தாலும் அவனை மனதிற்குள் சேமித்து வைத்து, தேவைப்பட்டபோது எடுத்துச் செலவழிக்கிறீர்களே அந்த வித்தையை அறிந்து ஆச்சரியம் கொள்கிறேன்!

இரண்டு மூன்று சிரிப்புகளை ஒட்டவைத்துச் சிரிப்பில் புதிய கலவைகளை கண்டுபிடித்தவர் நீங்கள் என்று வியக்கிறேன்!

உலக சினிமா வரலாற்றில் இந்திய சினிமாவுக்கு முக்கிய பங்கு இருக்கிறது. தமிழ் சினிமாவில் நடிகர் திலகத்திற்கு அதி முக்கிய பங்கிருக்கிறது!

அவர் நடித்ததால் தமிழ் படங்கள் உலகத் தரம் பெற்றன! நடிப்பின் வாயிலாக தமிழை உலகத் தரத்திற்கும் கொண்டு சென்ற நடிகர் திலகம் அவர்களே!

நீங்கள் பல்லாண்டு வாழ வேண்டும்... ஆம் அவர் தமிழர் உள்ளங்களிலெல்லாம் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்!

உண்மை கலைஞனுக்கு எந்த நிலையிலும் மறைவு இல்லை!

நடிகர் திலகத்திற்கும் - கவியரசு கண்ணதாசனுக்கும் அடிக்கடி உரசல்கள் வந்துபோகும். இருவருக்கும் இடையே இருக்கும் கலைச் செருக்கு அல்லது அரசியல் ஆளுமை என்று எடுத்துக் கொள்வோம். ஊடல் முடிவில் கூடுவது போல், மீண்டும் இருவரை ஒருவர் கட்டித் தழுவிக் கொள்வார்கள்.

சிவாஜி படங்களுக்குக் கவிஞர் எழுதிய வாழும் கவிதைகளையே சாட்சி!

கவியரசு கண்ணதாசன் சிவாஜி பற்றி எழுதி சென்றதை மீண்டும் நினைவூட்டுகிறேன்.

சிவாஜியைப் பற்றி சில வரிகள்...
எதை எழுதுவது
எதை விடுவது?
இமயமலையின் எந்த
மூலையைப் புகழ்ந்தால்
நியாயமாகவிருக்கும்?
கடலிலே எந்தப் பகுதி
அழகான பகுதி?
சிவாஜி ஒரு மலை
ஒரு கடல்
கண்களின்
கூர்மையைச் சொல்வேனோ?
அல்லது
கம்பீர தோற்றத்தை
சொல்வேனோ?



ஒன்பது பாவத்தை
90 வகையாகக்
காட்டும்,
உன்னத நடிப்பைச்
சொல்வேனோ?
அவரைப்போல் இதுவரை
ஒருவர் பிறந்ததில்லை
இனி பிறப்பார் என்பதற்கும்
உறுதியில்லை!
இது உண்மை உலகறிந்ததே!

மதிப்பிற்குரிய தமித்தலைவர் திரு வைகோ அவர்கள் சிவாஜி பற்றிக் கூறும் பொழுதெல்லாம் கவியரசு - எழுதிவைத்த வரிகளையே நினைவு கூர்ந்து தனது உரையை ஆரம்பிப்பார்!

நினைவுகள் தொடரும்.. வீணை மைந்தன்..

கட்டபொம்மனாக வேடம் ஏற்று வீரவசனங்கள் பேசும்போது சிவாஜி அவர்களின் தொண்டைக்குள் குருதி பாயுமா? அடுத்த இதழில்...

TRADITIONAL CHINESE
ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine
Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9





*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் #10)*

# வந்தியத்தேவனின் குடந்தைப் பயணம்...

அப்போது ஆழ்வார்க்கடியான் இது என்ன எனக்கு விளங்கவில்லை என்றார். அதற்கு இடும்பன்காரி 'நான் ஒன்றும் செய்யவில்லை உங்கள் கண்தான் விசித்திரம்' என்று பொய் சொன்னான். 'சரி நீ எங்கே போகி-றாய்' என்று இடும்பன்காரியிடம் ஆழ்வார்க்கடியான் கேட்க, அவன் 'தான் கடம்பூர் போகிறேன் இதோ படகு புறப்படப் போகிறது' என்றபடி நடந்து சென்றான். அப்போது ஆழ்வவார்க்கடியான் இடும்பன்காரி தன் கைகளை மீன் போல் காட்டினான் அதற்கு அர்த்தம் என்ன மீன் சின்னம் பாண்டியருடையது அல்லவா? இதில் ஏதோ மர்மம் உண்டு! என்று எண்ணியபடியே வெகு விரைவாக அங்கு நின்ற அரசமரத்தில் ஏறி உட்கார்ந்தான். இடும்பன்காரி படகை நோக்கிச் சென்றவன் திரும்பிப் பார்த்தான். ஆழ்வார்க்கடியான் அவன் கண்களிற்குத் தென்படவில்லை. உடனே திரும்பி வந்து அந்த அரசமரத்தடியில் உட்கார்ந்தான். நீண்ட நேரம் சென்றது. இடும்பன்காரியும் நாலாபுறமும் கண்களைச் சுழற்றியபடியே இருந்தான். யாரும் அங்கு வரவில்லை. ஆழ்வார்க்கடியானிற்கோ கால்கள் வலிக்க எப்படி இங்கிருந்து தப்புவது என்று ஆலோசித்தான். 'மரத்தின் மறுபக்கம் இறங்கி மெதுவாகச் செல்வோமா? சீ சத்தம் கேட்டால் அவன் இடுப்பில் இருக்கும் கத்தியால் என்னைத் தாக்குவான் பேய் பிசாசு போல் சத்தமிட்டபடி இடும்பன்காரி மேல் பாய்ந்து பயங்காட்டித் தப்பலாமே' என்று எண்ணி நிற்கையில் அந்த வழியே ஒருவன் வந்து மீன் வடிவம் போல் சமிக்ஞை செய்தான் இடும்பன்காரி உடனே எழுந்து 'உன் பெயர் என்ன' என்று கேட்க அவன் 'நான் சோமன் சாம்பவன்' என்றான். இடும்பன்காரி தன் பெயரைச் சொன்னான் 'உன்னை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன், நாம் மேற்குத் திசையில் திருப்புறம்பயம் பகைவனின் பள்ளிப் படைக்குப் போகவேண்டும். வா' என்று சோமன் சாம்பவனை அழைத்தான். பழந்தமிழ் நாடடில் போரக்களத்தில் உயிர் துறந்த மகா வீரர்களின் ஞா-பகமாக வீரக் கல் நட்டு கோயில் எடுப்பது மரபு. வெறும் கல் மட்டும் ஞாபகாரத்தமாக நாட்டியிருந்தால் நடுகற் கோயில் என்று வழங்குவர். அத்துடன் ஏதேனும் ஓர் தெய்வத்தின் சிலையை ஸ்தாபித்து ஆலயமாக எழுப்பியிருந்தால் அது பள்ளிப்படை என்று வழங்குவர். திருப்புறம் பயம் என்னும் கிராமத்திற்கு அருகில் அங்கு நடந்த மாபெரும் போரில் உயிர் நீத்த சங்க மன்னர் பள்ளிப்படைக் கோயில் திருப்புறம்பயத்தில் இருந்தது. இந்தக் கோயிலிற்குத் தான் இடும்பன்காரியும், சோமன் சாம்பவனும் செல்கிறார்கள். சோழப் பெருமன்னன் விஜயாலய சோழர் முதுமைக் காலத்தில் திருப்புறம் பயம் என்னும் கிராமப் பிரதேசத்தில் பெரும் போர் நடந்தது. தெற்கே பாண்டியரும், வடக்கே பல்லவரும் வலிமைமிக்கவர்கள். சோழர்களை நெருக்கி வந்தனர் பழையாறைச் சோழ மன்னன் விஜயாலய சோழர் என்பவர், இணையில்லா வீரப் புகழைப் பெற்றவர் அவர் பற்பல யுத்த களங்களில முன்னணியில் நின்று போர் செய்து உடலில் 96 காயங்களைக் கொண்டவர் இதனை 'எண்கொடை தொண்ணூற்றின் மேலுமிரு மூன்று புண் கொண்ட வெற்றிப் புரவலர்' என்றும் 'புண்ணூறு தன்றிரு மேனியிற் பூணாகத் தொண்ணாறு ஆறுக்கமந்தோனும்' என்றும் ஆஸ்தானப் புலவர்களால் பாடப்பட்டவர். இவர் முதுமைப் பிராயத்தில் தன் மகன் ஆதித்த சோழனிற்கு பட்டம் கட்டிவிட்டு ஓய்ந்திருந்தார். இந்தக் காலத்தில் பாண்டியரும் பல்லவரும் பெரும் சண்டை கொண்டு பெரும் போர் நடத்தினர் அத்தருணத்தில் பாண்டியர் வெற்றி கொள்ளும் சந்தர்ப்பம் காணப்பட்டது. பாண்டியர் வெற்றியும் கொண்டனர். சோழ வம்சம் அடியோடு நாசமாகும் என்று ஆதித்த சோழன் அறிந்திருந்தான்.

அப்போது பல்லவர்களின் பெரும் படையுடன் தன் சிறிய சோழப்படையையும் சேர்த்திருந்தான். மூன்று நாட்களாகக் கொடும் போர் நடந்தது. இரத்தக் களமாகவும், கொடுமையின் மையமாகவும் வெற்றிமுரசு கேட்பதற்கு யாவரும் வெறிகொண்டு போராடினர். இருந்தும் பல்லவர் தோல்வியைத் தழுவும் சாத்தியமே தென்பட, எதிர்த்து நிற்க முடியாமல் பின்வாங்க உத்தேசித்தனர். இப்படியான இக்கட்டான சூழ்நிலையில் முது-மையில் தளர்ந்தவரும், உடலில் தொண்ணூறு காயங்களிற்கு உள்ளானவரும், கால்களில் பட்ட கொடிய காயத்தீதால் எழுந்து நடக்க முடியதவருமான விஜயயாலய சோழன் கர்ச்சனையுடன் அங்கு வந்தார். அப்பொழுது போரிற்கு யானையோ, குதிரையோ, போர் வீரர்களோ எதுவும் அல்லாமல் அழிந்துவிட்ட துயர நிலை வெற்றி கொள்ள எந்த சாதகமும் இருக்ககவில்லை. ஆனால் வீராதி வீரனாக விஜயாலய சோழனின் மனத் தைரியம் சோழ நாட்டாரிடம் மிதமிஞ்சி இருந்தது. உடனே 'சோழ நாட்டு சுத்த வீரர்கள் இருவர் இருந்தாற் போதும் யாராவது உயிரோடு இருந்தால் முன்னே வாருங்கள்' என்றான் பேரிற்கு பேர் வந்து நிற்க உடனே தள்ளாடித் தளர்ந்த வயதிலும் மனப் பலம் பெற்றிருக்க, இரு ஆயுதங்களுடன் தன் கைகளில் வாள் ஏந்தி இரு வீரர்களின் தோள்களில் ஏறிக் கொண்டு போர்க்களத்தில் குதித்தார். எதிரிகளிடையே புகுந்து பகைவர்களை வெட்டிக் குவித்தார் பாண்டிய வீரர்கள் பின் வாங்கத் தொடங்கினர். முயலாமையிலும் மனப் பலம் மட்டுமே வெற்றிக்கு ஆதாரம் என்று வீரங் கொண்ட விஜயாலய சோழன் இன்றும் போற்றப் படுகின்றார். எத்தனையோ வழிகள் வாழ்க்கைப் பாதையில் கொட்டிக் கிடந்தும் அது இன்று மனிதர்களின் கண்களில் புலப்படாது சோதனை, வேதனைகளிற்கு உள்ளாகி தம் உயிரை மாய்க்கும் அளவிற்கு மனிதர் மனப் பலம் இழந்து நிற்கின்றனர். இந்தப் பெரும் போரில் ஈடுபட்டவர்கள் அபராஜிதன், கங்க மன்னன் பிரதிவீ-பதி ஆதித்தன் ஆகிய மன்னர்கள். கங்க மன்னன் பிரதிவீபதி செயற்கரும் பல செயல்கள் புரிந்து, பிறகு தன் புகழை அப்போர்க்களத்தில் நிலைநாட்டி, வீர சொர்க்கம் சென்றார். இவனிற்கு திருப்புறம் பயம் என்னும் இடத்தில் பள்ளிப் படைக் கோயில் எடுத்தார்கள்.

இந்தப் புகழ் பெற்ற பள்ளிப்படைக் கோயில் சுந்தர சோழர் ஆட்சிக் காலத்தில் பாழடைந்து, காடுகளால் சூழ்ந்து, நரிகளும், ஆந்தைகளும், கோட்டான்களும் அங்கு குடியிருந்தன. இங்கே இடும்பன்காரியும், சாம்பன் சோமனும் வருகிறார்கள். இவர்கள் அரசமரத்தடியில் நின்று புறப்பபட்டதும் ஆழ்வார்க்கடியான் அரச மரத்தில் நின்று இறங்கி, 'இது என்ன பொல்லாத காலமாக இருக்கிறது பெரிய மர்மகாரியம் நடக்க இருக்கிறதே! இதை நான் தெரிந்து கொண்டே ஆகவேண்டும். சோழ ராட்சியத்திற்கு எதிராக என்ன சூழ்ச்சி நடைபெறுகிறது என்று அறிந்தே ஆக வேண்டும். கடம்பூரிலும் அரை-குறையாக கேட்கவேண்டியதாயிற்று இந்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விடலா-காது உடனே இவர்கள் போகும் இடம் நானும் போய் அவற்றை தெரிந்து கொள்ள வேண்டும்' என்று எண்ணியபடி திருப்புறம் பயம் பள்ளிக் கோயிலை நோக்கி புறப்பட்டார். பின்னர் இருள் சூழ்ந்த நேரமதில் அங்கு வந்து சேர்ந்து அருகிலுள்ள் மண்டபம் மீது ஏறி அமர்ந்து ஒளிந்து கொண்டிருந்தான். அங்கு யாரும் வருவதாகக் காணவில்லை. சுறறுமுற்றும் பார்த்தான்.





தான் செய்த முயற்சிகள் வீண் என்று அலுத்துக் கொள்ளும் தருவாயில் முயற்சி திருவினையாக்கும் என்பது போல இரண்டு மனிதர்கள் அந்தப் பக்கம் வந்தனர். சற்று நேரத்தின் பின் இன்னும் இரண்டு மனிதர்கள் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் எல்லோரும் பேசிக் கொண்டனர். இவர்கள் பேசியது முழுவதும் ஆழ்வார்க்கடியான் காதுகளிற்கு எட்டவில்லை. உடனே அவன் மண்டபத்தில் இருந்து இறங்கி அவர்கள் நிற்கும் இடத்திற்கு அருகாமையில் உள்ள மருத மரத்தின் அருகில் ஒளிந்து கொண்டு, இவர்கள் உரையாடலைக் கேட்க ஆரம்பித்தான் அங்கு வந்தவர்களில் ஒருவன், தன் கையில் உள்ள பையை அவிழ்த்து அதில் உள்ள தங்க நாணயங்களை கொட்டிவிட்டு 'சோழ நாட்டுப் பொக்கிஷ த்தைக் கொண்டே சோழ ராஜ்ஜியத்திற்கு அழிவு செய்யப் போகின்றோம்' என்று சிரித்தான். 'தஞ்சாவூர் இராஜ்ஜஜியத்தின் பொக்கிஷம் இருக்கும் வரை எமக்கு வேண்டிய பொருட்களிற்கு குறைவில்லை. எடுத்த காரியம் நிறைவு பெறும் வரை வெளியில் தெரியக் கூடாது இந்த இரகசியத்தை காக்கும் சக்தி வேண்டும், காரியத்தை முடிக்கும் நெஞ்சுத் துணிவு வேண்டும் இரு காரியங்களையும்ஒரே சமயத்தில முடிக்க வேண்டும் அதனால் நாம் இரு பிரிவாகப் பிரிந்து செயற்பட வேண்டும்' பின்னர், சோம்பன் சாம்பவன் ஒரு நாணயத்தை கையில் எடுத்துப் பார்த்தான். 'ஒரு பக்கம் புலி, ஒரு பக்கம் பனை சோழர்களின் பொன் பழுவேட்டரையர்களின் முத்திரை' என்றான். அங்கு ரவிதாசன் என்னும் மந்திரவாதி, இடும்பன்காரி என்னும் கந்தமாறனின் ஆள், சோம்பன் சாம்பவன் மந்திரவாதியன் கையாள், என்று நான்கு பேர்கள் கூடியிருந்தனர். 'அப்பொழுது சம்புவரையரின் கடம்பூர் மாளிகையில் ஓர் பெ-ரிய விருந்து நடந்தது. பெரிய பழுவேட்டரையர், வணங்காமுடி முனையாளர், மழபாடி மழுவரையர் முதலிய பலர் அதில் கலந்து கொண்டனர். சுந்தர சோழ மகாராஜாவிற்கு உடல் நிலை சரியில்லை என்றும், அவர் அதிக நாட்கள் உயிரோடு இருக்கமாட்டார் என்றும், அவரின் பின் அடுத்து பட்டத்திற்கு வருப-வர் ஆதித்த கரிகாலன் அல்ல மதுராந்தகதேவர் என்றும் முடிவு செய்தனர். அதற்கு மூடு பல்லக்கில் இருந்து வெளிவந்த மதுராந்தகன் தேவன் சம்மதமும் சொன்னான். இதையெல்லாம் நான் அங்கு காவல்காரனாக நின்று கேட்டுக் கொண்டேன்' என்றார் இடும்பன்காரி அதற்கு ரவிதாசன், 'நல்லது பெண் வேஷம் போடும் பராக்ககிரம சாலிக்கு முடி சூடப் போகிறார்கள். நல்லது, சோழ நாட்டிலே குழப்பம் வருவது எமக்கு நல்லது' என்றான் மீண்டும் இடும்பன்காரி, 'இவற்றையெல்லாம் ஒரு மனிதன் கோட்டை மதில் சுவரில் நின்று கேட்டுக் கொண்டிருந்தான். முன் குடுமி வைத்த ஒரு வைஷ்ணவன். இதை விட சின்ன எஜமான் சினேகிதன் வந்தியத்தேவன் அங்கு வந்திருந்தான். இவன் பழுவேட்டரையர் கூட்டத்தவன் அல்ல அவனை வழியனுப்பிவிட்டு நான் என் அத்தையைப் பார்ப்பதற்காக என்று சொல்லி இங்கு வந்தேன்' என்றான். 'காஞ்சியிலும், இலங்கையிலும் எம் எதிரிகள் உண்டு. இவர்களைக் காட்டிலும் எம் பரம எதிரி ஆழ்வார்க்கடியான் திருமலையப்பன். எம்மையும், எம் நோக்கத்தையும் அடியோடு நாசம் செய்யக் கூடியவன். எம் தேவி நந்தினியை அவன் கொண்டு செல்லப் பார்க்கிறான். உங்களில் யாராவது அவனை எங்கே கண்டாலும் கொன்று விடுங்கள். அவன் உயிரோடு இருக்கும் வரை எமக்கு இடையூறு தருவான். அவன் பயங்கர ஆற்றல் படைத்தவன் அவன் யாருடைய ஒற்றன் என்பது தெரியவில்லை. இவனை விட, குடிசையிலும் ஒரு சோ-திடன் இருக்கிறான்.' என்றான் ரவிதாசன். இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஆழ்வார்க்கடியானிற்கு நடுக்கம் பிடித்தது. அந்த நேரம் அவனுக்கு தும்மலும் வந்தது. தும்மலை வாயிற் துணி போட்டு அடைத்தும், தும்மிய சிறு சத்தம் சூழ்ச்சிக் கும்பலின் காதில் கேட்டு விட்டது. உடனே தீப் பந்தத்துடன் அரசமரத்தடியில் ஒருவன் வந்தான். ஆழ்வாரக்கடியான் தலைக்குமேல் ராட்சத வெளவால் தொங்கிக் கொண்டிருந்தது. அதைப் பிடித்து தீப் பந்தம் கொண்டு வந்தவன் முகத்தில் எறிந்து விட்டு காட்டுக்குள் சென்று மறைந்தான்.

---

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நிமலன**

---



## Personal Prayer To The Holy Spirit

Our Mother of Perpetual Help

Holy Spirit Thou make me see every-thing and show me the way to reach my ideal. You who give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everything and confirm once more that I never want to be separated form You no matter how great the material desire may by. I want to be with You and my loved ones in Your prepetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no mater how difficult it may be. Promise to publish this as soon as your favor has been granted. **R.R - R.V**

# அன்பின் தொனி - 610

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

**உமது கற்பனைகளின் பாதையில் என்னை நடத்தும்,**

கர்த்தாவே, உமது பிரமாணங்களின் வழியை எனக்குப் போதியும், முடிவுபரியந்தம் நான் அதைக் காத்துக்கொள்ளு வேன். எனக்கு உணர்வைத் தாரும், அப்பொழுது நான் உமது வேதத்தைப் பற்றிக்கொண்டு, என் முழு இருதயத்தோடும், அதைக் கைக்கொள்ளுவேன். உமது கற்பனைகளின் பாதையில் என்னை நடத்தும், நான் அதில் பிரியமாயிருக்கிறேன். என் இருதயம் பொருளாசையைச் சாராமல், உமது சாட்சிகளைச் சாரும்படி செய்யும். மாயையைப் பாராதபடி நீர் என் கண்களை விலக்கி, உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும். உமக்குப் பயப்படுகிறதற்கு ஏற்ற உமது வாக்கை உமது அடியேனுக்கு உறுதிப்படுத்தும். நான் அஞ்சுகிற நிந்தையை விலக்கியருளும், உம்முடைய நியாயத்தீர்ப்புகள் நல்லவைகள். இதோ, உம்முடைய கட்டளைகள்மேல் வாஞ்சையாயிருக்கிறேன், உமது நீதியால் என்னை உயிர் ப்பியும். கர்த்தாவே, உம்முடைய வாக்கின்படி, உமது தயவும் உமது இரட்சிப்பும் எனக்கு வருவதாக. அப்பொழுது என்னை நிந்திக்கிறவனுக்கு உத்தரவு சொல்லுவேன், உம்முடைய வசனத்தை நம்பியிருக்கிறேன். சத்திய வசனம் முற்றிலும் என்வாயினின்று நீங்கவிடாதேயும், உம்முடைய நியாயத்தீர்ப்புகளுக்குக் காத்திருக்கிறேன். நான் எப்பொழுதும் என்றைக்கும் உமது வேதத்தைக் காத்துக்கொள்ளுவேன். நான் உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறபடியால், விசாலத்திலே நடப்பேன். நான் உம்முடைய சாட்சிகளைக் குறித்து, ராஜாக்களுக்கு முன்பாகவும் வெட்கப்படாமல் பேசுவேன். நான் பிரியப்படுகிற உமது கற்பனைகளின்பேரில் மனமகிழ்ச்சியாயிருப்பேன். நான் பிரியப்படுகிற உமது கற்ப னைகளுக்குக் கையெடுப்பேன், உமது பிரமாணங்களைத் தியானிப்பேன். நீர் என்னை நம்பப்பண்ணின வசனத்தை உமது அடியேனுக்காக நினைத்தருளும். அதுவே என் சிறுமையில் எனக்கு ஆறுதல், உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது. அகந் தைக்காரர் என்னை மிகவும் பரியாசம்பண்ணியும், நான் உமது வேதத்தைவிட்டு விலகினதில்லை. **- சங்கீதம் 119: 33-51**

**கர்த்தாவே, பூமி உமது கிருபையினால் நிறைந்திருக்கிறது**

கர்த்தாவே, ஆதிமுதலான உமது நியாயத்தீர்ப்புகளை நான் நினைத்து என்னைத் தேற்றுகிறேன். உமது வேதத்தை விட்டு விலகுகிற துன்மார்க்கர்நிமித்தம் நடுக்கம் என்னைப் பிடித்தது. நான் பரதேசியாய்த் தங்கும் வீட்டிலே உமது பிரமாணங்கள் எனக்குக் கீதங்களாயின. கர்த்தாவே, இராக்காலத்தில் உமது நாமத்தை நினைத்து, உமது வேதத்தைக் கைக்கொள்ளுகிறேன். நான் உமது கட்டளைகளைக் கைக்கொண்டபடியினால், இது எனக்குக் கிடைத்தது. கர்த்தாவே, நீரே என் பங்கு, நான் உமது வசனங்களைக் கைக்கொள்ளுவேன் என்றேன். முழு இருதயத்தோடும் உம்முடைய தயவுக்காகக் கெஞ்சுகிறேன், உமது வாக்கின்படி எனக்கு இரங்கும். என் வழிகளைச் சிந்தித்துக்கொண்டு, என் கால்களை உம்முடைய சாட்சிகளுக்கு நேராகத் திருப்பினேன். உமது கற்பனைகளைக் கைக்கொள்ளும்படி, நான் தாமதியாமல் தீவிரித்தேன். துன்மார்க்கரின் கூட்டங்கள் என்னைக் கொள்ளையிட்டும், உம்முடைய வேதத்தை நான் மறக்கவில்லை. உமது நீதியான நியாயத்தீர்ப்புகளினிமித்தம், உம்மைத் துதிக்கும்படி பாதிராத்திரியில் எழுந்திருப்பேன். உமக்குப் பயந்து, உமது கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற அனைவருக்கும் நான் தோழன். கர்த்தாவே, பூமி உமது கிருபையினால் நிறைந்திருக்கிறது, உமது பிரமாணங்களை எனக்குப் போதியும். **- சங்கீதம் 119: 52-64**

**தேவரீர் நல்லவரும், நன்மை செய்கிறவருமாயிருக்கிறீர்**

கர்த்தாவே, உமது வசனத்தின்படி உமது அடியேனை நன்றாய் நடத்தினீர். உத்தம நிதானிப்பையும் அறிவையும் எனக்குப் போதித்தருளும், உம்முடைய கற்பனைகளின்பேரில் விசுவாசமாயிருக்கிறேன். நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழி தப்பி நடந்தேன், இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன். தேவரீர் நல்லவரும், நன்மை செய்கிறவருமாயிருக்கிறீர், உமது பிரமாணங்களை எனக்குப் போதியும். அகங்காரிகள் எனக்கு விரோதமாய்ப் பொய்களைப் பிணைக்கிறார்கள், நானோ, முழு இருதயத்தோடும் உம்முடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுவேன். அவர்கள் இருதயம் நிணந்துன்னிக் கொழுத்திருக்கிறது, நானோ, உம்முடைய வேதத்தில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன். நான் உபத்திர வப்பட்டது எனக்கு நல்லது, அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன். அநேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம். உம்முடைய கரங்கள் என்னை உண்டாக்கி, என்னை உருவாக்கிற்று, உம்முடைய கற்பனைகளைக் கற்றுக்கொள்ள என்னை உணர்வுள்ளவனாக்கும். நான் உம்முடைய வசனத் திற்குக் காத்திருக்கிறபடியால், உமக்குப் பயந்தவர்கள் என்னைக் கண்டு சந்தோஷப்படுவார்கள். கர்த்தாவே, உமது நியாயத்தீர்ப்புகள் நீதியுள்ளதென்றும், உண்மையின்படி என்னை உபத்திரவப்படுத்தினீரென்றும் அறிவேன். நீர் உமது அடியேனுக்குக் கொடுத்த உமது வாக்கின்படி, உமது கிருபை என்னைத் தேற்றுவதாக. நான் பிழைத்திருக்கும்படிக்கு உமது இரக்கங்கள் எனக்குக் கிடைப்பதாக, உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி. அகங்காரிகள் என்னைப் பொய்களினால் கெடுக்கப் பார்த்தபடியால் வெட்கப்பட்டுப்போவார்களாக, நானோ உமது கட்டளைகளைத் தியானிப்பேன். உமகுப் பயந்து, உமது சாட்சிகளை அறிந்திருக்கிறவர்கள் என்னண்டைக்குத் திரும்புவார்களாக. நான் வெட்கப்பட்டுப் போகாதபடிக்கு, என் இருதயம் உமது பிரமாணங்களில் உத்தமமாயிருக்கக்கடவது. உம்முடைய இரட்சிப்புக்கு என் ஆத்துமா தவிக்கிறது, உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன். எப்பொழுது என்னைத் தேற்றுவீர் என்று, உம்முடைய வாக்கின்மேல் நோக்கமாய் என் கண்கள் பூத்துப்போகிறது. புகையிலுள்ள துருத்தியைப் போலானேன், உமது பிரமாணங்களையோ மறவேன். உமது அடியேனுடைய நாட்கள் எம்மாத்திரம்? என்னைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கு நீர் எப்பொழுது நியாயத்தீர்ப்புச் செய்வீர்? உம்முடைய வேதத்துக்கு விரோதமாய் அகங்காரிகள் எனக்குக் குழிகளை வெட்டினார்கள். உம்முடைய கற்பனைகளெல்லாம் உண்மையாயிருக்கிறது, அநியாயமாய் என்னைத் துன்பப்படுத்துகிறார்கள், நீர் எனக்குச் சகாயம்பண்ணும். அவர்கள் என்னைப் பூமியிலிராமல் நீக்கிவிடச் சற்றே தப்பிற்று, ஆனாலும் நான் உமது கட்டளைகளை விட்டுவிடவில்லை. உமது கிருபையின்படியே என்னை உயிர்ப்பியும், அப்பொழுது நான் உம் முடைய வாக்கின் சாட்சியைக் காத்து நடப்பேன். கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்தி ருக்கிறது. உம்முடைய உண்மை தலைமுறை தலைமுறையாக இருக்கும், பூமியை உறுதிப்படுத்தினீர், அது நிலைத் திருக்கிறது. **- சங்கீதம் 119: 65-90**

*தொடரும்...*



**ஜீவன் முக்தி (பகுதி) 114**

## கேள்வி - பதில்

*(சென்ற வார தொடர்ச்சி...)*

ஒரு இருபத்தொரு நாட்களது, கனவிலும், மனம் உங்களுக்குள்ளேயே திருப்தியோடு இருக்க முடியுமானால், அப்பொழுது உங்களுடைய தனி உணர்வு பிராரப்தத்தை விட பலம் வாய்தது என்று தெரிந்து கொள்ளலாம்.
அப்பொழுது பிரம்மச்சரிய வாழக்கைக்கு நீங்கள் முழுமையான தகுதியுடையவர்.
உடலாலும், உணர்வாலும் இருபத்தியொரு நாட்கள் மட்டும் இன்னொரு துணையைத் தேடாமல், ஒரு மனிதனால் இருக்க முடியுமானால், அவர் பிரம்மசரிய வாழ்க்கைக்குள்யே நுளையலாம்.

அப்போது உங்களால் உடலாலும் பிரம்மச்சரிய உணர்வோடு இருக்க முடியும். மனதாலும் அதே உணர்வோடு இருக்க முடியும்.

இதில் நாம் புரிந்துக் கொள்ள வேண்டிய விஷயம். உடலால் இன்னொரு துணையைத் தேடாமல், தன்னைத் தானே அடக்கிவிட முடியும். ஆனால் யாராலும் கனவை அடக்க முடியாது.
இருபத்தியொரு நாட்கள், உடலும உணர்வும் அந்த மாதிரி தனி உணர்வோடு, அமைதியாக தனக்குள்ளேயே இல்லை என்றால், அப்பொழுது உங்களுடைய பிரார்ப்தம், உங்கள் தனி உணர்தை விட பலம் வாய்ந்தது என்று அர்த்தம்.
அப்பொழுது நீங்கள் கிரஹஸ்த வாழ்க்கைக்குள் சென்று பிரார்ப்தத்தை தேய்ப்பதன் மூலமாக, உங்களை மெது மெதுவாக சூட்சுமமாக மாற்றி கொள்வதன் மூலமாகத்தான், அந்த பிரம்மச்சரியம் என்ற மிக உயர்ந்த நிலைக்குள்ளே நிறைய முடியயும், கலக்க முடியும்.

இதைக்கண்டு பிடிப்தற்காக செய்யப்படும் நுட்பம் பூர்ணாபிஷேகம். இதை யார் வேண்டுமானாலும் முயற்சி செய்து பார்க்கலாம்.

இருபத்தியொரு நாட்கள் உங்களுடைய உடலும், உணர்வும் இன்னொரு உடலைத் தேடாத, நிலைக்கு எடுத்துக் கொண்டு போகிற பயிற்சியைத்தான், பூரணாசிஷேகம் என்று சொல்கிறோம்.

இதே பயிற்சியை ஒன்பது மாதங்களும் செய்யலாம்.
ஒன்பது மாதங்கள் உங்கள் பிராரப்தத்தின் வேகத்தை அழிப்பது. பிராரப்தத்தின் வேகத்தை கரைப்பதுதான் பூரணாபிஷேகம். இந்த முயற்சி உங்களின் கேள்விக்குப் பதிலைத்தரும்.

ஞானத்திற்குப் பிரமச்சரியம்தான் தீர்வு என்று ராமகிருஷ்ணர் சொல்கிறார். ஓஷோவோ சத்தியமாக இல்லை என்று சொல்கிறார். அவர்கள் சொல்லும் பாதையில் எது என் பாதை என்று எப்படித் தெரிந்து கொள்வது?
இன்றைய காலகட்டத்தில் ஆன்மீக சாதகர்கள் மத்தியில் இருக்கும் பெரிய குழம்பம்.

ஓஷோவிற்கும் இராமகிருஷ்ணருக்கும் நடுவில் இருக்கும் பெரிய குழப்பம். அவருடைய அமுத மொழிகளில் வார்த்தைக்கு வார்த்தை ஸ்ரீகாமினி காஞ்சனத்தியாகம் என்று சொல்கின்றார்.

ஓஷோவோ 'பிரமச்சரியமே சாத்தியம் இல்லை' என்கிறார். எவ்வளவு வேண்டுமானாலும் முயற்சி செய்து பார்த்துக்கொள். பிரமச்சரியம் சாத்தியமே இல்லை என்கிறார்.

பிராரப்தம் என்றால், இந்த உடலை அமைக்கும் பொழுதே எடுத்து வரும் கர்ம வினைகள் அதில் குறிப்பிட்ட அளவு காமம், குறிப்பிட்ட அளவு கோபம், குறிப்பிட்ட அளவு கோபம், குறிப்பிட்ட அளவு பயம் இதெல்லாம் கவந்துதான் இந்த உடலை அமைக்கிறீர்கள். அப்படி அதைத்தவர்களைத்தான் சுத்த சத்வ சரீர அவதார புருஷர்கள்' என்று சொல்வோம்.
ஆனால் சாதாரண மனிதர்கள் என்ன செய்கிறார்கள்.?
கொஞ்சம் காமம், கொஞ்சம் பயம், கொஞ்சம் கவலை கொஞ்சம் கவனத்தேவை, கொஞ்சம் பொறாமை, கொஞ்சம் அகங்காரம், கொஞ்சம் அதிருப்தி என்ற இந்த ஏழு உணர்வுகளையும் கலந்துதான் உடலைச் செய்வார்கள்.
அப்பொழுதுதான் அவர்களுடைய உடல் ஓடும். அதிருப்தி இருந்தால்தான், இன்னொரு உடலை தேடி நாடும். பயம் இருந்தால்தான் தன்னைக் காத்துக்கொளும், கவலை இருந்தால்தான், தயங்காமல் ஒடிக்கொண்டே இருக்கும், எதையாவது திட்டம் தீட்டும். அன்பு தேவை இருந்தால்தான் மற்றவர்களுடன் இணைந்து வாழும்.

இந்த மாதிரிக் குணங்கள் இருந்தால்தான், சமுதாயத்தில் வாழ முடியும் என்பதனால்தான், இதையெல்லாம் சேர்த்து, சேர்த்துத்தான் உடலை அமைப்பீர்கள்ட எந்தப் பிராரப்தத்தாலே உடலை அமைத்தீர்களோ? எவ்வளவு காமத்தை அள்ளி வைத்தீர்களோ? இல்லை கிள்ளி வைத்தீர்களோ? என்று, நீங்கள்தான் கண்டுபிடிக்க வேண்டும்.

சிலநேரத்தில் காமத்தைக் கிள்ளி வைத்து உடலைச் செய்திருப்பீர்கள். சில நேரத்தில் அள்ளி வைத்தும் உடலைச் செய்திருப்பீர்கள்.
எந்த மாதிரி உடலைச் செய்திருக்கின்றீர்கள்? என்று கண்டுபிடித்துவிட்டிர்களென்றால் பிரமச்சரியமா? சன்யாசமா? என்பதை இன்னொருவர் சொல்ல வேண்டியதில்லை. தாங்களே முடிபு செய்யலாம்.

ஆழமாகப் பார்த்தால் புத்திசாலித் தனத்தோடு தைத்ரிய ரேஜஸை ஊர்த்துவ ரேஜஸாக மாற்ற முடிவெடுக்கும் ஒவ்வொருவராலும் அது முடியும்.

***(தொடரும்...)***

----

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.

எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

***பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்***

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080

# மரண அறிவித்தல்



**தோற்றம்:**
**21-07-1947**

**மறைவு:**
**04-05-2021**

# திரு. கந்தையா அன்னலிங்கம்

**(கல்வியங்காடு - யாழ்ப்பாம்)**

**யாழ்ப்பணம் கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கந்தையா அன்னலிங்கம் அவர்கள் கடந்த 04-05-2021 செவ்வாய்க்கிழமையன்று கல்வியங்காட்டில் இறைவனடி சேர்ந்தார்.**


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - பருவதம் ஆகியோரின் மருமகனும்,
கமலாதேவியின் ஆருயிர்க் கணவரும்,
கேசவன் (கனடா), தர்சி (கனடா), கீர்த்தி (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையாரும்,
துஷ்யந்தி (கனடா), ஆனந்தராஜா (கனடா), குமரன் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமனாரும்,
காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி (பேபி), நடராஜா (வெள்ளை அப்பு), மற்றும் நாகேஸ்வரி (பூமலர் - கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும்,
ரோஷானி, ரோஷான் (கனடா), கஜினா, டிலக்ஷி (கனடா) தேனு, எழிலன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்வியங்காட்டில் நடைபெறும்.**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

**தகவல்: கேசவன் (மகன் - கனடா)**
**தொடர்புகளுக்கு:**
**கேசவசன் (கனடா): (647) 618-1280**
**ஜெயகுலராஜா (இலங்கை): 94776319553**










உதயம் 1309 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 7, 2021

# ஒன்றாறியோ கன்சர்வேட்டிவ் அரசானது, தமிழ் மக்களோடு துணை நின்று செயற்படுகிறது என்பதை மீண்டுமொரு தடவை நிரூபித்துள்ளது


## ஒன்றாரியோ எம்பிபி விஜய் தணிகாசலம் தெரிவிப்பு




தமிழின அழிப்பினை அங்கீகரித்து, தமது இனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பால் தமிழர்கள் அனுபவித்துவரும் உளவியல் பாதிப்புகளையும் ஏற்றுக்கொண்டதன் மூலம் ஒன்றாறியோ மாநிலத்தின் முதல்வர் திரு. டக் ∴போர்ட் அவர்கள் தான் ஒரு சிறந்த தலைவர் என்பதை நிருபித்துள்ளார். அதே-வேளையில், ஒன்றாறியோ கன்சர்வேட்டிவ் அரசாங்கமானது, அநீதிகளை எதிர்த்துப் போரிடுவதிலும், கனடாவைத் தாயகமாக ஏற்றுக்கொண்ட தமிழ் மக்களின் பக்கம் துணை நிற்பதிலும் என்றும் உறுதியுடன் செயற்படும் என்பதை மீண்டுமொருமுறை நிறுவியுள்ளது.

இதேவேளையில், குயின்ஸ் பார்க்கிலுள்ள ஒன்றாறியோ சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களுக்கு நடைபெற்ற அநீதியினை அறிந்து சட்டமூலம் 104இற்கான தமது வலுவான ஆதரவை வழங்கியுள்ளனர். இதுதொடர்பான விவாதத்தின்போது, தமது தொகுதிகளிலுள்ள தமிழ் மக்களின் கடின உழைப்பு, ஒன்றாறியோ சமூகத்துக்கான அவர்களின் பங்களிப்பு தொடர்பாக பல சட்டமன்ற உறுப்பினர்களும் விபரித்திருந்தனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஒன்றாரியோ மாகாண சட்ட மன்றத்தின் ஸ்காபுறோ ரூஜ்பார்க் தொகுதியின் உறுப்பினர் விஜய் தணிகாசலம் தெரிவித்துளளார். *(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)*




# ஒன்றாறியோவில் மே மாத இறுதிக்குள் முதற்தடவையாக கோவிட் – 19 தடுப்பூசி 65 சதவீத வளர்ந்தோர்களுக்கு போடுவதை எமது அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது

## ஒன்றாரியோ மாகாண சுகாதார அமைச்சர் கூறுகின்றார்



ஒன்றாறியோ, மே மாத இறுதிக்குள் கோவிட்-19 க்கு எதிரான முதல் தடவை ஏற்றப்படும் ஊசிகள் 65 சதவீத வளர்ந்தவர்களுக்கு தடுப்பூசி போடுவதை நோக்கமாகக் கொண்டு எமது அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. மேலும், தடுப்பூசி ஏற்றப்படும் மருந்தகங்களின் எண்ணிக்கையை உயர்த்துவதன் மூலமும், ரொரன்ரோவில் உள்ள தொற்று பாதிப்பு அதிகம் உள்ள (ஹொட் ஸ்பொட்) பகுதிகளின் நடமாடும் மொபைல் கிளினிக்குகளை அனுப்புவதன் மூலமும். 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஐந்து மில்லியன் ஒன்றாரியோ மக்கள் எதிர்வரும் ஜுன் மாதத்திற்கு முன்னர் தடுப்பூசிகளைப் பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன இந்த திட்டத்தின்படி, ஒரு மாதத்திற்குள் வாராந்தம் 940,000 ∴பைசர் தடுப்பூசிகள் எமது மாகாணத்தில் நிறைந்திருக்கும் என்று என்று மாகாணத்தின் சுகாதார அமைச்சர் கிறிஸ்டின் எலியட் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்தார்.
*(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)*

# தமிழின அழிப்பு தொடர்பாக அறிவியல் வாரம் மசோதாவை ஆதரித்து உரையாற்றிய ஒன்றாரியோ எதிர்க் கட்சித் தலைவர் அன்றியா ஹோவர்த்



கனடா ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை 6ம் திகதி சமர்ப்பிக்கப்பெற்ற இலங்கையின் இன அழிப்பு தொடர்பான அறிவியல் வாரம் என்னும் மசோதாவை ஆதரித்து ஒன்றாரியோ மாகாண சட்ட மன்றத்தின் பிரதான எதிர்க் கட்சியான புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவி சிறப்பான ஓர் உரையை ஆற்றினார்.
*(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)*

# இணையவழித் தொடர்பைப் பெறமுடியாத மாணவர்களின் குடும்பங்களுக்கு அதன் மாதக் கட்டணத்தையும் எமது அரசு செலுத்தி அவர்களின் கல்வி நடவடிக்கைகளில் அக்கறை கொண்டுள்ளோம் – பல்லின ஊடகங்களுடனான சந்திப்பில் ஒன்றாரியோ கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(ஸ்காபுறோவிலிருந்து ஆர்.என். லோகேந்திரலிங்கம்)

ஒன்றாறியோ அரசாங்கம் எதிர்வரும் 2021-22 கல்வி ஆண்டுக்கான பொதுக் கல்வியை முன்னேற்றுவதற்கும் மாணவர்களைப் பாதுகாப்பதற்கும் 2 பில்லியன் டாலருக்கும் அதிகமான புதிய நிதி ஒதுக்கீட்டை வழங்கி வருகிறது. இந்த நிதி ஒதுக்கீட்டில் கோவிட் -19 க்கு தாக்கத்தைக் குறைக்கவும் அதிலிருந்து வெற்றியடைவும் 6 1.6 பில்லியனுக்கும் அதிகமான வளங்களும் ஆளணியும் இணையாக அமைக்கப்பெற்றுள்ளன., தற்போதுள்ள தொற்றுநோய்க்கு எதிராக போராடும் வகையில் மாணவர்களின் கற்றல் மீட்பு மற்றும் புதுப்பித்தலை ஆதரிப்பதற்கான தேவைகளுக்கு 85.5 மில்லியன் டாலர் நிதி ஒதுக்கீடும். வகுப்பறைக் கல்வியை இடையில் நிறுத்திய வண்ணம் இணைய வழி கற்றலுக்குச் செல்லும் மாணவர்களில் வசதியற்ற மாணவர்களுக்கு மடிக்கணனி மட்டுமன்றி, இணையவழித் தொடர்பைப் பெறமுடியாத குடும்பங்களுக்கு அதற்குரிய மாதாந்தக் கட்டணத்தையும் எமது அரசாங்கம் செலுத்துகின்றது. இந்தவகையான நிதி ஒதுக்கீடும் மாணவர்களுக்கான வாய்ப்புக்கள் மற்றம் வசதிகள் மற்றம் பாதுகாப்பு தொடர்பான ஏற்பாடுகளை இதுவரை ஒன்றாரியோ எந்த அரசாங்கமும் செய்து கொடுக்கவில்லை. இணையவழித் தொடர்பைப் பெறமுடியாத மாணவர்களின் குடும்பங்களுக்கு அதற்குரிய மாதாந்தக் கட்டணத்தையும் எமது அரசாங்கம் செலுத்தும் அளவிற்கு நாம் அவர்களின் கல்வி நடவடிக்கைகளில் அக்கறை கொண்டுள்ளோம் என்று நான் கூறுவேன்



இவ்வாறு தெரிவித்தார் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ்சே தெரிவித்தார்
*(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)*

# ‘தமிழின அழிப்பு அறிவியல் வாரம்’ மசோதாவை ஆதரித்து உரையாற்றிய ஒன்றாரியோ ஆளும் கட்சி உறுப்பினர் அரிஸ் பாபிகியன்



கனடா ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை 6ம் திகதி சமர்ப்பிக்கப்பெற்ற இலங்கையின் இன அழிப்பு தொடர்பான அறிவியல் வாரம் என்னும் மசோதாவை ஆதரித்து ஒன்றாரியோ மாகாண சட்ட மன்றத்தின் ஆளும் கட்சியின் உறுப்பினர் திரு அரிஸ் பாபிகியன் ஒரு உரையை ஆற்றினார்.
*(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)*




# மாங்குளம் உயிரிழை அமைப்பின் பயனாளி மனேறஞ்சிதராசாவின் மகனுக்கு வட்டு – இந்து வாலிபர் சங்கம் புதிய துவிச்சக்கர வண்டியை வழங்கியது



முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளத்தில் அமைந்துள்ள முள்ளம் தண்டு வடம் பாதிக்கப்பட்ட உயிரிழை அமைப்பின் பயனாளியான மனேறஞ்சிதராசாவின் மகன் தருண் அவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக துவிச்சக்கர வண்டி ஒன்றினை தந்துதவுமாறு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்திடம் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இன்றைய தினம் ரூபா 22,250 பெறுமதியில் புதிய துவிச்சக்கர வண்டி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. இங்கே காணப்படும் படத்தில் மகன் தருண் தனது பெற்றோரோடு சேர்ந்து நிற்பதைக் காணலாம் *(மன்னார் செய்தியாளர்)*